ஓம்

# சைவநீதி

# SAIVANEETHI

கனடா இந்து மாமன்றம்
CANADA HINDU MAAMANTRAM

BI 048



ஈழத்துத் திருத்தலம்
காரைநகர் சிவன் கோவில்
(ஈழத்துச் சிதம்பரம்)

பொங்கல் விழா
2008


HOMELIFE
HIGHER STANDARDS
HomeLife
Future Realty Inc.
Realtor Member
Buy or Sell With Expertise
- Selva Vettyvel
உங்கள் எதிர்காலம் ஒரு தொலைநோக்கில்
Securing Future
வளமோடு வாழ்ந்திட
Investing
முதலிட
Selling
விற்க
Buying
வாங்க
திட்டமிட்ட வாழ்வின்
உயர்வான வெற்றிக்கு
ஏணிப்படிகளாய் நாம்
Selva Vettyvel
Homelife/Future Realty Inc.
262 MARKHAM ROAD, SCARBOROUGH, ON. M1J 3C5
Each Office is Independently owned and operated

# சைவநீதி ~ தை 2008

## வணக்கம். வருக! இதுவே நுழைவாயில்! சென்று பொருள் கொள்க!

## பொருட் பதிவேடு


| இல. | பொருள் | தருநர் | பக்கம் |
|---|---|---|---|
| 1. | பொருளடக்கம் | ...... | 1 |
| 2. | பஞ்சபுராணம் | ...... | 2-3 |
| 3. | தலைவர் செய்தி | திரு.தம்பையா சிறிபதி | 4 |
| 4. | செயலாளர் செய்தி | திரு.வே.நந்தீஸ்வரர் | 5 |
| 5. | மலராசிரியர் அறிக்கை | திருமதி.மனோன்மணி தனபாலசிங்கம் | 6 |
| 6. | ஈழத்துச் சிதம்பரம் | திரு.தி.விஸ்வலிங்கம் | 7-15 |
| 7. | சாந்தலிங்க சுவாமிகள் | டாக்டர் சண்.சண்முகவடிவேல் | 16 |
| 8. | Chidambaram Temple | Dr.Shan A.Sanmugavadivel | 17-18 |
| 9. | தைப்பொங்கல் | கவிநாயகர் வி.கந்தவனம் | 19-21 |
| 10. | சைவம் காத்த மங்கையர்கள் | கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி | 22-23 |
| 11. | இரு பரமஹம்சங்கள் | திருமதி சகிதேவி கந்தையா | 24-28 |
| 12. | Love Everlasting | Mr.Kumar Punithvel | 29-30 |
| 13. | நல்ல மனமுண்டாம் | திருமதி மனோன்மணி சண்முகதாஸ் | 31-37 |
| 14. | குறைகள் தீர இறையே வருக! | திரு.கனக மனோகரன் | 38 |
| 15. | சைவத்தில் ஐயப்பன் | டாக்டர் இ.லம்போதரன் | 39-42 |
| 16. | இயற்கையோடு இசைந்த வாழ்வு | டாக்டர் தி.திவாகரன் | 43-45 |
| 17. | சைவ உலகம் வணங்கிப் போற்றிய பஞ்சகோபுரங்களின் மௌன ஞான ஒளி | திரு.தி.சிவயோகபதி | 46-49 |
| 18. | மாணவர் பகுதி ஆக்கங்கள் | செல்வன் நிராகுலன் புவனேந்திரா<br>செல்வி அனுஜா இந்திரகுமார்<br>செல்வி சாயி ஞானசேகரன்<br>செல்வி தீபனா தேவதாஸ்<br>செல்வி வித்யா சிவகுமாரன் | 50-54 |
| 19. | ஆசாரம் - ஆரோக்கியம் - ஆனந்தம் | திரு.முருகவே.பரமநாதன் | 55-58 |
| 20. | திருவள்ளுவர் ஆண்டு | திரு.மு.க.தமிழேந்தி | 59-63 |
| 21. | Philosophy of Sivayoga Swamy | Dr. K. Ganesalingam | 64-66 |
| 22. | என்னைக் கவர்ந்த திருமுறைகள் | திருமதி நீலா நகுலேசபிள்ளை | 67-71 |
| 23. | மானிடப் பிறவி வாழ்வாங்கு வாழ்வது எப்படி? | திரு.சதா விவேகானந்தன் | 72-74 |
| 24. | புத்தியுடன் பகுத்தறிவும் கலந்த ....... - ஸ்ரீ நாராயண மந்திர் | திருமதி சரோ வர்ணன் | 75-79 |
| 25. | ஈந்தவரே வாழ்ந்தவர் | திரு.கா.கணேசதாசன் | 80-81 |
| 26. | ஔவையார் அருளிய சைவ உண்மைகள் | திரு.த.பிரதீஸ்வரன் | 82-83 |
| 27. | விபூதியின் மகிமை | திரு.ச.சதானந்த சர்மா | 84 |
| 28. | சைவ சமயத்தின் மகத்துவம் | சிவத்திரு சிவபாலன் | 85-86 |
| 29. | இறைவியும் வடிவங்களும் | திருமதி அமிர்தி புவனேந்திரா | 87-88 |
| 30. | நன்றிக் கல்சம் | | 89 |

ஓம்

# ஸ்ரீகௌரி மங்கள சேவை

அனைத்து இந்து மத கிரியைகளுக்கும்
கனடிய திருமண பதிவு அதிகாரி, இந்து மதகுரு

**சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமார குருக்கள்**

(ஐயாமணி) புங்குடுதீவு-10
ஸ்காபரோ ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலய பிரதம குரு

* திருமணம்
* திருமணப் பதிவு
* கடைதிறப்பு வைபவம்
* புண்யாக வாசனம்
* பூப்புனித நீராட்டுவிழா
* பூமாலை
* ஆண்டாள் மாலை
* சடைநாகம்
* தலை நகை முழுவதும்



* முத்து மணவறை
* தலைப்பாகை
* பந்தல் அலங்காரம்
* கல்யாண பூசைப் பொருட்கள்
* முத்துச் சப்பரம்
* ஆலயத் திருவிழா
* ஆலய வைபவங்கள்

ஆகிய அனைத்துக்கும் எப்போதும் எம்முடன்
தொடர்புகொள்ளுங்கள் - **Tel: 416 266 3333**

**628 E Birchmount Road, Scarborough, Ontario. M1K 1P9**

ஸ்காபரோ ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலய
தொலைபேசி இலக்கம் 416 291 8500

உ

விநாயகர் துதி



விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து.

## பஞ்சபுராணங்கள்

### தேவாரம்

ஊனாகி உயிராகி யதனுள் நின்ற
உணர்வாகிப் பிறவனைத்தும் நீயாய் நின்றாய்
நானேதும் அறியாமே யென்னுள் வந்து
நல்லனவும் தீயனவும் காட்டா நின்றாய்
தேனாருங் கொன்றையனே நின்றி யூராய்
திருவானைக் காவிலுறை சிவனே ஞானம்
ஆனாயுன் பொற்பாதம் அடையப் பெற்றால்
அல்ல கண்டங் கொண்டடியேன் என்செய்கேனே.



### திருவாசகம்

உம்பர்கட் கரசே ஒளிவற நிறைந்த
யோகமே ஊற்றையேன் தனக்கு
வம்பெனப் பழுத்தென் குடிமுழுதாண்டு
வாழ்வற வாழ்வித்த மருந்தே
செம்பொருட் டுணிவே சீருடைக் கழலே
செல்வமே சிவபெரு மானே
எம்பொருட் டுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

### திருவிசைப்பா




நீறணி பவளக் குன்றமே நின்ற
நெற்றிக்கண் ணுடையதோர் நெருப்பே
வேறணி புவன போகமே யோக
வெள்ளமே மேருவில் வீரா
ஆறணி சடையெம் அற்புதக் கூத்தா
அம்பொன் செய் அம்பலத் தரசே
ஏறணிகொடி எம்மீசனே உன்னைத்
தொண்டனேன் இசையுமா றிசையே.

திருப்பல்லாண்டு



தாதையைத் தாளற வீசிய சண்டிக்கிவ்
அண்டத் தொடு முடனே
பூதலத் தோரும் வணங்கப் பொற்கோயிலும்
போனகமும் அருளிச்செய்
சோதிமணிமுடித் தாமமும் நாமமும்
தொண்டர்க்கு நாயகமும்
பாதகத் துக்குப் பரிசு வைத்தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

பெரியபுராணம்

மாசிலா மணி திகழ் மேனிமேல்
பூசுநீறு போல் உள்ளும் புனிதர்கள்
தேசினால் எத்திசையும் விளக்கினார்
பேச ஒண்ணாப் பெருமை பிறங்கினார்.

திருப்புகழ்



அல்லி விழியாலும் முல்லைநகை யாலும்
அல்லற்பட ஆசைக் கடலீயும்
அள்ள இனிதாகி நள்ளிரவு போலும்
உள்ளவினை யாரத் தனமாரும்
இல்லும் இளையோரும் மெல்ல அயலாக
வல்லெருமை மாயச் சமனாரும்
எள்ளி எனத்தாவி கொள்ளைகொளும் நாளில்
உய்யஒரு நீபொற் கழல் தாராய்
தொல்லை மறைதேடி இல்லை எனும்நாதர்
சொல்லும் உப தேசக் குருநாதா
துள்ளிவிளை யாடும் புள்ளி உழைநாண
வெள்ளிவன மீதுற் றுறைவோனே
வல்ல சுரர்மாள நல்லசுரர் வாழ
வல்லைவடி வேலைத் தொடுவோனே
வள்ளிபடர் சாரல் வள்ளிமலை மேவும்
வள்ளி மணவாளப் பெருமாளே.

திருச்சிற்றம்பலம்

# தலைவரின் செய்தி

## ஆலயங்கள் கொலைக்களம் ஆகலாமா?

எனது இந்தச் செய்தியின் நோக்கம் அரசியல் பேசுவது அல்ல. அரசியல் ஆலயங்களுக்குள் நுழையக் கூடாது என்பதே இச் செய்தியின் நோக்கம். அப்படி அரசியல் ஆலயங்களுக்குள் நுழைந்தாலும் அது மனிதவள மேம்பாட்டுக்காக இருக்க வேண்டுமேயன்றி, சமய நெறி முறைகளைத் தகர்த்து, இறை வழிபாட்டுத் தத்துவங்களையே தகர்ப்பவனவாக அமையக் கூடாது என்பதுதான்.

அண்மையில் இலங்கையில் - கொழும்பில் ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயத்துள் நிகழ்ந்த மனிதப் படுகொலை ஒரு அரசியல்வாதிக்கு நேர்ந்த மரணம் அல்ல; அறம் கூறும் தெய்வ வழிபாட்டுக்கும் சமய நெறிகளுக்கும் நிகழ்ந்த மரணம் என்றுதான் சொல்ல வேண்டும். இறை வழிபாட்டுத் தலங்களில், மனிதக் கொலை நிகழ்ந்தது இதுவல்ல முதற் தடவை. ஆனால், இது தொடர்ந்து கொண்டிருப்பது நெறியோடு வாழும் மனித மனங்களுக்குக் கஷ்டமாகவும், கவலையளிப்பதாகவும் உள்ளது.

சில கொலைகள், தவறுதலாக எதிர்பாராத வகையில் நடந்தேறிவிடுகின்றன. எனினும் கொலை கொலைதான். எந்தக் கொலையையும் நியாயப்படுத்த முடியாது. ஆனால், எத்தனையோ கொலைகள் முன்னேற்பாட்டுடன், திட்டமிடப்பட்ட கொலைகளாக நடக்கின்றன. ஆண்டவன் சந்நிதானம் ஒன்றே இதுவரை எவரும் பயமின்றி நுழையக்கூடிய இடமாக இருந்தது. ஏனெனில், வழமையாக அதற்குள் செல்லும் தீயவர்கள்கூட தம் நியாயமற்ற தம் செய்கைகளைத் தற்காலிகமாகவாவது வெளியில் விட்டுவிட்டே ஆலயத்துக்குள் இறை வழிபாட்டுக்காகச் சென்றனர். ஆனால், இன்று கயமைக்கு மிகப் பாதுகாப்பான இடம் ஆலயம்தான் என்று சொல்லும் அளவுக்கு அங்கு நியாயமற்ற நிகழ்வுகள் நடந்தேறிக்கொண்டிருக்கின்றன. அறநெறிக்கு இருப்பிடமான ஆலயங்களை கசாப்புக் கடைகளாகத் தேர்ந்தெடுப்பது, கீழ்த்தரமான செய்கைகளுக்கு கூடாரங்களாக மாற்ற முனைவது இறைவழிபாட்டிற்குக் குந்தகம் விளைவிப்பது மட்டுமல்ல; இறைவழிபாட்டில் நம்பிக்கையினையே இல்லாமல் செய்வதும், மென்மேலும் வன்செயல்களை உருவாக்குவதற்கு வடிகால்கள் அமைப்பதுமாகவும் முடியும்.

இதுபோன்ற அறிவுறுத்தும் செய்திகளை, இதைவிட ஆணித்தரமாக ஏற்கனவே பலர் பல தடவைகள் சொல்லியிருந்தாலும், ஒவ்வொரு இந்துமத அமைப்பும் இப்படியான வேளைகளில் சொல்ல வேண்டியது அதன் தலையாய பணிகளில் ஒன்றாகும். எனவேதான், கனடா இந்து மாமன்றமும் தனது ஆதங்கத்தையும், கவலையையும், மன உளைச்சலையும் இச்செய்தி மூலமாகச் சொல்லியுள்ளது.

நன்றி.

என்றும் பணிவுடன்,

தம்பையா ஸ்ரீபதி.

# ஸ்ரீ கணேஷ துர்க்கா தேவஸ்தானம்

# SRI GANESHA DURGA TEMPLE OF MISSISSAUGA





தேவஸ்தானம் திறந்திருக்கும் நேரம் வாரத்தில் ஏழு நாட்களும்

காலை 9.00 மணிமுதல் பகல் 1.00 மணிவரை
மாலை 6.00 மணிமுதல் - 9.00 மணி வரை

## பூஜை நேரங்கள்

காலை : 10.00 மணி
பகல் : 12.00 மணி
மாலை : 7.00 மணி

விசேட தினங்களில் பூஜை நேரம் மாற்றி அமைக்கப்படும்.

**ஆலயத்தில் திருமணங்கள், கணபதி ஹோமம், நவக்கிரக சாந்தி, சர்ப்ப சாந்தி, பிதிர் தர்ப்பணம் என்பவற்றை நிறைவேற்ற ஒழுங்குகள் செய்து தரப்படும். மேலதிக விபரங்களுக்கு ஆலயத்துடன் தொடர்புகொள்ளுங்கள்.**

தொடர்புகளுக்கு:
**ஸ்ரீ விஜயலெட்சுமி வாசா அதிபர், சிவாகம கிரியா பூஷணம் சிவஸ்ரீ பஞ்சாட்சர கிருஷ்ணராஜக் குருக்கள் (ராஜன் குருக்கள்)**
**(கனடிய திருமணப் பதிவு அதிகாரி, இந்து மதகுரு, புங்குடுதீவு –10ம் வட்டாரம்)**
**(ஆலயப் பிரதம குரு, ஆலய ஸ்தாபகர், முதல்வர், அறங்காவலர் சபை)**

**7220 Tranmere Drive, Mississauga, On., L5S 1L6**
Tel: 905 405 0011/ 905 501 0011
ganeshadurga@hotmail.com

# SECRETARY'S MESSAGE

*I take great pride in pride in addressing all of you on behalf of Canada Hindu Maamantramon this festive pongal celebration. First and foremost, I would like to Send our warmest pongal greetings to all of you on this important day. May you all live happily, peacefully and with good fortunes throughout the year.*

*Our association was inaugurated in July 1994 with the primary goal of promoting Tamil heritage and saiva religious values to our younger generation and also to take part in multicultural activities of the City of Toronto. We have been organizing and conducting youth contests, Sarkkarai Pongal cultural show and publishing " saiva neethee" journal annually.*

*As you are aware, our kids are living in western soil and are at the crossroads in their lives. The decisions we make now will yield fruits for the rest of their lives. Our vision is to focus on our saiva youth's future in Canada since they are the very individuals who are going to preserve saivaism in Canada.*

*It is very important to give an opportunity for our saiva youths to take part in our activities and find their views and their vision. This year we plan to form the Saiva youth council soon in order to give an opportunity for them. We sure parents will give encouragements to their kids to join in this council.*

*On behalf of Canada Hindu Maamantram , I take this opportunity to thank all the participants in our kids contest as well as in the sarkkarai pongal cultural show for their wonderful energy and enthusiasm. WE would also thank our guest Mr & Mrs Ilayaparathi for taking the time in attending and promoting this event. Finaly I would like to thanks the parents and the audience for their support and contribution towards this event.*

*Wishing you all a Happy Pongal and a Happy New Year.*

*V. Nantheeswarar*
*Secretary*

கனடா இந்து மாமன்றம் வழங்கும்
சர்க்கரைப் பொங்கல் விழா
சிறப்புற

# தமிழர் செந்தாமரை

வாழ்த்துகிறது!

**Tel: 905 471 0076**
**416 707 6262**
**416 839 0904**
**Fax: 905 470 7480**

# தமிழர் செந்தாமரை

ஆசிரியர்: கனக அரசரத்தினம்

உ

# மலர் ஆசிரியரின் செய்தி

சைவநீதி மலரின் அன்பர்களே! வாசகர்களே! ஆதரவாளர்களே!
எல்லோருக்கும் அன்பு கனிந்த வணக்கம்.

காலச்சக்கரம் சுழன்றோடிக்கொண்டிருக்கிறது. அதில், நாமும் சுழலத்தான் வேண்டும். 2007ஆம் ஆண்டு விடை பெற்றுச் செல்ல, 2008ஆம் ஆண்டு மலர்ந்துவிட்டது. பிறந்த புத்தாண்டும், பொங்கலும் அனைத்து மக்களுக்கும் சுபீட்சம் நிறைந்த ஆண்டாக மலர, இந்து மாமன்றத்தின் வாழ்த்துக்கள் உரித்தாகுக. தை பிறந்தால் வழிபிறக்குமென்பர். இனிய பொங்கலுடன் மக்கள் மனத்தில் மகிழ்ச்சி, உற்சாகம், நம்பிக்கை என்பனவும் பிறக்கின்றது. அதனைத் தொடர்ந்து வரும் சர்க்கரைப் பொங்கல் விழாவைக் கொண்டாடி மகிழ்வதுடன், சைவமும் தமிழும் தழைக்க வேண்டும் என்ற பெரு நோக்கோடு, ஆழ்ந்த அனுபவம் மிக்க சமயச் சான்றோர்களின் சமய சம்பந்தமான கருத்துக்கள், சிந்தனைகள் என்பவற்றை உள்ளடக்கிய சைவ நீதியும் மலர்கின்றது; அதனை எல்லோரும் வாசித்துப் பயன் பெறுவீர்களாக.

சமுதாய வாழ்க்கையின் அடிப்படை நிலைக்களமே சமயம் ஆகும். சமுதாய வாழ்க்கை என்று தொடங்கியதோ அன்றே சமயமும் தொடங்கியது எனலாம். சமயம் இல்லாத நாட்டினரையோ கூட்டத்தினரையோ காண்பது அரிதாகும். இந்த சமுதாய வாழ்க்கையைப் பக்குவமான வழியில் செலுத்துவதற்குத் துணை நிற்பது சமயமாகும். அதற்குத் தெய்வ நம்பிக்கையும் வழிபாடும் இன்றியமையாததாகும். மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் எப்படி வாழவேண்டுமென்ற ஒரு ஒழுக்க வரம்புண்டு. அந்த வரம்பிற்கு உட்பட்டு நடப்போமானால் நன்மையும், அதை மீறி நடந்தால் துன்பங்களும் நம்மை வந்தடையும். இந்த வாழ்க்கை நெறிப்பண்புகளைத்தான் சமய நூல்கள் அத்தனையும் எடுத்துக் கூறுகின்றன. தூய வாழ்க்கை, தூய உணர்வு, பெரியோர்களிடம் பணிவு, மெய்யே பேசல், பெற்றோரைப் பேணல், துன்பப்படுவோருக்கு உதவுதல், அறவழியில் நடத்தல், பொருளீட்டல், எளிய நடையுடை, புலனடக்கம், கடவுள் நம்பிக்கை என்பன இந்த நெறிமுறைகளாகும். எந்த இடத்திலும் எந்தச் சந்தர்ப்பத்திலும் எந்தச் சிக்கலான சூழ்நிலையிலும் இந்த நெறிமுறைகளை நாம் வரம்பு மீறி நடத்தலாகாது. இவற்றையெல்லாம் சிறு வயதிலிருந்தே பழகிவந்தால் பெரியவர்களாகும்போதும் நல்வாழ்வு வாழமுடியும். இறை உணர்ச்சி உள்ளவன் தவறு செய்யத் தயங்குவான்.

ஒவ்வொரு மனிதனிடமும் தெய்வத்துவம் என்ற நல்லியல்பு உள்ளது. இந்த சிவம் என்ற நல்லியல்பு இல்லாத மனிதனே இல்லை. இந்த உண்மையை எல்லோராலும் உணர முடிவதில்லை. உணரும் முயற்சியில் ஈடுபடுபவர்களும் மிகச் சிலரே. இதை உணர்ந்தால் உண்மையான மனிதராக வாழ முடியும். காலம் சூறாவளியைவிட வேகமாக ஓடிக்கொண்டிருக்கிறது. உருகும் பனிக்கட்டிபோல் ஆயுட்காலம் குறைந்துகொண்டே போகின்றது. மனிதன் தன் குறிக்கோளை அடைய முன்னரே இறந்துவிடுகின்றான். அப்படி வாழ்க்கையின் நோக்கத்தை அடைவதற்கு முன் மடிவது முறையல்ல. ஒவ்வொரு மனிதனுடைய வாழ்க்கையும் பயனுடையதாக இருக்க வேண்டும்.

"ஒன்றே செய்யவும் வேண்டும்
ஒன்றும் நன்றே செய்யவும் வேண்டும்
நன்றும் இன்றே செய்யவும் வேண்டும்
இன்றும் இன்னே செய்யவும் வேண்டும்"

என்று தமிழ் இலக்கியம் கூறுவது போல், நாம் நடக்க முயற்சிப்போம். மனம் மாறும் தன்மையுள்ளது. நல்ல காரியங்களை உடனடியாகச் செய்து முடிப்பது நல்லது. அப்போதுதான் நாம் இவ்வுலகத்திலும் மறு உலகத்திலும் இன்பம் துய்த்து வாழலாம். உலகில் உள்ள எல்லோரும் இன்புற்று வாழ இறையருள் பெருக வேண்டும்.

இந்து மாமன்றத்தின் பணிகள் இன்னும் விரிவடைய வேண்டும் என எல்லோரும் விரும்புகிறார்கள். அதற்கு சேவையாற்ற பலரும் முன்வரவேண்டும். இதில் இளைஞர்கள், மாணவர்கள் பங்குபற்றுவது அவசியம். அவர்களின் கையில்தான எதிர்காலம் தங்கியுள்ளது. எதிர்கால சந்ததியினரின் வாழ்வு மலர வழியமைத்துக் கொடுப்பது எல்லோரதும் கடமையாகும். சைவநீதி உலகெங்கும் பரவ ஒன்றுபடுவோம்; ஒத்துழைப்போம்; செயலாற்றுவோம்.
நன்றி. வணக்கம்.

திருமதி ம.தனபாலசிங்கம்
மலர் ஆசிரியை.

Cash Point®
The Buck Starts Here!

**CHEQUE CASHING**
**MORTGAGES**
**WORLDWIDE MONEY TRANSFER**

# 416.284.7000

காசோலை மாற்றல் **Foreign Currency Exchange**

**G03-3852 Finch Ave.E, Scarborough, ON. M1T 3T9**



**ONE STOP**



# FINANCIAL SERVICES

- RESIDENTIAL MORTGAGES
- REFINANCING
- COMMERCIAL MORTGAGES
- BUSINESS LOANS
- REAL ESTATE NEEDS
- BUY & SELL HOMES & BUSINESSES

# 416.284.0005

**202-3852 Finch Ave. E, Scarborough, ON. M1T 3T9**

# ஈழத்துச் சிதம்பரம்

திரு. தி. விசுவலிங்கம்
தலைவர், சைவசித்தாந்த மன்றம், கனடா
நிர்வாக ஆசிரியர், **அன்புநெறி**
அதிபர், சைவசமயகுரவர் பாடசாலை

ஈழமணித் திருநாட்டின் யாழ்ப்பாண மேற்பகுதியில் பொலிவும் சிறப்பும் பெற்று விளங்கும் காரைநகர் சிவன் கோவில் என்னும் ஈழத்துச் சிதம்பரம் என்னும் சிவத்தலம் புராதனமானதும் அற்புதமானதும் ஆகும். இலங்கையிலுள்ள பழம் பெரும் ஆலயங்களுள் காரைநகர் திண்ணபுரத்தில் எழுந்தருளியுள்ள சுந்தரேசுவரப் பெருமான் (சிவன் கோவில்) ஆலயமும் ஒன்றாகும். இவ்வாலயம் மூர்த்தி, தலம், தீர்த்தம்ஆகிய சிறப்புக்களைப் பெற்றது. தென்னகத்தில் தல மகிமை பெற்று விளங்கும் சிதம்பரத்தில் நிகழும் கிரியை மரபுகளைப் பின்பற்றும் பாரம்பரியசிறப்புப் பெற்றது. இவ்வகையால் இத்தலத்திற்கு ஈழத்துச்சிதம்பரம் என்னும் சிறப்புப்பெயர் உரியதாயிற்று. ஈழத்துச் சிதம்பரத்தில் மூலமூர்த்தியாக விளங்கும் சிவனது (சுந்தரேசுவரப் பெருமானது) சந்நிதியோடு, ஆலயத் தொடக்க காலம் முதல் அற்புதம் நிறைந்து விளங்கும் ஐயனாரின் சந்நிதியும் உள்ளது. இவ்வாலயத்தின் தொடக்க கால மூர்த்தியாக விளங்கியவர் ஐயனார்.

## ஆண்டிகேணி ஐயனார் கோவில்:

இற்றைக்கு ஏறக்குறைய 213 ஆண்டுகட்கு முன்னர், இராமநாதபுரத்தைச் சேர்ந்தவரான ஆண்டி என்னும் பெரியார் இலங்கைக்கு வந்தார். அவர் தமிழகம் முழுவதும் தலயாத்திரை செய்து, இலங்கையில் திருக்கோணேஸ்வரம், திருக்கேதீஸ்வரம், முன்னேஸ்வரம், கதிர்காமம் போன்ற புண்ணிய தலங்களை வழிபட்டார். காரைதீவில் தமது குலதெய்வமாகிய ஐயனாருக்கு சிறப்பாக ஆலயம் அமைந்து உள்ளது என அறிந்தார். காரைதீவுக்கு வந்து வியாவில் ஐயனார் கோவிலுக்குச் சென்றார். குளக்கோட்டு மகாராசாவால் மிகவும் அழகாகக் கட்டப்பட்ட ஐயனார் ஆலயம், போர்த்துக்கேயராலும், ஒல்லாந்தராலும் இடித்து அழிக்கப்பட்ட நிலையில் பார்த்த பெரியார் ஆண்டி மிகவும் வேதனை அடைந்தார். அக் கோவில் குருக்கள் கனகசபாபதி தாமோதரனாரின் இல்லத்தில் தங்கியிருந்து, ஐயனார்திருவுருவைத் தியானித்து வழிபாடு செய்து வந்தார். ஆண்டியாரின் வேண்டுதலுக்கு இரங்கிய ஐயனார் அவரது கனவில் தோன்றி, "அன்பனே நீயே நான், நானே நீ, தூர்வாச கிரிக்குச் சமீபமாய் அரசமரத்தின் கீழ் இருக்கின்றேன்" என்று அருளி மறைந்தார். உடனே பெரியார் ஆண்டி துயிலுணர்ந்து, திருவருளை வியந்து, குருக்களிடம் விடைபெற்று, குறித்த இடத்தை அடைந்து, அந்த அரச மரத்தடியில் தாம் கொண்டு வந்த வைரவசூலத்தை வைத்துத் தம் ஆத்மார்த்த பூசையைச் செய்து, திருவருளில் திளைத்து அவ்விடத்திலேயே வாழ்ந்து வந்தார்.

இறைபக்தி நிறைந்த பெரியார் ஆண்டி வாழ்ந்து வருவதை அறிந்த ஊரவர்கள் அவரின் வழிபாடுகளில் கலந்து நல்லறிவு பெற்று வந்தனர். அப்பெரியார் மக்கள் வழிபடுவதற்கு ஒரு சிறு ஆலயத்தை அரசமரத்தடியில் அமைத்து தாமே பரார்த்த பூசை செய்து வந்தார். இவ்வாறு நிகழ்ந்து வரும் காலத்தில் ஒரு நாள் அரச மரத்துக்குத் தென்கிழக்குத் திசையில் ஓர் ஒளி உண்டாயிற்று. பெரியார் அதனைக் கண்டு அதிசயமுற்று அந்த இடத்தைத் தோண்டினார். அப்போது பூரணை புட்கலை சமேத ஐயனார் திருவுருவம் ஒன்று வெளிப்படக் கண்டு அளவிலா ஆனந்தம் அடைந்தார். அவர் திருவருளை வாழ்த்தி, மிகப் பழமை வாய்ந்த இத்திருவுருவத்தை சூலத்துடன் அங்கு நிறுவிப் பூசை வழிபாடுகளைச் செய்து வந்தார்.



திருவுருவம் கிடைக்கப்பட்ட கிடங்கை மேலும் தோண்டிக் கேணி ஆக்கினார். ஆண்டி தோண்டிய படியால் ஆண்டிகேணி என்றும், எடுக்கப்பட்ட திருவுருவம் ஆண்டிகேணி ஐயனார் எனவும் பிற்காலத்தவரால் வழங்கப்பட்டன. இந்த ஐயனார் திருவுருவம் பறங்கியர் சைவாலயங்களை இடித்து அழித்த காலத்தில், யாரோ ஒரு சைவசமயியால் புதைத்து வைத்ததாய் இருக்கலாம் என்று நம்பப்படுகின்றது. அந்த அரசமரம் இன்றும் சிவன்கோயிலின் தெற்கு வீதியில் பெரிய கிளைகளோடு பரந்து விளங்குதலைக் காணலாம். இதன் கீழுள்ள வைரவர் கோயில் பிற்காலத்தில் திருத்தி அமைக்கப்பட்டது. ஆண்டிகேணி அரசுக்குத் தென்புறத்தில் பள்ளமாய் இருந்து தூர்ந்து விட்டது.

அம்பலவி முருகர்

களபூமியைச் சேர்ந்த அம்பலவி முருகர் என்னும் பெரியார் கடவுள் பக்தி, அடியார் பக்திகளிற் சிறந்தவர் அருள், அடக்கம், பொறை, சத்தியம் முதலிய நற்குணங்கள் நிரம்பப் பெற்றவர். அம்பலவி முருகரும் இன்னும் பல சைவ அன்பர்களும் பெரியார் ஆண்டி பற்றி கேட்டறிந்தும், அவரோடு நட்புப் பூண்டும், பல ஆண்டுகள் உடனுறைந்தும் இறைவன் திருவடிமறவா பேரின்பத்தில் திளைத்தனர். இரு பெரியவர்களும் வழிபட்டு வருங்காலத்தில் ஐயனாருக்குத் தனி ஆலயம் அமைக்கவேண்டும் என்னும் எண்ணம் அம்பலவி

முருகருடைய உள்ளத்தில் உதிக்கலாயிற்று. அவர் தம் கருத்தை அவ்விடம் வந்து போகும் அடியார்களுக்கும், பிறருக்கும் எடுத்துக்கூறி வந்தார்.

ஏறக்குறைய 183 வருடங்களுக்கு முன்னர் அம்பலவி முருகர் அரசமரத்திற்கு வடக்குப்பக்கமாக உள்ள தமது சொந்த நிலத்தில் தம்பொருள் கொண்டும், ஐயனார்கோவில் அமைத்துக் கும்பாபிடேகம் செய்வித்தார். ஒரு அந்தணரை அருச்சகராகவும் நியமித்து நித்திய நைமித்தியங்களை முறைப்படி நடப்பித்து வந்தார்.அம்பலவி முருகர் ஐயனார் எழுந்தருளுவதற்கு வேண்டிய உற்சவமூர்த்தி ஒன்றை வார்த்துத் தரும்படி சிற்பாசிரியர் ஒருவரை வேண்டிக்கொண்டார். அவரும் ஐயனார் திருவுருவை வார்த்து அன்பரிடம் காட்டியபோது அத்திருவுருவின் அழகில் மனதைப்பறி கொடுத்து அதனை உடனே பெற்றுச்செல்ல முருகர் விரும்பினார். ஆயினும் அதனைச் செப்பம் செய்துதருவதாகக் கூறிச் சிற்பியும் செப்பம் செய்யத் தொடங்கினார். அப்போது திருவுருவத்தினின்றும் உதிரம் வடியத் தொடங்கியது. அதைக் கண்ட சிற்பாசிரியர் ஆச்சரியமடைந்து திகைத்து நின்றார். இவ்வற்புதத்தை ஈழத்துச் சிதம்பர புராணம் - ஐயனார் கோயில்காண் சருக்கம் செய்யுள் 50 இல் பின்வருமாறு கூறுகின்றது:

அப்பனே வேண்டாமின்னே யவ்வுருத் தருகவென்னச்
சிற்பனுஞ் சிறிதுபோழ்திற் றிருத்தியான் தருவனென்றே
ஒப்பமுஞ் செய்தானாகக் குருதிநீ ரொழுகக்கண்டு
செப்புவா யடங்கக்கைகள் சிரமுந் திகைத்துநின்றான்

சிற்பி, ஒப்பம் செய்யாமலே திருவுருவத்தை முருகரிடம் கொடுத்தான். ஐயனார் திருவுருவம் ஒப்பஞ் செய்யாமலே கும்பாபிடேகம் செய்யப்பெற்று பூசிக்கப்பட்டு வருகிறது. இதனை இன்றும் காணலாம்.

அம்பலவி முருகர் ஐயனார் ஆலயத்தில், ஐயனாருக்கு மார்கழித் திருவெம்பாவைக் காலத்தில் விசேட அபிடேகம், பூசை, திருவிழா என்பனவற்றை



நடப்பித்து வந்தார். திருவாதிரையிலன்று திருவாசகம் முழுவதையும் ஓதுவித்தும் வந்தார். அன்றியும் ஆனி உத்தரத்தைத் தீர்த்தத் தினமாகக் கொண்டும் ஐயனாருக்குத் திருவிழாவும் செய்து வந்தார். வருடத்தில் மார்கழி, ஆனி ஆகிய இரு மாதங்களிலும் திருவாதிரை, உத்தரம் என்னும் நட்சத்திரங்களை தீர்த்தவாரியாகக் கொண்டு சிதம்பரத்தைப் போன்று திருவிழா நடைபெற்று வந்தது. ஆனி உத்தர விழா காலப்போக்கில் சில காரணங்களால் பங்குனி உத்தர

விழாவாக மாற்றப்பட்டது.

## சிவாலயம்

மார்கழித் திருவாதிரைத் திருவிழாவில் மிகவும் ஈடுபாடு கொண்ட சிவபக்தரான அம்பலவி முருகருக்கு அவ்விடத்தில் ஓர் சிவாலயம் அமைக்கவேண்டும் என்ற ஆர்வம் காரைநகர் மக்கள் செய்த தவப்பயனாய் உருவானது. திருவருளின் துணைகொண்டு சிவாலயத் திருப்பணியைத் தொடங்கினார். பெரியாரது பக்தி வைராக்கியத்தையும், திருத்தொண்டின் பெருமையினையும் கண்டறிந்த ஊரவர்கள் பலரும் திருப்பணித் தேவைகள் எல்லாவற்றையும் தம்தம் ஆற்றுலுக்கேற்ப கொடுத்து உதவினர்.

அம்பலவி முருகர் ஐயனார் கோவிலுக்கு வடக்குப் பக்கமாகச் சிவன் கோவிலைக் கட்டுவித்தார். பின்னர் சிவலிங்கத்தை பெறுவது பற்றி நினைத்து ஏங்குவாராயினார். அக்காலத்தில் சிவலிங்கம் இலங்கையிற் கிடைக்காது. செய்யக் கூடிய சிற்பாசிரியரும் அங்கு இருக்கவில்லை. ஒருநாள் இறைவன் பெரியாரது கனவிலே தோன்றி சிதம்பரத்திலுள்ள ஒரு சிற்பியிடம் பதினாறு(16) சிவலிங்கங்கள் உண்டு என்றும் அவற்றுள் தம்மால் அடையாளம் காண்பிக்கப்படும் சிவலிங்கத்தைப் பெற்று வரும்படியும் கூறி மறைந்தார். முருகர் இறைவன் திருவருளை வியந்து அவ்வாறே சிதம்பரம் சென்று சிற்பாசிரியரின் இல்லத்தை அடைந்து தம்கருத்தைத் தெரிவித்தார். அவர் தன்னிடமுள்ள பதினாறு (16) சிவலிங்கங்களையுங் காட்டினார். முருகர் அவற்றினை ஆராய்ந்தபோது ஏழாவது சிவலிங்கத்திலிருந்து காற்று உயர்ந்து எழுவதைக்கண்டு, அதுவே இறைவனின் அருட்குறிப்பென்பதை உணர்ந்து அதனையே பெற்றுக்கொண்டார். பின்னர் சிலகாலம் சிதம்பரத்தில் தங்கியிருந்து அம்பிகை, விநாயகர், சுப்பிரமணியர், சண்டேசுவரர், நந்தி, பலிபீடம் முதலான திரு உருவங்களையும் செய்வித்துக் கொண்டு காரைநகர் திண்ணபுரம் திரும்பி, தாம் அமைத்த சிவாலயத்தில் அம்மூர்த்திகளைப் பிரதிஷ்டை செய்வித்தார். சிவலிங்கப் பெருமானதும் அம்பிகையினதும் தோற்றத்தின் அழகைக் கண்ட சிவாச்சாரியர்களும் சைவ அன்பர்களும் பெரியார் அம்பலவி முருகரும் சிவலிங்கத்திற்குச் சுந்தரேஸ்வரர் என்றும் அம்பிகைக்குச் சௌந்தராம்பிகை என்றும் திருநாமமிட்டு வாழ்த்தி வணங்கினர். சோமாற்கந்த மூர்த்தி அம்பலவிமுருகர் சோமாற்கந்த மூர்த்தியின் திருவுருவத்தைச் செய்விப்பதற்காகத் தன்மகன் சண்முகத்தாருடன் சிதம்பரம் சென்றார். அங்கே சிற்பிகளுடன் தம்விருப்பத்தைத் தெரிவித்து சோமாஸ்கந்தமூர்த்தியை வார்ப்பித்தபோது இருமுறை கருச்சிதைந்து விட்டது. முருகர் பெரிதும் மனம்நொந்து திருவருளைவேண்டித் தம்காதுகளில் அணிந்திருந்த பொற்கடுக்கன்களைக் கழற்றிச் சிற்பியிடம் கொடுத்து அவற்றையும் சேர்த்து உருக்கி வார்க்கும்படி வேண்டினார். இம்முறை கரு நன்றாக அமைந்து திருவுருவம் அழகாக அமைந்ததைச் சிற்பிவாயிலாக அறிந்த முருகருடைய ஆன்மா, அத்திருவுருவிலே கலந்ததுபோல மறைந்தது. இவற்றினை ஈழத்துச்சிதம்பர புராணத்தில் - சோமாற்கந்த சருக்கத்தில் உள்ள செய்யுள்கள் 18, 20 பின்வருமாறு கூறுகின்றன.

"அப்பொழுது திருவருளா லொருகுறிப்பு மனத்தருட்டச்
செப்பியதஞ் செல்வமெலாஞ் சிவன்பணிக்கே சேர்த்தவரும்
ஒப்பறுபொற் கடுக்கனிரண் டுதவாமற் சுமக்கின்ற
தப்பறுதந் நிலையுணர்ந்து தாமவற்றைக் கழற்றிப்பின்

இவைதம்மைச் சுமந்தபழிக் கினியென்ன கழுவாயென்
றவைதம்மைச் சிறுபரிட மளித்தார்மற் றதனோடு
நவைதீரக் கலந்துருக்கி நன்மையென வார்த்தெழுந்தார்
தவமுடையார் கருமத்தின் றத்துவத்தை யாரறிவார்"

மகன் சண்முகத்தார் தந்தையாரின் ஈமக் கடன்களைச் சிதம்பரத்தில் முறைப்படி செய்து, சில நாட்களின் பின்னர் சோமாஸ்கந்த மூர்த்தியை திண்ணபுரத்திற்குக் கொண்டு வந்து கும்பாபிடேகம் செய்வித்தார். பின்னர் இக்காலம் முதல் மார்கழி திருவெம்பாவை உற்சவத்திலும், பங்குனி உத்தர மகோற்சவத்திலும் சோமாஸ்கந்த மூர்த்தம் பிரதான மூர்த்தமாகக் கொள்ளப்பட்டு இரதோற்சவத்திற்கு எழுந்தருள்வதாயிற்று.

## நடராசர் திருவுருவம்

ஈழத்துச் சிதம்பரத்திலுள்ள நடராசர் திருவுருவம் மிக அற்புதமானது. வியாக்கிரபாத முனிவரும் பதஞ்சலி முனிவரும் திருவடியின் இருமருங்கிலும் தொழுதேத்த ஐம்பத்தியொரு சுடர்களைக் கொண்ட வட்டத் திருவாசியுடன் கூடியது. இவ்வாறான அமைப்பும் அழகும் பொருந்திய திருவுருவம் இந்தியாவிற்றானும் இரண்டொரு தலங்களில் மாத்திரமே உண்டெனக் கோயில் வரலாற்றிலும் மூர்த்தி சிற்பக்கலை நுணுக்கங்களில் நிபுணத்துவ முள்ள திரு. தொ. மு. பாஸ்கரத் தொண்டமான் அவர்கள் 1963 ஆம் ஆண்டு ஈழத்துச் சிதம்பரத்தைத் தரிசிக்க வந்தபோது கூறியதுடன், கலைமகளில் ஈழத்துச் சிதம்பரத்தின் சிவகாமி அம்பாள் சமேதராக அமைந்திருக்கும் நடராச மூர்த்தம் பற்றிக்கட்டுரை எழுதியிருந்தார். இங்குள்ள நடராசமூர்த்தியின் திருவுருவமானது ஈழத்துச் சிதம்பரத்திலேயே சோழபுரத்து குருசாமி ஆசாரியாரால் 1901 ஆம் ஆண்டு வார்க்கப்பட்டது. நடராசர் திருவுரு வார்க்கப் பட்டிருந்தும் ஏழு வருடங்களாக கும்பாபிடேகம் நடைபெறவில்லை. ஆதீனகர்த்தர் திரு. மாசிலாமணி காலத்திலே 1908 ஆம் ஆண்டு கும்பாபிடேகம் நடைபெற்றது. இந்நாள் தொடக்கம் நடராசப்பெருமானே மார்கழித் தேர்த் திருவிழாவிற்கும், ஆனி உத்தரத்திற்கும், பங்குனித் (உத்தரத்திலும்) தீர்த்தத்திலன்றும் எழுந்தருளி வருகின்றார். பங்குனித் தேருக்கு சோமாஸ்கந்தர் எழுந்தருள்வார். திண்ணபுரக் கூத்தன் திருவடிவம் பற்றி ஈழத்துச் சிதம்பர புராண விழாவயர் சருக்கத்தில் 78, 79 ஆம் பாடல்களில் புலவர்மணி இளமுருகனார் பாடியுள்ளார்.



பொன்னடியி னிருமருங்கும் புலிக்காலும் பாம்பும்
பொருந்திநின்று புகழேத்தப் போகத்தி லுயிர்கள்
மண்ணியுற முயலகன்மேல் வைத்தவலத் தாளு
மாறில்லா வீடருள வெடுத்தவிடத் தாளு
மின்னுபுலி யதள்வீக்கி விளங்குமணி யரையும்
வியனுலகந் தோற்றுதுடி மேவுவலக் கரமுந்
துன்னுபய மில்லையென்று சொல்லுவலக் கரமுந்
தோற்றத்தை யொடுக்குமகற் சோதியிடக் கரமும் 78

இசைவுகொண்டு பாவகமாய் வீசுமிடக் கரமும்
எல்லார்க்கு மிடர்நீக்கு நீலமணி மிடறும்
பசுமைமிகு குண்டலத்தைப் பரித்தவலச் செவியும்
பம்புசுடர் தவழ்கின்ற குழையினிடச் செவியும்
விசைநீங்கு கங்கைநதி விரைக்கொன்றை மதியம்
விளங்கப்பின் பாவுமந்தி மாலைநிகர் சடையுஞ்
சசிமுதலாம் விழிமூன்று மரும்புநகை முகமுந்
தனிச்சுடரோர் கோடியொருங் குதித்தன்ன வொளியும்97

## இத்தலத்தில் நிகழும் திருவிழாக்கள்

### மார்கழித் திருவாதிரைத் திருவிழா

ஈழத்துச் சிதம்பரத்தில் வருடத்தில் மூன்றுமுறை பங்குனி, ஆடி, மார்கழி ஆகிய மாதங்களில் திருவிழாக்கள் நடைபெறுகின்றன. இவற்றுள் மார்கழியில் வரும் திருவாதிரை விழாவே மிகவும் சிறப்பு வாய்ந்ததாகும்.

மார்கழி மாதத்தில் வரும் திருவாதிரை நாள் நடராசப் பெருமானுக்குச் சிறப்பானவிழா நாளாதலில் அத்திருநாளில் நடேசப் பெருமானுக்கு விசேட அபிடேகஞ் செய்வர். அந்த ஆதிரைநாளை ஒட்டி முன்பாகவுள்ள ஒன்பது நாள்களும் விழாச் செய்து வழிபடுவர். இதைத் திருவாதிரைத் திருவிழா என்பர்.

திருவாதிரைத் திருவிழா நடக்கின்ற பத்துத் தினங்களிலும் சுந்தரேஸ்வரப் பெருமானுக்கும் சௌந்தராம்பிகைக்கும் விசேட அபிடேகம், பூசை நடைபெற்றபின் மணிவாசகப் பெருமானுக்கு பூசை நிகழும். அதன்பின் மணிவாசகப் பெருமானை கூத்தபிரான் சந்நிதிக்கு எழுந்தருளச்செய்து, திருவெம்பாவையை ஓதுவர். அதனைத் தொடர்ந்து வசந்த மண்டபத்தில் சந்திரசேகரப் பெருமான் அம்பாள் சகிதம் பிள்ளையார், சுப்பிரமணியர் ஆகியோருடன் இரண்டாம் வீதிஉலா வந்து அடியார்களுக்குக் காட்சி கொடுப்பார்கள். மாலைப் பூசையின் பின் திருவெம்பாவை ஓதப்படும். ஒன்பதாம் நாளாகிய தேர்த் திருவிழா அன்று நடராசப்பெருமான் செவ்வந்திப் பூக்களினாலும் திருவாபரணங்களினாலும் அலங்கரிக்கப்பட்டு, ஆனந்தத் தாண்டவம் ஆடிக்கொண்டு சிவகாமசுந்தரி அம்பாளோடு உள்வீதியில் பக்தர்கள் புடைசூழ மேளவாத்தியங்கள் ஒலிக்க, திருமுறைகள் ஓதுவோர் பஜனை செய்துவரும் காட்சியைக் கண்டு மெய்யடியார்கள் உளமுருகி வழிபடுவார்கள். பின்னர் நடசாசப் பெருமானும் ஏனைய மூர்த்திகளும் மூன்றாம் வீதியிற் பவனி வரும் காட்சி



பக்திமயமான அற்புத ஆனந்தக் காட்சியாகும். முதலாம் தேரில் பிள்ளையாரும் வள்ளி தெய்வானை சமேத சுப்பிரமணியரும், இரண்டாம் தேரில் பூரணை புட்கலை சமேத ஐயனாரும் மூன்றாம் தேரில் நடராசப் பெருமானும், நான்காம் தேரில் சிவகாமசுந்தரி அம்பாளும், ஐந்தாம் தேரில் மாணிக்கவாசகப் பெருமானும் எழுந்தருளி வீதிவலம் வருவார்கள்.

தேர்த் திருவிழாவன்று இரவு பதினெட்டு நாழிகையின் மேல் இருபத்துநான்கு நாழிகை வரையில் ஆதிரை அபிடேகமும் அதன்மேல் சூரியோதயத்திற்கு முன் ஆருத்திரா தரிசனமும் நிகழும். மிகவும் சிறப்பாக நடைபெறும் அபிடேகத்தையும் அதன்பின் நடைபெறும் ஆருத்திரா தரிசனத்தையும் கண்டு களிக்க ஈழத்தின் நாற்றிசைகளிலிருந்தும் பல்லாயிரக்கணக்கான மெய்யன்பர்கள் ஈழத்துச் சிதம்பரத்திற்கு வருவார்கள்.

திருவாதிரை நாளாகிய பத்தாம் நாள் மாலை நடேசப் பெருமானுக்கும் சிவகாமசுந்தரி அம்பாளுக்கும் விசேட பூசை நடைபெற்று, இரண்டாம் வீதியில் திருஉலா வருதல், திருவூடல், உள்வீதியில் தீர்த்தம் ஆகியன நிகழும். திருவாதிரைத் திருவிழா நாளாகிய பத்துநாட்களும் பக்தர்கள் தங்கள் நேர்த்திக்கடனை நிறைவேற்றுவதற்காக விரதமிருந்து, அங்கப் பிரதட்சணம் செய்வார்கள் காவடி எடுப்பார்கள். இக்காலத்தில் காரைநகர் மணிவாசக சபையினரால் ஈழத்துச் சிதம்பரத்தில் மணிவாசகவிழா மிகச்சிறப்பாக நடாத்தப்படும். இவ்விழாவில் ஈழத்தையும் தமிழ்நாட்டையும் சோந்த அறிஞர்கள் பலர் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றுவார்கள். மணிவாசகர் மடாலயத்திலும் சிவாச்சிரமத்திலும் அன்னதானம் நடைபெறும். நடராசப்பெருமானின் ஏனைய திருமுழுக்கு நாட்கள்:

1. சித்திரை - திருவோணம் - உச்சிக்காலம்
2. ஆனி - உத்திரம் - பிரதோஷ காலம் (திருவந்திக்காப்பு-முதல் காலம்)
3. ஆவணி - சுக்கிலபட்ச சதுர்த்தசி திதி - சாயரட்சை 2ம் காலம் சமகாலம்
4. புரட்டாசி - சுக்கிலபட்ச சதுர்த்தசி திதி - அர்த்தசாமம்
5. மாசி -சுக்கிலபட்ச சதுர்த்தசி-காலசந்தி

இத்தினங்களில் இத்திருத்தலத்தில் நடராசப் பெருமானுக்கு விசேட அபிடேகங்கள் நடைபெறும். ஆனி உத்திரத்தில் அபிடேகத்தின் பின் திருவிழா நடைபெறும்.

## ஏனைய வருடாந்திர விழாக்கள்

தைமாத முதல் நாளில் சிவன் கோவிலின் இரண்டாம் திருவீதியிலே அரச மரத்தின் கீழ் ஆண்டி முனிவரால் தாபிக்கப் பட்ட சிவஞான வைரவருக்கு அடியார்கள் சிறப்பாகப் பொங்கல் விழாச் செய்வார்கள்.

மூன்றாம் திருவீதியின் மேற்குப் பக்கத்தில் இருக்கும் தினகரன்பிட்டி வைரவக் கடவுளுக்கு வைகாசித் திங்களில் விசாக நாளில் மிகச் சிறப்பாகப் பொங்கல் விழா நிகழும். சிவனுக்கு உகந்த விழாவாகிய தைப்பூசத் திருவிழாவும் இங்கு சிறப்பாக நடைபெறும்.

மாசி மாத அபரபக்க சதுர்த்தசி கூடிய நாளாகிய சிவராத்திரியன்று சுந்தரேசுவரப் பெருமானுக்கு நான்கு சாமங்களிலும் விசேட அபிடேகமும் ஆராதனையும் நடைபெறும். அடியார்கள் விழித்திருந்தும் விரதமிருந்தும் இறைவனை வழிபடுவார்கள். சிவராத்திரியை அடுத்து வரும் அமாவாசை நாளிலும், ஆடிமாத அமாவாசை நாளிலும் சந்திரசேகரப் பெருமான் திருவீதியில் வலமாக எழுந்தருளி வந்து, நெடிய அலைகளையுடைய தூர்வாச சாகரத்தில் தீர்த்தம் ஆடுவார்.

## பத்திரகாளி அம்மன் கோவில் பொங்கல் விழா

சுந்தரேஸ்வரப் பெருமான் திருக்கோயிலிற் கொடியேற்றத் திருவிழா தொடங்கு வதற்குச் சில நாள்களின் முன், அப் பெருமான் கோயிலுக்கு கிழக்குப் பக்கத்தில் திருக்குளத்தை (சித்த அமிர்த வாவி) அடுத்து இருக்கும் பத்திரகாளி அம்மனுக்கு பொங்கல் விழா நடைபெறும். அம்மையின் கோயிலுக்கு முன்பாக நெடிய மரம் ஒன்றை நாட்டி, அதிலே கொடிச்சீலை ஒன்றை நீளமாகக் கட்டி, வழிபாட்டுக்குரிய விளக்கை ஏற்றி, ஏழு நாள்களுக்கு விசேட பூசை செய்து, எட்டாவது நாளில் பொங்கல் விழா நடைபெறும்.

## பங்குனித் திருவிழா

சௌந்தராம்பிகை சமேத சுந்தரேசுவரப்

பெருமானுக்குப் பங்குனிமாத உத்தரத்தை தீர்த்த நாளாகக்கொண்டு பத்து நாள்கள் உற்சவம் கொடியேற்றத்தோடு ஆரம்பமாகும். திருவிழா நாள்களில் சந்திரசேகரரும் அம்பாளும், பிள்ளையாரும், வள்ளிநாயகி தெய்வநாயகி சமேத சுப்பிரமணியரும் திருவீதியிற் திருவுலா வருவார்கள். ஏழாம் நாள் வேட்டைத் திருவிழாவிற்கு ஐயனாரும் எழுந்தருளுவர். எட்டாம் நாள் பெரிய சப்பரத் திருவிழாவும், ஒன்பதாம் நாள் தேர்த் திருவிழாவும் நடைபெறும். முதலாம் தேரில் பிள்ளையாரும், வள்ளிநாயகி தெய்வநாயகி சமேத சுப்பிரமணியரும், இரண்டாம் தேரில் பூரணை, புட்கலை சமேத ஐயனாரும், மூன்றாம் தேரில் சோமாற்கந்தரும், நான்காம் தேரில் வீரசக்தி அம்பாளும், ஐந்தாம் தேரில் சண்டேசுவரரும் எழுந்தருளி வருவார்கள். பத்தாம் நாள் அதிகாலை நடேசர் உற்சவமும், அதன்பின் தீர்த்தமும், அடுத்தநாள் திருக்கல்யாண விழாவும் நிகழும்.

## ஐயனார் வேள்வி விழா

திண்ணபுரத்திற் சுந்தரேசப் பெருமானுக்கு வலப்பக்கத்தில் கோவில் கொண்டிருக்கும் ஐயனாரின் வேள்வி விழா, திருக்கல்யாண விழாவினை அடுத்து சில நாள்கள் சென்ற பின் நிகழும்.

## சோமாற்கந்தர் அபிடேகம்

ஆடி மாதப் பிறப்பன்று சோமாற்கந்தப் பெருமானுக்கு விசேட அபிடேகம் நடைபெறும்.

## அம்மன் திருவிழா

ஆடிப்பூரத்தை தீர்த்த நாளாகக் கொண்டு பத்து நாள்களுக்கு அம்பாள் விழா நடைபெறும். இவ்விழாவும் பங்குனி விழாவைப் போல் கொடியேற்றமும், அலங்கார விழாக்களும் தேரும் தீர்த்தமுமாக நடைபெறும். இவ்விழா நாள்களில் இராசராசேசுவரி அம்பாள் எழுந்தருளி மூர்த்தமாகத் திருவீதியுலா வருவார். இத் திருவிழா நாள்களில் ஈழத்துச் சிதம்பர புராணம் ஓதப்பட்டு பொருள் விரித்துரைக்கப் படும்.

## பிரதோட விழா

மாதந்தோறும் அமாவாசையும் பூரணையும் தொடர்ந்து வருகின்ற வளர்பிறை தேய்பிறைகளில் உள்ள பதின்மூன்றாம் நாளாகிய திரயோதசித் திதியில் சூரியன் மறைதற்கு முன் பின் மூன்றே முக்கால் நாளிகைக்கு உட்பட்ட காலம் பிரதோட காலம் எனப்படும். திங்கள் தோறும் வரும் இரண்டு பிரதோட காலங்களிலும் பிரதோட விழா நடைபெறும். அன்று மாலையில் சுந்தரேசப் பெருமானுக்கும் சௌந்தராம்பிகை அம்பாளுக்கும் நந்தி தேவருக்கும் சிறப்பு அபிடேகம் நடைபெறும். அதன் பின் பிள்ளையாருக்கும், நந்தி தேவருக்கும் பூசை நடைபெறும். அதனைத் தொடர்ந்து, ஏனைய மூர்த்திகளுக்கும் வழக்கம் போல் பூசை நிகழும். அதன் பின்னர் பிரதோட நாயகருக்கும் அம்பாளுக்கும் விசேட பூசை செய்து, இடப வாகனத்தில் முதலாம் திருவீதியில் திருவுலா நடைபெற்று விழா நிறைவுறும்.

## ஏனைய விழாக்கள்

நவராத்திரி விழா, ஐப்பசி வெள்ளித் திருமுழுக்கு, கந்தசட்டி விழா, சூரன்போர்த் திருவிழா, ஐப்பசிப் பூரணையில் அன்னாபிடேகம், கார்த்திகைச் சோமவாரத் திருவிழா, விளக்கீட்டு விழா, விநாயகர் சஷ்டி விழா, நால்வர் குருபூசை விழா ஆகியனவும் வருடம் தோறும் சிறப்பாக நடைபெறும்.

## கோபுரங்கள்

பலகோடி ரூபாய் செலவில் பல ஆண்டுகளாக கருங்கல் சிற்ப வேலைப்பாடுகள் செய்யப்பெற்று அமைந்த இரு இராஜகோபுரங்கள் ஐயனாருக்கும் சிவனுக்கும் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. அவற்றின் கும்பாபிடேகம் 7-6-1998 இல் நடைபெற்றன.

சிவன் கோவிலினைச் சூழவுள்ள ஏனைய கோயில்கள்: அரசடி வைரவர் கோவில், பத்திரகாளி அம்மன் கோவில், தினகரன்பிட்டி வைரவர் கோவில், தேரடி விநாயகர் கோவில் என்பன.

## அன்னதான மடாலயங்கள்:

மாணிக்கவாசகர் மடாலயம், சிவாச்சிரமம், ஈழத்துச் சிதம்பர அறப்பணி நிலையம், நித்திய அன்னதான மடம் என்பன.

**சபைகள்** : மாணிக்கவாசகர் சபை, திருப்பணிச் சபை என்பன.

கோவில் பெயர் : காரைநகர் சிவன் கோவில்
மறுபெயர் : திண்ணபுரம் சிவன் கோவில்
சிறப்புப் பெயர் : ஈழத்துச் சிதம்பரம்
சுவாமி பெயர் : சுந்தரேசுவரர்
அம்பாள் பெயர் : சௌந்தராம்பிகை
தலவிருட்சங்கள் : 1. அரசு 2. வன்னி 3. இருப்பை
தீர்த்தங்கள்: 1. பரமானந்த கூபம் 2. சித்தாமிர்தவாவி 3. தூர்வாசசாகரம்

## ஈழத்துச் சிதம்பரம் தொடர்பான நூல்கள்

1. திண்ணபுர அந்தாதி (1897)
   நூலாசிரியர் : கார்த்திகேயப் புலவர்
   உரையாசிரியர் : கலாநிதி சொ. சிங்காரவேலன்
2. திண்ணபுரத் திருப்பதிகம்
3. திண்ணபுர ஊஞ்ச்சல்
4. பக்திரசக் கீர்த்தனைகள் (1926)
   நூலாசிரியர் : த. நாகமுத்துப் புலவர்
5. திண்ணபுர வெண்பா (1926)
   நூலாசிரியர் : ச. பஞ்சாட்சரக்குருக்கள்
   உரையாசிரியர் : பண்டிதர் க. மயில்வாகனனார்
6. காரைநகர் திண்ணபுர மான்மியம் (1960)
   நூலாசிரியர் : திரு. இ. வைத்திலிங்கம்
7. ஈழத்துச் சிதம்பரம் (1961)
   நூலாசிரியர் : சிவஸ்ரீ ச. கணபதீசுவரக்குருக்கள்
8. திண்ணபுரச் சுந்தரத் தமிழ் மாலை
9. திண்ணபுரக் கவிமலர்
10. திண்ணபுரத் திருச்சதகம்
11. ஆண்டிகேணி ஐயனார் கவசம்
    நூல்களின் ஆசிரியர்:கவிஞர் திரு. சி.பொன்னம்பலம் டீ.யு
12. ஆண்டிகேணி ஐயனாரின் அற்புத வரலாறும் ஆண்டி முனிவர் புராணமும்
    நூலாசிரியர் : கவிஞர் திரு. சி. பொன்னம்பலம் டீ.யு
13. ஈழத்துச் சிதம்பரம் (1984)
    நூலாசிரியர் : திரு சு. முருகேசு
14. ஆண்டிகேணி ஐயனார் நூலாசிரியர் : வித்துவான் மு. சபாரத்தினம்
15. திண்ணபுரச் சுந்தரேசுவரப் பெருமான் ஊஞ்சல் (1910)
    நூலாசிரியர் : வித்துவான் மு. சபாரத்தின ஐயர்
16. ஈழத்துச் சிதம்பரம் சுந்தரேசுவரன் திருப்பதிகம்
    நூலாசிரியர்:ஆசிரியர் அருட்கவி சீ. விநாசித்தம்பி
17. ஈழத்துச் சிதம்பர புராணம் (1970)
    நூலாசிரியர் : கவிசிந்தாமணி, புலவர்மணி பண்டிதர் சோ. இளமுருகனார்
    உரையாசிரியர் : பேருரையரசி, பண்டிதை இ.பரமேசுவரியார்
    பதிப்பாசிரியர் : சிவஸ்ரீ பண்டிதமணி கலாநிதி க. வைத்தீசுவரக்குருக்கள்
18. திருமுறை மலர்கள்
19. கும்பாபிஷேக மலர்கள்
20. ஈழத்துச் சிதம்பர வரலாற்றுச் சுருக்கம்
    நூலாசிரியர் : திரு. கே. கே. சுப்பிரமணியம்
21. ஈழத்துச் சிதம்பர குறவஞ்சி
    நூலாசிரியர் : சிவஸ்ரீ வீரமணி ஐயர்
22. திண்ணபுரக் கூத்தன் திருவிளையாடல்
    நூலாசிரியர் : திரு. கே. கே. சுப்பிரமணியம்
23. ஐயனார் புராணம் (2007)
    நூலாசிரியர் : புலவர்மணி பண்டிதர் க.மயில்வாகனனார்
    உரையாசிரியர் : சைவப்புலவர் சு.செல்லத்துரை

## சிவன் கோயிலின் தனிப்பெருமை

அப்பெரியார் நினைவென்கோ வவருள்ளச்
சிலையென்கொ வருளினாடல்
செப்புதிருப் பதியென்கோ சிறந்தடியா
ரானந்தத் தேனை யள்ளி
முப்பொழுது முணவைத்த நிதியென்கோ
கதியென்கோ மூதூர்த் தில்லை
அப்பனம் மையெழுந் தருளியரு ணிதியை
பாலிக்க வமைந்த கோயில்

(ஈழத்துச் சிதம்பர புராணம் -சோமாற்கந்தச் சருக்கம் பாடல் 71)

கூத்தப்பிரான் வணக்கம்

ஆர்த் தெழுந் துலகோ டுயிராடிட
நீத்தத் தண்மதி நீள்சடை யாடிட
எத்துந் திண்ண புரத்துநின் றாடிடுங்
கூத்தன் சேவடி கும்பிடு வாமரோ.

(ஈழத்துச் சிதம்பர புராணம் - பாயிரச் சருக்கம் பாடல் 4)

திருச்சிற்றம்பலம்

# அனுபவம் ஆற்றல் மிக்க சட்டத்தரணி

## தம்பையா சிறிபதி

**கனடிய வழக்கறிஞர்,**
**பிரசித்த நொத்தாரிசு**

## Thampiah Siripathy

*Barrister - Solicitor & Notary Public*

* குடிவரவுச் சட்டம், அகதி மனுக்கள், ஸ்பொன்சர், மேன்முறையீடுகள்
* காணிகள், வீடுகள், வாங்குதல், விற்றல், ஈடுகள் பதிதல்
* வியாபார ஸ்தாபனங்கள் பதிவுசெய்தல், வாங்குதல்
* குடும்பச் சட்டம் சம்பந்தமான விடயங்கள், விவாகரத்து, பராமரிப்பு, பாதுகாவல்
* குற்றவியல் சட்டம் சம்பந்தமான விடயங்கள்
* தத்துவப் பத்திரங்கள், இறுதி விருப்பாவணங்கள், சத்தியப் பத்திரங்கள் தயாரித்தல்

**Tel: (416) 759 - 4500**

**Fax: (416) 759 - 4510**

(கென்னடி சப்வேக்கு அருகாமையில்
சங்கர் அன் கோ கட்டிட மேல் மாடியில்)

2425, Eglinton Ave. E., Suite # 211
Toronto, Ontario. M1K 5G8
(Eglinton & Kennedy)

# சாந்தலிங்க இராமசாமி சுவாமிகளுக்கு முனைவர் பட்டம்

டாக்டர் சண்.சண்முகவடிவேல்



பழம்பெருமை மிக்க சென்னைப் பல்கலைக்கழகத்தின் 150ஆவது பட்டமளிப்பு விழாவில் திருக்கயிலான மரபு மெய்கண்டார் வழிவழி பேரூராதீனம் கயிலைக் குருமணி சீர்வளர்சீர் பேரூரடிகளார் சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்களுக்கு சென்னைப் பல்கலைக்கழக வேந்தர், இணை வேந்தர், துணைவேந்தர் பேரவை உறுப்பினர்கள் ஆகியோர் இணைந்து "இலக்கிய முனைவர்" எனும் மதிப்புறு விருதினை 2007ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 12ஆம் நாள் வழங்கிச் சிறப்புச் செய்தார்கள்.

அடிகளாருக்கு முது முனைவர் பட்டம் வழங்கிச் சிறப்பித்ததைப் பாராட்டும் வகையில் 15.12.2007 சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் கோவை புரந்தரராசர் கலையரங்கத்தில் பாராட்டு விழா குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம் தவத்திரு பொன்னம்பலம் அடிகளார் தலைமையில் நடைபெற்றது. திருமுறை, சமய அமைப்புகளும் தமிழ் அமைப்புகளும் இணைந்து இவ் விழாவினை நிகழ்த்தயிருந்தார்கள்.

திருப்பெருந்திரு பேரூரடிகளாருக்கு முதுமுனைவர் பட்டம் வழங்கியதைப் பாராட்டி 06.01.2008 நண்பகல 1.00 முதல் 7.00 மணிவரை கோயமுத்தூர் ஈச்சனாரி என்னுமிடத்திலுள்ள இலட்சுமி திருமண மண்டபத்திலும் பெருவிழா நடைபெற்றது.

நம் சமயத்திற்காகவும், தமிழுக்காகவும், ஒடுக்கப்பட்ட மக்களுக்காகவும் இந்தத் தள்ளாத வயதிலும் அடிகள் பெருமகனார் உலகம் முழுவதும் சென்று அரும் பணியாற்றுவதையும் கூர்ந்து கவனித்து சாந்தலிங்க இராமசாமி அடிகளாருடைய அயராத தமிழ்ப் பணிக்காகவும் சமயப் பணிக்காகவும் சென்னைப் பல்கலைக்கழகம் முதுமுனைவர் பட்டம் வழங்கிச் சிறப்பித்ததை கனடாவாழ் சைவப் பெருமக்களும் அனைத்து சைவ சமய அமைப்புகளும் பாராட்டிப் பெருமைப்படுகின்றனர்.

மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெங்கும்
அன்னை மொழியை நாளும் பொன்னென போற்றி வாழ்க

அமிழ்தெனும் தமிழைக் கற்று அருங்கலை வளர்ப்போம் நாளும்

# The Co-operators

**Insurance / Financeial Services**

உங்கள் காப்புறுதித் தேவை எதுவானாலும் குறைந்த செலவில் கூடிய பாதுகாப்புப் பெறத் தொடர்பு கொள்ளுங்கள்

## Call us for all types of Insurance

| | |
|---|---|
| ** LIFE | ** FARM |
| ** RRSP | ** BUSINESS |
| ** HOME | ** GROUP |
| ** AUTO | ** TRAVEL |

## SENTHOORAN PUNITHAVEL

**Sales Representative**

Call:
**Bus: 416 396 0707**
**Fax : 416 396 1221**

**1265 Morningside Ave, Unit 108**
**Scarborough On. M1V 3V9**

# CHIDAMBARAM TEMPLE

Dr. Shan A. Shanmugavadivel

Though the term "Koil" is the name common to all temples, "Koil" specially denotes Chidambaram. Chidambaram is the holiest shrine for the Saivites. Chidambaram, an ancient town and a centre of learning, is about 250 km from Chennai, Tamil Nadu.

"Thillaivanam" or "Thillai" is another name of this sthala. Thillai (mangrove) trees were present in large number in this region. Perum-patra-puliyur is another name to this place. This name was derived from a saint called Pulipadar (Vyagrapadar) who worshiped at this temple.

Presently this place is known as Chidambaram-Chid (knowledge), Ambaram (vast space). Ponnambalam meaning a hall or sabha, is also the name of this great sthala which was built in the 5th century A.D. and extends over 51 acres. The temple of Thillaikoothan, as Lord Siva is called here, has four towers each 135 feet high and with 13 copper finials.

The deity of this sthala is Nadaraja who dances to the rhythm of the cosmic sound "Aum" the Pranava Manthra. The dance of Nadaraja, the essence of the five sacred syllables The Ananda Thandava (Dance of Bliss), Nadaraja had been engaged in, ever since the inception of the universe, is enacted in Chidambaram for the sake of the devotees. The Lord has his abode in Thirumulattanam and Thiruchittambalam. In Thiruchittambalam, Lord abides in the inner prakaram under the golden vimanam and is accompanied by Goddess Sivakamasundari. Here the Chit sabha and Kanaka sabha of the five sabhas or halls are linked together and are known as Chittambalam and Ponnambalam.

CHIDAMPARAM TEMPLE COMPLEX



The Ponnambalam rests on 64 wooden rafters corresponding the 64 arts. There are 21,600 golden tiles on the roof, indicating the number of breaths taken by a person everyday. The 72,000 nails binding the roof represent the nadis or pulse. The five steps leading to the shrine signify the Panchakshara mantra: na-ma-si-va-ya.

The supreme God, sheltered within the heart of every man, is enshrined in Ponnambalam and to potray that, the Ambalam is designed exactly like the form of a man. The sanctum is placed slightly to the left and not in the middle and the entrances to this shrine at the sides. The Kanaka Sabha has 18 pillars representing purnans. The five pillars of the Chit Sabha indicate the 5 senses. Of the ten pillars of the Brahma pida, the lower six stand for 6 sastras and upper 4 for the 4 Vedas.

On the right of the Nadaraja is a curtain, with just a golden garland of bilva leaves indicating the God is present there as space. Chidambaram is the Akasa (space) sthala, Kanchipuram- Earth, Thiruvanaikaval- water and Thiruvannamalai- Fire. This explaisn the permeating omnipresence of God, who is formless and abides everywhere, and is referred to as the Chidambara Rahasiyam (Secret of Chidambaram). To the left of Nadaraja is Goddess Sivakamasundari.

There is a separate shrine for Goddess Sivakamasundari next to the temple tank which is called Sivaganga. Other shrines present in the temple are dedicated to Sarabeswara, Vinayaka and Subramanya.

The four Nayanmars Appar, Sambandar, Sundarar and Manickavasagar visited this temple. These saints entered through the four great gopura thresholds- Manickavasagar by the east, Sambanthar by the south, Appar by the west and Sundarar by the north.

The five assemblies or Sabhas in this holy temple are Chittrambalam, Ponnambalam, Perambalam Nritya Sabha and the Raja Sabha. In Chittrambalam, the Lord Nadaraja performs his dance. It is also known as Chit Sabha. The five functions of Lord's dance are creation, destruction, grace, dissolution and blessing.

Lord Nadaraja performs the dance in Chit Sabha, clad in tiger skin, wielding the Drum, Fire, Deer and Sula, decked with garland of serpents and left leg raised and right tramples Muyalakan.

Ponnambalam, with golden roofs, is what is the fore of Chittambalam where our Lord takes his ablutions. Perambalam is the Deva Sabha where the Pancha Murthis (five deities) are stationed. Nritya Sabha stands to the south of the flag staff of Nadaraja. It is where Lord performed the Oordhva Tandava.

The thousand pillared hall is called the Raja Sabha. On the 9the day festivals of Aani and Margazhi, Nadarajah is taken round the four mada streets in cart procession. After the procession the deity is stationed at night in this hall and at dawn sacred bath is performed. On the 10$^{th}$ day at noon the God and Goddess proceed to Chittambalam dancing their way back.

Manickavasaga Swamigal made the dumb daugheter of Buddist Lankan King gain her power of speech in this 1000 pillared hall. It is in this hall the God came in the guise of a Brahmin to record the Thiruvasakam sung by Manickavasagar and authenticated it by his signature.

Sekkizhar, the minister of Anapaya Cholan came here to write Periapuram- a compilation of biography of Nayanmars. It was customary for the Chola Kings to have their anointing in the Panchakshara steps and be crowned in this hall.

Reference: Chidambaram- Dr. S. Meyyappan, Temples of South India- Ambujan Anantharaman

# தைப் பொங்கல்

கவிநாயகர் வி. கந்தவனம்

தமிழ் மக்களின் வாழ்க்கைமுறை இயற்கை அன்னையின் அருள்வழிப்பட்டது.

இயற்கையால் முன்னேறிய மனிதன் படிப்படியாக இயற்கைச் சூழலைப் பங்கப்படுத்தி, இன்று மனித வாழ்க்கைக்கே ஊறு விளைக்கும் அளவுக்கு நிலைமை முற்றிவிட்டதை உணர்ந்து, இயற்கைச் சூழலைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டு வருவதைக் காண்கிறோம்.

இயற்கையின் முக்கியத்துவத்தைத் தமிழர்கள் அன்றே உணர்ந்தவர்கள். நெய்தல் நிலத்தின் தெய்வமாக வருண பகவானைப் பழந்தமிழர் வணங்கினர். பாலை நிலத்தவர் கொற்றவையுடன் கதிரவனையும் வழிபட்டனர். சிலப்பதிகாரத்தில் வரும் மங்கல வாழ்த்தில் திங்களும் ஞாயிறும் மாமழையும் போற்றப்படுகின்றன. திருக்குறளில் கடவுள் வாழ்த்தையடுத்து வான்சிறப்பு வலியுறுத்தப்படுகின்றது.

இன்றும் பலவகையான இயற்கை வழிபாடுகள் நடைமுறையில் இருந்து வருகின்றன. இவற்றுள் முக்கியமானது நவக்கிரக வழிபாடு. கிரகங்கள் சூரியனை மையமாகக் கொண்டவை.

சௌரம் என்பது சூரியனை வழிபடும் சமயம். தைப் பொங்கல் இவ் வழிபாட்டுடன் தொடர்புடையது. தமிழ்த் தை மாதப் பிறப்பில் வீட்டு முற்றத்தில் சூரியனுக்குப் பொங்கிப் படைக்கின்றோம். இது குறித்து இரண்டு விடயங்கன் சிந்திக்கத்தக்கன. தை மாதம் முதலாந் திகதி சூரிய வழிபாட்டுக்குரிய நாளானது எங்ஙனம்? இந்த வழிபாட்டில் பொங்கிப் படைக்கவேண்டியதன் நோக்கம் என்ன?

தை முதல் நாள் சூரியன் மகரராசியில் புகும் நாள். இது மகரசங்கிராந்தி அல்லது தைச்சங்கிராந்தி என்று அழைக்கப்படும். அதாவது, தென்னரைக்



கோளத்தில் சஞ்சரித்த சூரியன் வடக்கு நோக்கித் தோன்றும் வகையில் புவியின் சுழற்சி மாற்றம்பெறுங் காலத்தில் தை மாதம் வருகின்றது. வடக்கு நோக்கி வரும் சூரியனை வரவேற்கும் ஒரு வழிபாடாக இது அமைகிறது.

தமிழர் வகுத்த காலக் கணிப்பில் தை மாதம் உத்தராயண காலத்தின் ஆரம்பமாகும். உத்தராயணம் தேவர்களின் பகற் பொழுதாகையால் தை மாதம் அவர்களது காலைப் பொழுது ஆகின்றது. அதனாலும் தை மாதம் முக்கியத்துவம் பெறுகின்றது.

தை மாதம் முதலாந் திகதியே பண்டைத் தமிழ் மக்களின் வருடப் பிறப்புத் தினமாக முற்காலத்திற் கொண்டாடப்பட்டதென்றும் காலப்போக்கில் வருடப் பிறப்புச் சித்திரைக்கு மாற்றப்பட்ட பின்னரும் பழைய தைக் கொண்டாட்டத்தை மக்கள் கைவிடாது தொடர்ந்து நடத்தி வருகின்றனர் என்றும் கருதுகின்ற

ஆய்வாளரும் உள்ளனர். பெரும்பாலான சமய விழாக்கள் இந்துக்கள் யாவருக்கும் பொதுவாக அமைய, தைப் பொங்கல் மட்டும் தமிழருக்கேயுரிய தனித்துவமான விழாவாக இருப்பதால், இக் கருத்துப் பொருத்தமானதும் வலுவானதுமாக இருப்பதைக் காணலாம்.

கோலாலம்பூரில் 06.01.2001ல் நடைபெற்ற உலகத் தமிழ் அறிஞர்கள் மாநாடு ஒன்றில் தமிழ் தை முதலாந் திகதி தமிழ் மக்களின் வருடப் பிறப்பாகக் கொண்டாடப்பட வேண்டும் என்ற தீர்மானம் ஒன்று எடுக்கப்பட்டதையும் இந்த இடத்திலே குறிப்பிடுதல் வேண்டும்.

மேலும், சிவபெருமானின் நெற்றிக் கண் சூரியனைக் குறிப்பதால், சூரிய பொங்கல் சிவனுக்குரிய வழிபாடாகவும் கருதப்படுகின்றது. அதன் காரணமாகவும் சிவனைப் போற்றும் தென்னாட்டில் தைப் பொங்கற் கொண்டாட்டம் வளர்ந்தோங்கியிருத்தல் கூடும்.

இவ்விதம் பல காரணங்களை முன்வைக்கலா எனினும், தைப் பொங்கல் பெரிதும் ஓர் உழவர் விழா என்பது கண்கூடு. மார்கழியும் தையும் முன்பனிக் காலம். வயல்களில் நெல் கதிர்கொள்ளும் காலம். மார்கழி என்றால் மாரி கழியும் மாதம் என்று பொருள். தை என்ற சொல்லுக்குரிய பொருள்களுள் ஒளி அல்லது வெளிச்சம் என்ற பொருளும் உண்டு. சூரிய ஒளி நெல் விளைச்சலுக்கு இன்றியமையாதது. அதனால் விளைச்சல் நன்கு அமைய வேண்டும் என்று சூரியனை வேண்டுவதற்குத் தை முதலாம் நாள் ஒரு பொது நாளாகத் தெரிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

தைப் பொங்கல் அடிப்படையில் ஒரு நன்றிப் பொங்கலாகவும் அமைகின்றது. தமிழர் நன்றியறிதலைப் பெரிதும் போற்றுபவர். தினைத்துணை நன்றிசெயினும் அதனைப் பனைத்துணையாகக் கொள்ளும் பண்பினர். தமிழர் பண்பாட்டில் மனிதர் செய்யும் உதவிகளை மறவாது இருத்தலைப்போலவே இயற்கை செய்யும் உதவிகளை மறவாது இருத்தலும் முக்கிமாகும்.

இயற்கை இராச்சியத்தின் இணையற்ற வேந்தன் சூரியன். அவன் இன்றி மழையில்லை.
மழையின்றி உழவில்லை. உழவின்றி உணவில்லை. உணவின்றி உயிர் வாழ்க்கை இல்லை. அவன் இன்றி அமையாது உலகம். அதனால் அவனுக்குப் பொங்கிப் படைத்து நன்றி தெரிவிக்கப்படுகின்றது.

தைப் பொங்கல் ஒரு வழிபிறக்கும் விழாவாகவும் அமைகின்றது. தை பிறந்தால் வழிபிறக்கும் என்னும் வழக்குத் தொடர், வயல் அறுவடைகள் வீடுகளுக்கு வர மக்களின் பொருளாதார நிலை உயரும் என்பதனையே முக்கியமாக உணர்த்தி நிற்கின்றது.

பொங்கற் பண்டிகை நான்கு நாட்களை உள்ளடக்கியது. பொங்கலுக்கு முதல்நாள் வீடு வளவுகள் துப்புரவாக்குதல் நடைபெறும். இதனால் தைவருதல் என்பதற்கு சுத்தஞ் செய்தல் என்ற பொருளும் வரலாயிற்று. இந்நாளிற் பொங்கலுக்கு வேண்டிய பானை, அரிசி, பாசிப்பயறு போன்ற பொருட்களையும் பிறவற்றையும் ஆயத்தஞ் செய்யும் அலுவல்களும் மேற்கொள்ளப்படும்.

பொங்கல் நாளில் வைகறை யாமத்திலிருந்தே இல்லங்கள் குதூகலிக்கத் தொடங்கி விடும். குளித்து முழுகிப் புத்தாடை தரித்துச் சிவ வழிபாடு செய்வதுடன் கொண்டாட்டம் ஆரம்பமாகும். வீட்டு முன்றில் பெருக்கி சாணகத்தால் மெழுகப்பெற்று அலங்கரிக்கப்படும். அதில் பொங்கற்களம் அழகிய கோலங்களால் வரையறுக்கப்படும். இக் களத்தின் ஒரு புறத்தில் நீண்ட வாழை இலைகளில் நிறைகுடம் குத்துவிளக்குகள் வைத்தும் பால் பழங்கள் படைத்தும் கற்பூரம் சாம்பிராணிகள் கொளுத்தியும் பொங்கல் இனிதே நடைபெற வேண்டுமென முதலில் விநாயகப் பெருமானுக்கும் பின்னர் சூரிய பகவானுக்கும்

வழிபாடுகள் நடத்தப்படும். இதனைத் தொடர்ந்து களத்தின் மையத்தில் புதிய அடுப்பில் நீரும் பாலும் நிறைந்த புதுப்பானை ஏற்றப்படும். புதுப் பானை திரிபுண்டர சின்னங்களுடனும் மாவிலை தோரணத் துடனும் பார்ப்பதற்கு அழகாக இருக்கும்.

சூரியன் உதிக்கும் நேரக் கணக்கில் பால் பொங்கவேண்டும் என்னும் கருத்துடனேயே ஆயத்தங்கள் மேற்கொள்ளப்படுவது வழக்கம். கிழக்குநோக்கிப் பால் பொங்கி வழியுமாயின் அது சிறந்த சகுனமாகக் கருதப்படும்.

பால் பொங்கும் நேரத்தில் குடும்பத்தவர் சூழநின்று சூரியனை நோக்கித் தொழுவர். சிறுவர் சீனவெடிகளைக் கொளுத்தி ஆரவாரிப்பர். பால் பொங்கியதும் பொங்கலுக்கான பச்சை அரிசியில் ஒரு பிடியைக் கிள்ளிப் பொங்கற் பானையை மூன்றுமுறை சுற்றி எடுத்துப் பானையில் இடுவர். இக் கிரியை மூன்றுமுறை செய்யப்படும்.

பாலில் பச்சை அரிசியைப் பாசிப் பயற்றுடன் கலந்து பொங்குவது வழக்கம். இவை அவிந்துவரும் சமயத்தில் சர்க்கரை, முந்திரிகை வற்றல் முதலியவற்றைக் கலந்து பொங்கல் இனிமையாக்கப்படும். பொங்கிமுடிந்தபின் வாழையிலையில் பொங்கலைச் சூரியனுக்குப் படைத்து வழிபாடு செய்தபின் குடும்பத்தவர் எல்லோரும் கூட்டாக இருந்து பொங்கலைச் சுவைத்து மகிழ்வர்.

மூன்றாவது நாளில் மாடுகன்றுகள் வைத்திருக்கும் கமக்காரர் மாட்டுப் பொங்கல் பொங்குவர். பழங்காலத்தில் மாட்டுப் பண்ணைக்காரர் பெருஞ் செல்வந்தராக விளங்கினர். அதனால் மாடு என்ற சொல் செல்வம் என்ற பொருளைப் பெற நேர்ந்தது. பண்ணை மாடுகள் நோய்நொடி இன்றி இருக்கச் சூரியனை வணங்குந் தினமே மாட்டுப் பொங்கலாகும். தமிழ்நாட்டில் இப் பொங்கல் மாட்டுச் சவாரி, காளைகளை அடக்குதல் முதலாய விளையாட்டுகளுடன் சிறப்பாகக் கொண்டாடப்படுவது வழக்கம்.

நான்காம் நாள் உறவினர் தரிசனம், விளையாட்டு நிகழ்ச்சிகள், கலைவிழாக்கள் என்பன நடைபெறும். இக்காலத்திற் பல இடங்களில் தைப் பொங்கல் விழா சுருக்கம் பெற்றுப் பொங்கிப் படைக்கும் முக்கிய நிகழ்வுடன் அல்லது மாட்டுப் பொங்கலுடன் முடிந்துவிடுவதுமுண்டு. பொங்கல் அன்று மாலையே கலை விழாக்களை நடத்திமுடிப்பதுமுண்டு.

தைப் பொங்கல் வீடுகளிலன்றிக் கோயில்களிலும் கொண்டாடப்படும் விழாவாகும்.

பொங்கல் என்னுஞ் சொல் அருமையானது. சொல்லுகின்ற வாயையும் நினைக்கின்ற மனத்தையும் இனிக்கச் செய்வது. பொங்கல் பல வகைப்படுமாயினும் தைப் பொங்கற் பண்டிகை தனித்துவம் வாய்ந்தது. உலகத்துக்கு உணவூட்டும் உழவர் விழா ஆதலாலும் தமிழர் வளர்த்த பழம்பெரும் விழா ஆதலாலும் இன்றும் மற்றைய விழாக்களிலும்பார்க்கத் தமிழ்கூறும் நல்லுலகெங்கணும் மிகுந்த உற்சாகத்துடன் கொண்டாடப் பட்டுவரும் சிறப்பாலும் இது தமிழ் மக்களின் தலையாய விழாவாகின்றது.

பொங்கற் பானை பொங்கும்பொழுது வெறும் பால்மட்டும் பொங்குவதில்லை. பாலுடன் சேர்ந்து நன்றி பொங்குகிறது, அன்பு பொங்குகிறது, அறம் பொங்குகிறது. பொங்கல் விழாவால் உறவு வளர்கிறது. ஒற்றுமை ஓங்குகிறது. தமிழர் பாரம்பரியமும் பண்பாடும் பேணப்படுகின்றன. இத்துணைப் பெருமைகள் நிறைந்த இத் திருநாளைக் கொண்டாடிப் பூரித்து வாழ்வோமாக!

# SINNA S.RAJAGOPAL

## SALES REPRESENTATIVE

**Realty Inc., Brokerage**
**Independently Owned & Operated**



உங்கள் உள்ளக் கனவு
இல்லக் கொள்வனவா?
இல்லை,
உங்கள் இல்ல விற்பனவா?

துரித கதியில் விற்பனையை நாம் முடிப்போம்
சிரமம் செலவுகளை உங்களுக்கு நாம் குறைப்போம்
வரவில் காற்பங்கை தவறாது நாம் கொடுப்போம்
அவலும் அகதிகட்கு வீடமைய வழி சமைப்போம்!

**B: 416 264 0101**
**C: 416 727 8647**
**E: sinnarajagopal@hotmail.com**

**262 Markham Road, Scarborough On**
**M1J 3C5**

உ
சிவமயம்

# சைவம் காத்த மங்கையர்

கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
ஸ்ரீ துர்க்கா தேவஸ்தானம், தெல்லிப்பழை.

மூன்றாவது நூற்றாண்டு காலம் முதல் பதினான்காவது நூற்றாண்டுவரை பெண்மணிகளின் வரலாற்றையும் பெருமையையும் எடுத்துக் கூறியவர் சோழநாட்டு முதலமைச்சர் சேக்கிழார் பெருமான்.

சேக்கிழார் பெருமான் முதலமைச்சராக இருந்துவந்த சோழநாட்டிலே அந்நாட்டு மன்னன் சீவகசிந்தாமணிக் காப்பியத்தைத் தினந்தோறும் கற்றுப் போற்றிவந்தபோது, சிற்றின்பரசமே அக்காப்பியத்தின் பெருகிய பாகமாதலின், அச்சிற்றின்ப நுகர்வை மன்னன் விரும்புவதைத் தவிர்க்க வேண்டுமெனக் கருதி, "மன்னா, சிற்றின்ப போதை தரும் இந்நூலைக் கற்பது உம்போன்ற மன்னனுக்குப் பயன் இல்லை. பேரின்பத்தை நுகர்தலே பொருந்தும்" எனக் கூறினார். தமது அமைச்சர் கூறும் அறிவுரையைக் கேட்ட மன்னன், "அப்படியானால், அம்மாதிரியான ஒரு நூலை நீரே வடித்துத் தாரும்" எனக் கட்டளையிட்டார்.

மன்னனின் பதிலைக் கேட்ட அமைச்சர் சேக்கிழார் பெருமான், அன்றிலிருந்து சரியாக ஓராண்டு நிறைவில் 4253 நிகரற்ற பாடல்களைப் புனைந்து பெரியபுராணம் என்னும் வரலாற்று நூலை யாத்தனர். தமிழ்ப் பெண்கள் மணவாழ்க்கையில் ஈடுபடாது தனித்து நின்றும், மணம்புரிந்துகொண்டு கணவனுக்குப் பின்னணியிலிருந்தும் அவர்களுக்கு முன்னணியிலிருந்தும் அக்காலத்தில் சைவ சமய பண்பாடுகளுக்கு ஏற்பட்டிருந்த ஆபத்தை பாண்டிமாதேவி, திலகவதியார், காரைக்கால் அம்மையார் ஆகிய மங்கையர் திலகங்கள் தடுத்து நிறுத்திய வரலாற்றைப் பெரியபுராணம் விரித்துரைக்கிறது.

இன்று தமிழரின் பண்பாட்டுக் கலைக் கருவூலம் என்று போற்றப்படும் தஞ்சைப் பெரிய கோவிலை அன்று ராஜராஜசோழன் எழுப்பக் காரணமானவர் அம்மன்னனின் தமக்கையார் பெரிய குந்தவை தேவியாராவார். அவ்வாறானதொரு கலைக்கோயிலை எழுப்ப வேண்டுமென்று ராஜராஜசோழன் கனவிற்கூடக் கருதியதில்லை. தனது அக்கா குந்தவையாரின் வேண்டுகோளை நிறைவேற்றவே அந்த அரும்பெரும் கலைத் திறனை வெளிப்படுத்தும் பெரிய கோயிலை எழுப்பினான். உலகம் வியக்கும் வண்ணம் உருவாகிய அக்கலைக்கோயிலை எழுப்பக் காரணமாக ஒரு பெண்ணே பின்னணியில் இருந்தார் என்பதை எண்ண மங்கையர் பெருமை மகுட மணிபோல் ஒளிர்வதை வியக்காமல் இருக்க முடியாது.

சைவம் காத்த பெண்மணியினரில் கணவனுக்குப் பின்னிருந்து செயற்பட்ட மங்கையர் திலகம் இயற்பகை நாயனாரின் மனைவியை முன்னிறுத்திப் பார்க்கலாம். இயற்பகை நாயனார் இயற்கைக்கு மாறான செயல் ஒன்றைச் செய்தமையால் அவ்வாறு அழைக்கப்பட்டார். இந்த இயற்பகையார் எது கேட்பினும் இல்லை என மறுத்துக் கூறார். அந்தக் கோட்பாட்டையே நியமமாகக் கொண்டிருந்த அவருக்கு ஒரு சோதனை வந்தது. அடியார் ஒருவர் அவரது இல்லம் அணுகி, "இயற்பகையாரே, எனக்கு ஒன்று வேண்டும். இல்லை என்னாது

உம்மால் அதைத் தர இயலுமோ?"என்று வினவினார். அப்போது இயற்பகையார், "தாங்கள் கேட்பது என்னிடம் இருப்பின் தவறாது தருவேன்" எனப் பதில் இறுத்தார். "அவ்வாறாயின் யான் உம் மனைவியை வேண்டி வந்தனன்" எனப் பதிலுரைத்தார் அடியவர். செவிமடுத்த இயற்பகையார், சற்றும் தயங்காது "மெய்த் தவத்தார்க்கு யான் ஒன்று ஈந்தனன்" என்று விடை பகர்ந்தார். தனது மனைவியைத் தா எனக் கேட்ட அடியாருக்கு அதைத் தந்தேன் என உடனடியாக விடை பகர்ந்த இயற்பகையார் தன் மனைவியின் அனுமதிகூடப் பெறாது அவள் கற்பு நெறியால் கணவனுக்கு மாறுபடாள் எனக் கருதி தந்தனன் என்றார். மனைவியை அழைத்து செய்தியைக் கூறினார் இயற்பகையார். அதற்கு அம்மாது சிரோமணி "கற்புநெறி தவறாது கணவனே காப்போன் எனச் சுற்றித் திரியும் எனக்கு இந்தச் சோதனையோ?" என ஆண்டவனை நினைத்து அடியாரின் பாதங்களில் தொட்டு வணங்குகிறாள். அதன்மூலம் கணவன் கட்டளைக்கு அவர் மனைவி கீழ்ப்படிந்து விட்டதை உணர்த்துகிறார். அடிகள் மனைவியை அழைத்துச் செல்லும்போது இயற்பகையார் ஒரு முறைகூடத் திரும்பிப் பார்க்கவில்லை. ஏனெனில் இப்போது மாற்றான் மனைவி ஆயிற்றே. இதுகண்டு அடிகள் வடிவில் வந்த ஆண்டவன் அப்பெண்ணைத் திரும்பவும் கணவனிடம் செல்லுமாறு கட்டளையிட்டு மறைந்தார். இங்கே பொதிந்து கிடக்கும் சைவசமயத் தத்துவம் பண்பாட்டிற்கு மனைவியாகிய பெண்ணே காரணமாகிறாள்.

திலகவதியார் தன் தம்பிக்காகவே கன்னியாக உயிர் வாழ்ந்திருந்தார். தம்பி திருநாவுக்கரசரோ தனது சைவசமயத்தைப் புறக்கணித்துச் சமண சமயத்தைத் தழுவி நின்றார். திலகவதியார் மனம் வெதும்பி, ஆண்டவனிடம் முறையிட்டுக்கொள்ளத் திருநாவுக்கரசரும் சூலை நோயினால் பீடிக்கப்படுகிறார். வேறுகதியின்றி வீடுதிரும்பும் நாவுக்கரசர் அக்காள் காலில் வீழ்ந்து மன்னிப்புக் கோரி சைவசமயத்துக்கு மீண்டும் திரும்புகிறார். பின்னர் நாவுக்கரசர் மூவாயிரம் பாடல்களைப் பாடியருளி, சைவசமயக் கோட்பாடுகளை நிலைநிறுத்தினார். இவ்வாறு தமிழுக்கும் சைவத்திற்கும் ஒருங்கே பணிபுரிய, நாவுக்கரசரின் உடன் பிறப்பான தூண்டு தவவிளக்குத் திலகவதியாரே காரணமானார்.

கணவனுக்கு முன்னின்று சைவம் காத்த பெருமை காரைக்கால் அம்மையாருக்கு உரியது. இவ்வம்மையாரே சைவம் காத்த மூத்த அம்மையாராவார். கணவனால் தெய்வமெனக் கையெடுத்துக் கும்பிடப்பெற்ற நிலையில் அவனை விட்டு விடைபெற்றுக்கொண்டு அவனுக்கு முன்னணியில் சென்று பணியாற்றிச் சமயங் காத்த பெண்மணியானார்.

உ



# இரு பரமஹம்சங்கள்



- திருமதி சகிதேவி கந்தையா -

அமைதியின் இருப்பிடமாய், அன்பின் பிறப்பிடமாய் இப்பிரபஞ்சத்தைப் புள்ளிகளாய் நிறைக்கும் மக்கள் தொகையினரின் சிந்தனையைப் புடம்போட்டு நன்செய்து புதுப்பித்து, வாழ்க்கையெனும் பழைய அகராதிக்கு ஒரு பதிய அர்த்தம் கொடுக்கும் மகான்கள் - பரமஹம்சர்கள் - காலத்திற்குக் காலம் அவதரித்துக்கொண்டு இருப்பதால்தான் இவ்வுலகு நிலைநிற்கிறது என்றால் அது மிகையல்ல. ஹம்சம் என்றால் அன்னம். பரமஹம்சம்...? பரமஹம்சம் எனும் ஒரு ஐதீகப் பறவை இருந்திருக்கிறது. அன்னங்களில் அது மேலானது(பரம) என்றும் இப்பறவை நிலத்தைத் தொட்டதில்லை என்றும் கூறப்படுகிறது. வானில் உயரே உயரே பறந்து வட்டமிட்டு, வானில் முட்டையிட்டு, வானில் முட்டைகள் குஞ்சாய், வானில் குஞ்சுகள் பிறந்தவுடன் பறந்து - இப்படிப் பரமஹம்சமாய் உயர்ந்து மேல் நோக்கி, என்றும் நிலத்தைத் தொடாது வாழ்பவர் பரமஹம்சர்கள் - மகான்கள். இவர்கள் உளமெனும், மனமெனும், சிந்தனையெனும் பரமஹம்சங்கள்; என்றும் கீழ் நோக்கிப் பறப்பதில்லை. ஆனால், இவர்கள் மக்கள் சேமத்துக்காய் திருவுரு தாங்கி, தம் செய்ய திருப்பாதங்களை உலகில் பதித்த தடங்கள் எமக்கு வழிகாட்டும் நல்வழியாகின்றன. தடம்புரளும் வாழ்க்கை; தடம்புரளும் மனம்; தடம்புரளும் செயல்கள். இவை தான் நாம் அன்றாடம் எதிர்கொள்ளும் அனர்த்தங்கள். இந்த அனர்த்தங்களைச் சங்கரிக்க அவதரித்த பரமஹம்சர்கள் இருவர் இங்கு விவரிக்கப்படுகிறார்கள்.

நினைத்தாலே முத்திதரும் தலம் திருவண்ணாமலை. பரந்த வெளியில் தலை நிமிர்ந்து தனித்து நிற்கும் சிறு குன்று அருணாசலம். அருண என்பது உஷாக்காலம். எம் வினைகட்கு விடிவாய், அருளுக்கும் அமைதிக்கும் உஷாவாய் விளங்கும் இத்திரு அசலம் ஞான ஹம்சங்களை அடைகாக்கும் கணணி (Incubator) ஆகவும் இருந்து வருவது மிக அற்புதம்.

திருவண்ணாமலையை நினைக்கிறோம். எம் கண்முன் வருபவர் இரமண மகரிஷி அவர்கள். இத்திருத்தலத்தை பலகோடி மக்களை நித்தம் நினைக்கவைத்த பெருமையின், நாளும் வலம் வர வைத்த ஆத்மீகத் திண்மையின் ஊற்று, இம் மகரிஷியின் அருள் சொரியும் மௌனத் திருநோக்கா, முகம்பொழி கருணையா, இல்லை, குழந்தையின் குமிண் சிரிப்பா? சொல்லத்தான் மிக வளமான எம் மொழியில் வார்த்தைகள் இல்லை!

மதுரையில் திருச்சூரில் டிசம்பர் 29, 1879இல் சாதாரண அந்தண குடும்பத்தில் பிறந்த வெங்கடராமனுக்கு 17 வயதில் ஒரு பயம் பிடித்தாட்டியது. இறப்பு! தன் மனக் குமுறலை உய்த்துணர, ஒரு சிறு அறையில் பூட்டிக்கொண்டு நிலத்தில் 'உடலை'க் கிடத்தி, மூச்சை நிறுத்தி 'சவமானான்'. அப்பொழுது அந்த இளைய வயதில் உண்மையெனும் பேரொளி அவன் உள்ளத்தில் பளிச்சிட்டது. அந்த உண்மை **'என் உடல் இறந்துவிட்டது, ஆனால் நான் வாழ்கிறேன்'**. மருள வைக்கும் இந்தப் பேருண்மையை விளங்கிக்கொள்வோமா? இந்த உடல் வேறு. மடிந்து அழியும் தன்மையது. ஆனால் ஆத்மா? எங்கும் நிறைந்திருக்கும் பேரருளின் தன்மையது; அழிவு அற்றது; உடல் எம் கர்மாவைக் கரைக்கும் ஒரு சாதனம். உணர்ந்த இந்தப் பேருண்மையின் கனம், இதன் தனித்துவம், இவரின் வாழ்க்கையின் போக்கையே மாற்றியது, வெங்கடராமன் பரமஹம்சமாய் தன் உள்ளத்தில் நிறைந்திருந்த திருத்தலம் அண்ணாமலையை நோக்கி பறந்து சென்றது.

திருஅண்ணாமலை ஈசர் திருக்கோவிலில் குகை போல் அமைந்த பாதாளலிங்க அறையில் - மிகச் சிறியது – தன்னை அடைத்துக்கொள்கிறார். பூச்சிகள் கடித்துப் புண்ணானது உடல். வாலிபர் கல்லெறிந்து துன்புறுத்தினர். உணவு யாராவது ஊட்டினால் ஒரு கவளம். செப்தெம்பர் 1896 – மார்ச்சு 1899 வரையும் இங்ஙனம் இருந்த இவரை வலுக்கட்டாயமாக சுப்பிரமணியர் சந்நிதியில் கொண்டுவந்து விட்டனர் நிர்வாகிகள். சனக்கூட்டம் பிடிக்காத இவர், கோவில் பூங்காவிலும் பின்னர் அங்குள்ள சிறு பிள்ளையார் கோவிலிலும் சென்றிருந்தார்.

தாயார் அழகம்மை, இவர் திருவண்ணாமலையில் இருப்பதறிந்து அங்கு வந்து, தன்னுடன் வரும்படி கெஞ்சியும், மிக அன்புடன் பிறப்பு இறப்பின் உண்மை நோக்கை எடுத்துரைத்து அவரை அனுப்பிவிட்டு, தன் ஆத்ம தாகத்தைத் தணிக்கும் பேரூற்றான அருணாசலத்தை அடைந்து பவளக் குன்றிலும் பின் விருப்பாக்சக் குகையிலும் இருந்து மோனத் தவம் இயற்றினார். இருபதே வயதான வெங்கடராமன் ரமண மகரிஷியாய், சுடரும் தீபமாய் திக்கெல்லாம் அருள் ஒளிபரப்ப அடியவர் கூட்டம் இவரை வட்டமிட்டு மொய்த்தது.

1922இல் இறந்த தாயாரை மலையடிவாரத்தில் சமாதி வைத்து, அடியார் சிறு கொட்டில் ஒன்றை அமைத்தனர். இதன் மேல் காலப்போக்கில் சிறு லிங்கம் தாபிக்கப்பட்டு, பின் இன்றைய இரமணாசிரமம் எழுந்தது. இரமணர் மலையிலிருந்து அடிக்கடி தாயார் சமாதிக்கு வருவதுண்டு. 1922இல் கந்தசாமி என்பவர், மலையின் மேற்பகுதியில் வசதியான ஆச்சிரமம் ஒன்றை அமைத்து அங்குவந்து இவரைத் தங்கச் செய்தார். திருவண்ணாமலை செல்லும் பாக்கியம் முதுமைப் பருவத்தில் எமக்குக் கிட்டியது. கரடுமுரடான மலை உச்சி, வெயிலின் உக்கிரம், மிகப் பிரயத்தனத்துடன் ஏறினோம். என்ன ஆச்சரியம்! வெயிலின் கொடுமையோ, ஏறிய களைப்போ கொஞ்சம்கூடத் தெரியவில்லை. சலசலத்தோடும் சிறிய ஓடை, குடை நிழற்றும் பரந்த மாமரம், பெருஞ்சாந்தி மென்பனியாக எமைச் சூழ்ந்து பரவசப்படுத்தியது. எங்கும் கிடைக்காத நிம்மதி இங்குண்டு. திருவண்ணாமலையில் காலடி எடுத்துவைத்த நாள்முதல் இறுதியில் சோதியாய் அதில் கலந்த 60 வருட கால எல்லையில் ஒரு நாளாவது அவர் வேறெங்கும் சென்றதில்லை.

இவர் குருவும் அருணாசலமே. மிகமிகச் சாதாரண எளிய வாழ்க்கை முறை. வறியோர் வந்து முதல் உண்டு முடித்தபின் அடியவர் உடன் இருந்து இவர் உணவு கொள்ளுவார். எவரைக் கண்டும் (திருடர்கள் உட்பட) இவர் முகம் சுளித்ததில்லை. கோவண உடை. மாமுனிவர்களில் இவர் தனித்து நிற்பவர். சகல சீவராசிகளிடமும் இவர் பேரன்பு காட்டியதால் ஆசிரமப் பசு லட்சுமி இவர் மடியில் தலை வைத்து தெய்வீகம் உற்றது. குரங்குகள் இவரைக் குருவாகக் கொண்டு தம் குறைகளைத் தீர்த்துக் கொள்ளும். நொண்டிக் குரங்கு இவர் தோழன். எவரிடமும் என்றும் எதுவும் வேண்டாத இவர், காசைக் கையால் தொடாத இவர், அணில்கள் 'ஆசை'ப்பட்ட முந்திரிப் பருப்புகளை ஒரு முதலாளியைக் கொண்டு வரச்செய்து துண்டுகளாக நறுக்கிக் கொடுத்து மகிழ்ந்தார்.



இந்தக் குழந்தையுள்ளம் பெரு ஞானத்தின் இருப்பிடம். இவர் வாழ்ந்த காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் எம் குருபரன் யோகசுவாமிகளும், பாண்டிச்சேரியில் ஓர்வில் (Aurville) எனும் பிரமாண்ட தியான மண்டபம் அமைத்த அரவிந்தரும், இந்த மிலேனியத்தின் இரண்டாவது மாமனிதன் - அன்பு, அகிம்சை, சத்தியம் என்ற நீள்வட்டப் பாதையில் உலகைச் சுழலவிட்ட மகாத்மா காந்தி, வட இந்தியாவில் கிரியா யோகத்தின் செல்வர் பரமஹம்ச யோகானந்தா எனும் நால்வர் இவ்வுலகின் உய்வுக்காய் அவதரித்தனர். யோக சுவாமிகள் - இரமணர் சந்திப்பு புனித கங்கா, யமுனா சங்கமமாக, அடியூற்றாகப் பரக்கும் சரஸ்வதியாய், பெரும் புரிந்துணர்வும் பக்திப் பிரவாகமும் அன்பும் அலை புரண்டு, மௌனமெனும் பெரும் சக்தியின் கலப்பாயிற்று.

இரமணருக்கு அந்திம காலத்தில், பாரிய புண் (Malignant) கையில் கொடுமையாக வருத்தியது; முழங்கால்கள் கடுமையாக வலித்தன. 'ஞானிக்கு உடம்பு இருப்பது தெரியாது' எனச் சிரிப்பு மாத்திரம் வெளிக் காட்டுவார். இரமணர் எழுத்திலோ பேச்சிலோ நம்பிக்கையற்றவர். மௌனமே இவர் மோனம். எழுதிய நூல்கள் மிகக் குறைவு. அருணாசல அட்டகம், உள்ளது நாற்பது, உபதேச உந்தியார் என மிகச் சிலவே. மேலை நாட்டவரான - போல் பிரண்டன், ஒஸ்போன், கொகன் ஆகியோர் இவருடன் இருந்து எழுதிய உரையாடல்கள், இவர் கூற விழைந்த தத்துவங்களை எமக்கு எடுத்துக் கூறுகின்றன.

1950 ஏப்பிரல் 14. எமக்காய் அவதரித்த பரமஹம்சம், தன் இறக்கைகளை அகல விரித்து ஒளிரும் நட்சத்திரமாய் அருணாசல உச்சியில் மறைந்தது. இவ்வற்புத தரிசனத்தை சென்னையில் பலரும், பம்பாயில் அடியவர் ஒருவரும் கண்டு பரவச துக்கத்தில் ஆழ்ந்தனர். மறுநாள் பத்திரிகைகள் (கல்கி அதிபர் உட்பட) தலைப்புச் செய்தியாக கண்ணீரால் வரைந்தன.

அதே திருவளர் திருநகர் அண்ணாமலையில் 1978ம் ஆண்டு மிக ஆனந்தமாய் மலர்ந்தது ஜனவரி 1ம் நாள். அன்று நள்ளிரவில் மிகப் பிரகாசமாய் உதித்த துருவ நட்சத்திரம் வையகத்திற்கே திசைகாட்ட அவதரிக்கிறதென்பதை அறியாத சைவ வேளாண் மரபில் வந்த அருணாசலம் - லோகநாயகி தம்பதியினர் தம் குழந்தையின் பிறப்பில் குதூகலித்தனர்.

சிறுதேர் உருட்டும் சிற்றில் பருவத்திலேயே இராஜசேகரன் எனும் அந்த ஞானக் குழந்தை விளையாடியது கடவுள் உருவங்களுடன்; தண்டைகள் ஒலிசெய நடந்தது - அருணாசலேஸ்வரர் திருக் கோவிலுக்கு! வீட்டிற்கு அண்மையில் வசித்த திரு.ரகுபதி யோகி என்பவர் இவரது உடல், உளத் திண்மைக்கு வகைசெய்தவர். சித்தரெனினும், ‘சித்துக்களில் மயங்காதே; ஞானத்தை நோக்கு’ என, சிறு பராயத்தில் இவரை ஆற்றுப்படுத்தியவர். குப்பம்மாள் என்ற மூதாட்டி இவரது சந்நியாசத்திற்கு முன்னின்று உதவியவர். இங்ஙனம் இரமண மகரிஷி பெருமைசெய்த அருணாசலத் திருத்தலம் இராஜசேகரனையும் ஞானமெனும் பெருவெளியில் வலம்வர வைத்த உந்துதளம் ஆயிற்று.

தன்னைத்தானே உணரும் பெரு முயற்சியில் 17 வயதேயான இராஜசேகரன் இந்தியா, நேபாளம் முழுவதும் 70,000 மைல்கள் – பல ஆயிரம் மைல்களைக் கால்நடையாகவே – சுற்றித் திரிந்தார். பார்த்த புனிதக் காட்சிகள், சந்தித்த ஞானிகள், அடைந்த அனுபவங்கள், இராஜசேகரனை பரமஹம்ச நித்தியானந்தா ஆக்கிற்று. அண்ணாமலையில் உதித்த துருவ நட்சத்திரம், காட்சிக்கெளிதாய், தன் தியான நெறிமுறைகளால், பொருள் பொதிந்த பேச்சுத் திறனால், இன்று உலகளாவிய மக்கள் தொகையினர்க்கு அவர்கள் போகவேண்டிய திசையைச் சுட்டிக்காட்டி ஒளிவீசி வலம் வருகிறது. இவர் அடிக்கடி கூறுவது -

“நான் உங்கள் முன் நிற்பது நான் கடவுள் என்று காட்டுவதற்கு அல்ல; நீங்கள் கடவுள் என்று நிரூபிப்பதற்கு”.

இரமணரைப் போலல்லாது, இவர் பேச்சிலும் எழுத்திலும் நம்பிக்கையுள்ளவர்.

1. Guaranteed solutions

2. Tools for Joyful living

3. Uncommon Solutions to common questions

எனப் பல நூல்களை ஆங்கிலத்திலும் தமிழிலும் எழுதியுள்ளார்.

நித்தியானந்த தியான பீடம் (Life Bliss Foundation) 2003ம் ஆண்டு இவரால் தாபிக்கப்பட்டு, இன்று 1000 நிலையங்கள் 30 நாடுகளில் உள்ளன. தலைமை நிலையம் பங்களூரில் உள்ளது.

காசியில் இறந்தால் மோட்சம் என்பார்கள். இரமண மகரிஷியைப்போல் இவர் உள்ளத்திலும் ‘இறப்பு’ தலைதூக்குகிறது. இவரே தன் அனுபவத் தைக் கூறுகிறார்.

மரணபயம் எல்லோரையும் பிடித்தாட்டுவதுண்டு. அபிராமிப்பட்டரே 'வெவ்விய காலன் என்மேல் வரும்போது வெளிநிற்கவே' என அபிராமியை வேண்டுகிறார். இதிலிருந்து விடுபட வேண்டும். காசி செல்கிறார்; கங்கைக் கரையில் பிணங்கள் எரிக்கப்படும் இடத்தில் வந்து தானும் அமர்கிறார். வேறு மாநிலங்களில் இறந்த உடல்களைக்கூட நம்பிக்கையின் நிமித்தம் இங்கு கொண்டுவருவதால், ஒன்றன்பின் ஒன்று, ஒன்றன்பின் ஒன்று என இடைவிடாது சடலங்கள் தீக்கிரையாகின்றன. மரணம் பயப்படவேண்டிய ஒன்றா? இல்லை; இல்லவே இல்லை. நியதி நடந்தேறும் நிகழ்வே மரணம். மகாதேவன் தன் சக்தி உமை அம்மைக்கு எடுத்துரைக்கும் சிவசூத்திரம் நினைவில்வர, ஒரு கோவில் சிறு கோபுரம் ஏறி அங்கு ஒரு பக்கத்தில் அமர்கிறார். மனோ சக்தியால் சிவ சூத்திரத்தில் குறிப்பிட்டபடி முதலில் கைகளில் 'அனல் ஏந்தி' கையை எரிக்கிறார். பின் படிப்படியாக உடல் உறுப்புகள் அனைத்தும் எரிகின்றன. உண்மை பளிச்சிடுகிறது. காசியில் 'இவர் இறக்கிறார்'. 'என் உடல் இறந்துவிட்டது. ஆனால் நான் வாழ்கிறேன்.' இரமணர் உணர்ந்த அதே தத்துவம், அதே ஆனந்த நிலைப்பாடு. முழுவதும் உண்மை என உணர்ந்த பரமஹம்சம், நித்திய ஆனந்தம் யாவரும் பெற தன்னாலியன்ற பணிகளைத் தொடங்குகிறது - ஜெகமெல்லாம் இருபதே வயதில்! பணிகள் சில – பல யோகா பயிற்சிகளை இவரே வரிசைப்படுத்தி, அவற்றினால் பல பயன்தரும் பயிற்சிப் பாசறைகள் நடாத்துகிறார்.

1. சக்தி சுபுரான (சக்தி உடல்கள் மூன்றின் தன்மைகளை வெளிக்கொணருதல்)
2. ஆத்ம சுபுரான (5 கோஷங்களிலிருந்து எமை மீட்டு ஆனந்த நிலைக்கு எடுத்துச் செல்லல்)
3. பக்தி சுபுரான (பக்தி நிலைப்பாட்டை மேம்படுத்தல்)
4. தியான சுபுரான (தியானத்தால் எம் எண்ணங்களை நீக்கி வீடுபேறடைதல்)
5. ஆரோக்கிய சுபுரான (ஆரோக்கிய நிலைப்பாட்டைப் பேணுதல்)
6. ஆனந்த யோகம் (நித்திய ஆனந்தத்தைப் பெறுதல்)

மணிவாசகர் திருவெம்பாவையில் 'வேதப் பொருள்பாடி அப்பொருளாமாபாடி' என அன்றே பாடியருளினார். இன்று பரமஹம்ச நித்தியானந்தாவால் வேதப் பொருளையும் கூறமுடிகிறது. அப்பொருளாம் இறை தத்துவத்தையும் மிகுந்த விஞ்ஞான விளக்கத்துடன் கூற முடிகிறது. வேத முறைப்படி பூஜை செய்யும்பொழுதே, அதன் பின்புலமான தத்துவத்தையும் எடுத்தியம்புகிறார். இதைத்தான் மேலை நாட்டவர் இன்று விரும்புகிறார்கள்.

இவருடைய பரந்த சுயநோக்கு அனுபவங்களால், மிக இளம் வயதிலேயே (29) முழுமை அடைந்தவர் இவர். "உண்மைப் பொருள் ஒன்றே; வெவ்வேறு சமயங்கள் வெவ்வேறு விதமாக ஒன்றையே கூறுகின்றன" என்ற வேதாந்த தத்துவ விளக்கத்தை இவரால் ஆணித்தரமாகக் கூறமுடியும். இதனால், அமெரிக்காவில் புளோரிடா மாநிலத்தில் 12 ஏக்கர் நிலப்பரப்பில் மிக விஸ்தாரமாக அமைந்த வேதாந்த சர்வ கலாசாலையை (Vedic University) மேற்கொண்டு நடாத்தும் தலைமைப் (Chairman) பொறுப்பை ஆகஸ்ட் 25, 2007 இல் இவரிடம் கையளித்துள்ளனர். நிச்சயமாக, இதற்குப் புதிய விஞ்ஞான அங்கீகாரமுள்ள சிறந்த திருப்பத்தை இவரால் தரமுடியும் என்ற நம்பிக்கை இவர்கட்கு உண்டு.

# Nanthee & Sons

## DESIGN & INSPECTION

**Nanthee Veluppillai** P.Eng., C.B.C.O
(Home Inspector)



Inspection within 48 hrs, & 7 days a week

Residential, Commercial, Industrial Inspection
Design Services for Addition & Alterration, Basement

41 Longbow Square, Scarborough, Ont. M1W 2W6
Tel: 416- 496 9595
E-mail : Nanthee@hotmail.com

# Love Everlasting

- Kumar Punithavel

When we refer to a religious person we call him as a 'God fearing person'. In fact we all begin our spiritual life with the fear of God. It is very much akin to our fear of our parents. When we were young we respected our parents because of the fear of punishment. But as we grow older this respect out of fear matures in to respect out of love.

In ones spiritual life too the fear of God must give way to love of God. But many of us die with fear of God. It is an unfortunate fact but true. The great Hindu saint Thirumular says on the 270th verse;

**'The ignorant prate love and Siva are two**
**But none know that love alone is Siva**
**When realizing love and Siva are the same**
**Love as Siva they ever remain'**

If God and love are the same then why fear God? Another great Saint Sunderer on his first verse of liturgies, the first word used to address Lord Siva is 'Pitha'. The meaning of this word in Tamil is two fold. One is 'mad man', and the other one is the loving person. We have the common dictum in Tamil; 'Petra manam pithu pillai manam kalu' which means the mind of the parent is all loving, but the mind of the child is hard as a stone. Because of love the parents mind is all forgiving, but the child's mind being engulfed with fear will be unforgiving like a stone. God being all love and forgiving, St Sunderer felt fitting to address him 'pitha'.

As observed earlier we all at the beginning fear God. Out of fear of his punishment we atone by performing penance. We believe harsher the penance lesser will be the punishment by God. We even believe such penance exonerate our sins. Making use of these beliefs, the priests made lists of atonements for different sins. However St Thirumular says;

**'You may turn your bone to fuel, your flesh to meat,**
**And let them roast and sizzle to the gold-red blaze;**
**But unless your heart melts in the sweet ecstasy of Love,**
**My Lord, my treasure-trove, you ne'er can. 272 Thirumanthiram**

So why fear and make penance and suffering, why not love the God. Life is not supposed to be suffering, but good living. By surrendering to God with love we are to gain in the bargain says St Manickavasagar. He says this is one time man can make God the looser. On verse 22.10 of Thiruvasagam the saint sings;

**'What Thou hast given is Thee; and what hast gained is me:**
**O Sangara, who is smarter one?**
**I have obtained the rapturous bliss that knows no end;**
**Yet now, what one thing hast Thou gained from me?'**

It is by surrendering ones self with love to God he gains the love of God. Once he has gained the love of the all mighty one; there is none that cannot be achieved. Shed the fear and start loving God.

We frequently say 'love is blind'. When some one loves a person he turns a blind eye to the loved ones faults. The parents loving their child, never sees the child's faults! God is full of love to his devotees. And this makes him forgive the faults and guide the devotee to a righteous path. When some one loves God he will be guided by the divine power to a righteous life. In the great Hindu liturgy Geeta verses 9.29-32 is as follows;

**I am the same to all beings; I favour none and reject none.**
**But those who worship me live within me and I live in them.**

**Even the heartless criminal, if he loves me with all his heart,**
**Will certainly grow into sainthood, as he moves towards me on his path.**

**Quickly that man becomes pure, his heart finds eternal peace.**
**Arjuna, no one who truly loves me will ever be lost.**

**All those who love and trust me, even the lowest of the low-**
**Prostitutes, beggars, slaves- will attain the ultimate goal.**

These lines were written four thousand years ago. And to this day it stands a beacon for salvations from all sufferings. The great saint Valmiki who gave the awe inspiring epic Ramyana to the world was a high way robber, until the day he met St Narathar. It was the grace of God that made the chance meeting St Narathar who is love personified. The best salvation to the humanity is to love God. This love should not be with selfish desires, but for loves sake. In T. Coleridge's "Ancient Mariner" is the verse;

**"He prayeth well, who loveth well**
**Both man and bird and beast**
**He prayeth best. Who loveth best**
**All things both great and small:**
**For the dear God who loveth us.**
**He made and loveth all."**

The easy way for salvation is to win the love of God and not fear him. One should remember that the God is the ruler of the universe except a small portion. That small portion is the each individual's soul. He pervades everything, except the souls of individual. If he is to enter the individual's soul it is only possible when he is invited to. He never violates the sanctity of the individual's soul. He patiently waits for the invitation. Ones invited he will happily fill the soul with his all pervading glow of love and take him to salvation. God is not the enemy of the soul for it to fear God, but it is the best friend possible for the soul.

Unfortunately many proponents of religion goes around bad mouthing the loving God as evil dictator who punishes anyone who does not follow certain rules of the religion. God is not the discipline teacher of a secondary school or a dictator. Man suffers due to his own action and not because God punished him. He harvests what he sows. Those who have an axe to grind put the onus of the suffering on God. Our elders say in Tamil 'Oruvaruku kadavulil payapakthi vendum'. The meaning of this dictum is 'one should have fear and love in God'. What begins as fear must mature as love. So let us all grow out of fear of God and start loving God. My best wishes for your love affair which will be there even after death. It is the **love ever lasting.**

# நல்ல மனம் உண்டாம்

கலாநிதி திருமதி ம.சண்முகதாஸ்,
யாழ். பல்கலைக்கழகம்.

இன்றைய உலக வாழ்க்கையில் ஏற்படும் இடர்களையும், துயரங்களையும், இன்னல்களையும் இடுக்கண்களையும் அவலங்களையும் போக்குவதற்கு என்ன வழியென்பதே பலருடைய கேள்வியாக உள்ளது. அதற்காக எமது முன்னோர் காட்டிய வழிபாடு என்னும் வழிகாட்டலைப் பற்றி மீண்டும் எண்ணிச் செயற்பட வேண்டியுள்ளது. குறிப்பாக எமது இளைய தலைமுறையினரும் சிறாரும் தமது எதிர்கால வாழ்வியல் பற்றி மிகுந்த சிக்கல்களையே எதிர்கொள்ள வேண்டி உள்ளனர். இவர்களது வாழ்வியலைச் சீர்செய்ய வேண்டிய முதன்மையான கடமையொன்று பெற்றோருக்கும் நலன்விரும்பிகளுக்கும் காத்துநிற்கின்றது. அதற்காக எமது முன்னோரின் வழிபாடு பற்றிய கருத்துக்களின் தடங்களைத் தேடிச்செல்ல வேண்டியுள்ளது. அத்தகையதொரு புதிய தேடுதலின் போது கிடைத்த செய்திகளின் சுருக்கமான தொகுப்பே இக்கட்டுரையின் உள்ளடக்கமாக அமைகின்றது.



'வழிபாடு' பற்றிய தெளிவினை ஏற்படுத்தும் பயிற்சிக் களங்களாகக் கோவில்கள் அமைந்துள்ளன. அங்கு உறவும், ஊரும், நட்பும் ஒருங்கிணைந்து செயற்படுவது வழிபாட்டின் அடிப்படையான நோக்கமாக உள்ளது. பலருடைய நலங்களைப் பேணும் பண்பாடு கோவில் வழிபாட்டின் மூலம் பயிற்றப்பட்டது. தொடக்க காலத்தில் மனிதன் இயற்கையை, அதன் பேராற்றலைக் கண்டு பணிந்து வழிபடத் தொடங்கினான். அந்த இயற்கையின் ஆற்றல்களைத் தனது தலைமுறையினர்க்கும் எடுத்துரைத்து வழிகாட்டினான். இத்தகைய வழிகாட்டிகளை இளந் தலைமுறையினரும் சிறாரும் வணக்கத்திற்கு உரியோராகக் கருதி வாழ்ந்தனர். கோயில் என்னும் அமைப்புத் தோன்றிய போது 'வழிபாடு' என்னும் வாழ்வியற் செயற்பாடு மாற்றமடையலாயிற்று. இயற்கையின் பேராற்றல்களை இறை உருவங்களைக் கண்டு வழிபடும் புதியதொரு மரபு தோன்றியது. ஆனால் தொடக்க நிலையில் கோயில் என்பது

பெருங்கட்டட அமைப்பாக இருக்கவில்லை. சிறிய கொட்டில் அமைப்பாகவே இருந்தது. பெருமரத்தடியிலும், மலையிலும், நீர்நிலைகளிலும் ஆற்றங்கரைகளிலும் இறைவன் உறையும் மாடங்கள் அமைக்கப்பட்டன. அங்கு ஆண்டுக்கொருமுறை மக்கள் சென்று இறைவனைத் தரிசனம் செய்து வழிபட்டனர் தமது விளைபொருட்களை மடையிட்டுப் பரவினர். பின்னர் அதனைப் பகுத்துண்டு மகிழ்ந்தனர். இதனால் 'வழிபாடு' என்னும் செயற்பாடு 'மடையிடல்' என்னும் செயற்பாட்டுடன் இணைந்து 'திருவிழா' என விழாநிலையில் நடைபெறலாயிற்று.

இத்தகைய வழிபாட்டு நடைமுறை வளர்ச்சியில் இன்று விநாயகர் வழிபாடு முதன்மை பெற்றுள்ளது. வீடு,கோயில்,சமூகம் என்ற பல்வேறு நிலைகளிலும் 'விநாயகர் வழிபாடு' தொடக்கவழிபாடாகச் செயற்படுத்தப்படுகிறது. இந்நிலை ஏன் உருவாயிற்று என்ற கேள்வியும் எம் இளந்தலைமுறையினரால் எழுப்பப்பட்டு வருகிறது. பண்டைய தமிழ் இலக்கியக்குறிப்புகள் சில இக்கேள்வியைத் தெரிவுபடுத்துவனவாக உள்ளன. மக்களிடையே பரவலான வழிபாட்டு நடைமுறைகளைப் பற்றி அறிவதற்கு புராண இதிகாசக் கதைகளும் உதவுகின்றன விநாயகர் புராணம் விநாயக வழிபாடு பற்றிய தகவல்களைத் தருகின்றது. தனக்கு மேலாக எவரும் இல்லாது தானே தனி முதல்வனாக விளங்குபவர் விநாயகர். அவர் விக்கினங்களை நீக்கும் கடவுளாக வழிபடப்படுவதால் விக்னேஸ்வரர் என்றழைக்கப்படுகிறார். பிள்ளையார், கணபதி, கஜமுகன், பிரணவமூர்த்தி, வேழமுகன், கரிமுகன் எனப்பல்வேறு பெயர்களும் பெற்றுள்ளார். விநாயகருடைய பெருமைகளை அதர்வவேதத்தில் உள்ள கணபதி உபநிடதம் கூறுகிறது. ஆகமங்களில் கணபதி பற்றிய செய்திகள் உள. காரணாகமம் 16 கணபதிகள் பற்றியும் பஞ்சபக்த விநாயகரையும் அவரது பஞ்சமுக தியானம், பிரதிஷ்டை பற்றியும் கூறுகிறது. விநாயக பரத்துவம் விநாயகமூர்த்தங்களின் வரலாற்றையும் திருவருட் சிறப்பையும் கூறுகிறது.

தேவாரம் பாடிய அடியார்களும் ஔவையார், நக்கீரர், கச்சியப்பசிவாசாரியார், ஆதிசங்கரர் போன்றவர்களும் விநாயகரை வழிபட்டுப்பல பாடல்களைப் பாடியுள்ளனர். எத்தகையதொரு செயற்பாட்டைச் செய்யப்புகினும் விநாயகரைப் பணிந்து அதனைச் செய்யும் மரபும் நிலைபெற்றுள்ளது. செய்யுள் இலக்கியங்கள் இயற்றுவோர் விநாயகரை வழிபட்டுக் காப்புச் செய்யுள் பாடித்தொடங்கும் இலக்கியமரபும் உண்டு. தேவாரங்களில் கணபதி என்ற பெயரில் விநாயகர் குறிப்பிடப்படுகிறார். இதனால் 'காணபத்யம்' என்ற வழிபாட்டு மரபும் தோன்றியது. தோற்றநிலையில் யானைமுகம் விநாயகரை வேறுபடுத்திச் சிறப்புறச் செய்தது. வேழ்முகத்தான், கடமாமுகத்தான், கடக்களிறு, தும்பிமுகத்தோன்றல், ஐங்கரத்து ஒரு களிறு, கரியானை, நற்குஞ்சரக்கன்று, கைப்போதகம், கரிமுகன்,சித்திவேழம் என வழங்கப்படும் பெயர்கள் இதற்குச் சான்றாகும். பஞ்சமுகவிநாயகர் தோற்றமும் விநாயகருக்குச் சிறப்பாகக் கூறப்படுகிறது. மகாகணபதி, சித்தகணபதி, சக்திகணபதி, மோட்சகணபதி, வித்யா கணபதி என்ற ஐந்து முகங்களோடு பஞ்சமுக விநாயகர் விளங்குகிறார்.

விநாயகர் வழிபாடு பற்றிய தனிப்பாடல்கள் ஒன்று வழிபாட்டினால் வரும் பயன்களைத் தொகுத்துக் கூறுகிறது.

"ஓர் ஆனைக் காவில் உறை என் ஆனைக் கன்றளித்த
போர் ஆனைக் கன்றுதனைப் போற்றினால் - வாராத
புத்திவரும் பக்திவரும் புத்தி உற் பத்தி வரும்
சத்திவரும் சித்திவருந் தான்.

அழகிய திருவானைக் காவில் என் தாயாகிய பெண் யானை வடிவுடைய உமையம்மையாருக்கு மகனாகத் தோன்றிய விநாயகப் பெருமானை வழிபட்டால் அறிவு உண்டாகும். அன்பு உண்டாகும் நன்மக்கட்பேறு உண்டாகும். எண்ணிய செயல்களை முடிக்கும் ஆற்றல் உண்டாகும். எடுத்த செயல்களில் வெற்றியுண்டாகும். சிறார் கல்விப்பயிற்சியில் எளிய முறையில் நீதிநெறிகளைப் புகட்டும் நூல்கள் நம்முன்னவரால் இயற்றப்பட்டுள்ளன. ஆனாலவை முதியோரும் கற்றுப்பயனடையத் தகுந்தவையாய் உள்ளன. இவற்றுள் ஔவையார் இயற்றிய ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வாக்குண்டாம், நல்வழி என்னும் நான்கு நூல்களும் அதிவீரராம பாண்டியரின் வெற்றிவேற்கையும் குமரகுருபர சுவாமிகளின் நீதிநெறி விளக்கம் சிவப்பிரகாச சுவாமிகள் இயற்றிய நன்னெறி என்பன எக்காலத்துக்கும் ஏற்ற கருத்துக்களைக் கூறும் நூல்களாகும். இவற்றுடன் உலக நாதபண்டிதர் இயற்றிய 'உலகநீதி' என்ற நூலும் பொதுவான பல நல்ல கருத்துக்களைச் சிறாருக்கு இயம்புகிறது. இந்நூல்களுக்கு இயற்றப்பட்ட கடவுள் வாழ்த்துப் பாடல்கள் விநாயகர் பெருமையை உணர்த்துகின்றன.

"பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரன்
சரண அற்புத மலர் தலைக்கு அணிவோமே"
(வெற்றிவேற்கை)

"உலகநீதி புராணத்தை உரைக்கவே
கலைகளாய் வரும் கரிமுகன் காப்பு"
(உலகநீதி)

"மின் எறி சடாமுடி விநாயகன் அடிதொழ
நன்னெறி வெண்பா நாற்பதும் வருமே"
(நன்னெறி)

"பாலுந்தெளி தேனும் பாகும் பருப்பும் இவை
நாலும் கலந்து உனக்கு நான் தருவேன் - கோலம் செய்
துங்கக் கரி முகத்துத் தூமணியே – நீ எனக்குச்
சங்கத் தமிழ் மூன்றும்தா"
(நல்வழி)

"வாக்குண்டாம் நல்ல மனம் உண்டாம் மா மலராள்
நோக்கு உண்டாம் மேனி நுடங்காது – பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கையான் பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு"
(வாக்குண்டாம்)

மேற்காணும் பாடல்களில் ஔவையாருடைய பாடல்கள் சிறுவர் உள்ளத்தில் வழிபாடு பற்றியதொரு தெளிவை ஏற்படுத்துவனவாக உள்ளன. பால், தெளிந்ததேன், பாகு, பருப்பு என்னும் நான்கு சுவையான பொருட்களைக் கொடுத்து சங்கமித்தமிழான இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழையும் தரவேண்டுமென ஔவையார் வேண்டுகிறார். ஏதாவது பொருளைப் பெறவிரும்பும் சிறுவர் தம்மிடம் உள்ளதைக் கொடுத்தும் வாங்கலாம் என்ற எண்ணமுடையவர். இச்சிறுவர் உளவியலை ஔவையார் மனங்கொண்டு கடவுள் வாழ்த்துப் பாடலை இயற்றியுள்ளார். வாய்க்குச் சுவையான பொருட்களைக் கொடுத்து விநாயகரிடம் தமிழறிவைப் பெறலாம் எனச்சிறுவருக்கு வழிபட வழிகாட்டுகிறார். விநாயகர் சிறுவர் மனதைக் கவரும் வடிவம் கொண்டவர். யானை என்னும் பெரிய விலங்கு சிறுவர் மனதில் வியப்பை ஏற்படுத்துவது. எனவே 'யானை முகம்' கொண்ட விநாயகரையும் பேராற்றல் படைத்தவராகச் சிறுவர் எண்ணுவர் எனவே இக்குழந்தை உள்ளத்தின் இயல்பை நன்குணர்ந்து

கடவுள் வாழ்த்தை ஔவையார் பாடியுள்ளார். தாய்மைப்பண்புடன் சிறுவரை வழிபாட்டிற்கு ஆற்றுப்படுத்துகின்றார். சிறுவர் நான்கு பொருள் கொடுத்து மூன்று தமிழைப்பெறலாம். இந்த வியாபார நோக்கைச் சிறுவருக்குப் புகட்டலாமா எனச்சிலர் வினவக்கூடும். ஆனால் இது வியாபாரநிலையன்று. நிலையற்ற வயிற்றுக்கு நாளும் வழங்கும் இனிப்பான பொருட்களை விட நிலையான செவிக்கு வழங்கும் அறிவே நன்மை தரும் என்பதைக் காப்புச் செய்யுளிலேயே புலப்படுத்துகிறார். கோலம் செய்த யானைமுகத்தையுடைய விநாயகரைச் சிறுவர் மனங்களிலே பதிய வைக்கிறார்.

விநாயகவழிபாடு இளைஞர் வாழ்வியலையும் சீர்படுத்தும். இதனை ஔவையாருடைய "வாக்குண்டாம்" என்னும் கடவுள் வாழ்த்துப்பாடல் நன்குணர்த்துகிறது. வழிபாடு என்ன நன்மைகளைச் செய்யும் என வரிசைப்படுத்திக் காட்டியுள்ளார். மனம், வாக்கு, காயம் என்னும் மூன்றினாலும் வழிபாடு மேற்கொள்ளப்படவேண்டும். மனதில் இறையாற்றலை நினைந்து சொற்களால் வாழ்த்தி பூக்களை இட்டு வழிபடும் மரபு நீண்ட காலமாகவே நடைபெற்று வருகிறது. ஆனால் அவ்வழிபாட்டு நடைமுறையை இடைவிடாது செய்யவேண்டும். விநாயகரை மலரிட்டு இறைஞ்சும் பழக்கத்தை நாளாந்தம் கடைக்கொள்ள வேண்டும். அது வாழ்வியலில் ஒரு ஒழுங்கை நிலைநிறுத்தும். சொல்வளம், மனவளம், செல்வவளம் என்பவற்றைத்தரவல்லது இடையறாத வழிபாடாகும். நாள்தோறும் மலர்பறித்து இட்டு, சொல்மாலையால் ஏத்தி வழிபட எல்லாம் கிடைக்கும். இது ஒரு பயிற்சி நெறியாக அமையவேண்டும் என்பதையே ஔவையார் குறிப்பிட்டுள்ளார் விநாயகரின் தோற்றத்தையும் நிறத்தையும் குறிப்பிட்டு மலர் சாற்றிமேலும் அழகுபடுத்தி வழிபடும் முறைமையையும் நினைவூட்டுகிறார். இளமைக்காலம் அழகைநாடி அலையும் பருவமாகும். மனதை வயப்படுத்தி விநாயகரை மேலும் அழகுபடுத்திப் பார்க்கும் போது மனம் பரவசப்படும். அப்பரவசமே வழிபாட்டு நெறியில் ஈடுபடச்செய்யும் வாழ்வியலில் இறுதிவரை வழிபாடே துணைநிற்கும் என்பதை ஔவையார் நன்கு உணர்த்தியுள்ளார்.

இன்று இவ்வழிபாட்டின் தொடர்ந்த பழக்கமாக எதையும் எழுதும் போது பிள்ளையார் சுழிபோட்டு எழுதும் நிலை காணப்படுகிறது. இது விநாயகரை வணங்கிச் சுழியைப் போடுவதன் மூலம், மனம் ஒரு வரையறையுள் நின்று செயற்பட வாய்ப்பு உண்டாக்குகிறது. கோயில் வழிபாட்டிலும் விநாயகரை முதலில் வழிபடும் மரபு தொடர்கிறது. 'வேழமுகப்பாட்டு' என்னும் பாடல் சிறுவர் விநாயகரைத் தொழும் போது கூட்டுநிலையில் பாடுவதற்கு ஏற்றது. இப்பாடல் கூறப்பட்டுள்ள விடயங்கள் விநாயகர் பெருமையை யாவரும் அறிய உதவுகின்றன. மேலும் இப்பாடல் சிறுவர்களின் தமிழ்மொழிப் பயிற்சிக்கும் நன்கு உதவும்.

"சிந்தித்தவர்க்கு அருள் கணபதி சயசய
சீரிய ஆனைக் கன்றே சயசய
அன்புடை அமரர்கள் காப்பாய் சயசய
ஆவித்துணையே கணபதி சயசய
இண்டைச் சடைமுடி இறைவா சயசய
ஈசன் தந்தருள் மகனே சயசய
உன்னிய கருமம் முடிப்பாய் சயசய
ஊர் நவசந்தி உகந்தாய் சயசய
எம்பெருமான் இறைவா சயசய
ஏழ் உலகும் தொழநின்றாய் சயசய
ஐயா கணபதி நம்பியே சயசய
ஒற்றை மருப்புடைவித்தகா சயசய

ஓங்கிய ஆனைக்கன்றே சயசய
ஒளவியம் இல்லா அருளே சயசய"

இப்பாடலில் தமிழ் உயிர் எழுத்துக்களை முன்னிறுத்தி வழிபட வழிகாட்டப்பட்டுள்ளது. விநாயகர் வழிபாடு இப்பாடலில் விளக்கப் பெற்றிருக்கும் முறைமை மொழிக்கல்விப் பயிற்சிக்கும் வழிகாட்டுவதாய் அமைந்துள்ளது.

மக்கள் வாழ்வியலில் நிழல்தரு மரங்களினடியில் விநாயகர் உறைவதாக நம்பப்படுகின்றது. இன்னும் தெருவோரங்களிலும் நீர்நிலைகளின் கரையிலும் விநாயகர் எழுந்தருளியிருப்பார். விநாயகர் வழிபாட்டின் பரவலாக்கம் மக்களிடையே பரந்திருப்பதைக் கபிலதேவநாயனார் பாடலும் தெளிவுபடுத்தியுள்ளது.

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லவன்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து.

மக்களுடைய வெம்மையான துன்பங்களைப் போக்குவதற்கு நாள்தோறும் வழிபாடு செய்யும் மனப்பயிற்சி இன்றியமையாதது. விண்ணுக்கும் மண்ணுக்கும் நாதனாக விளங்குகின்ற விநாயகர் எல்லையில்லாத ஆற்றலுடையவராகக் கருதப்படுகிறார். பக்தியோடு வழிபடுவோரை விநாயகர் காப்பாற்றுவார் என்ற நம்பிக்கையும் மக்களிடையே வலுப்பெற்றுள்ளது. திருமந்திரம் இந்நம்பிக்கையை வருமாறு கூறுகிறது.

"ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக்கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றனே".

இப்பாடலில் விநாயகர் 'நந்திமகன்' எனக் குறிப்பிடப் பட்டுள்ளார். திருமந்திரம் திருமூலரால் பாடப்பட்டது. பத்தாம் திருமுறையாக வகுக்கப்பட்டுள்ளது பதினோராம் திருமுறையில் கபிலதேவநாயனார் இயற்றிய மூத்தநாயனர் திருவிரட்டை மணிமாலை, அதிரா அடிகள் இயற்றிய மூத்த பிள்ளையார் திருமும்மணிக்கோவை, நம்பியாண்டார்நம்பி இயற்றிய திருநாரையூர் விநாயகர் திருவிரட்டைமணிமாலை போன்ற நூல்கள் விநாயகரின் சிறப்புகளை விரிவாய்ப்பேசும் நூல்களாகும். விநாயகர் வழிபாட்டினால் பெறும் சிறப்புக்களைப் பின்வரும் பாடலும் கூறுகிறது.

"திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும்பெருக்கும் உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனைமுகத்தானைக்
காதலால் கூப்புவர் தங்கை"

இக்காப்புச் செய்யுள்; நிகழ்ச்சி தடங்கலின்றி இனிதே முடிதற்பொருட்டுப் பாடப்படும். அதற்கு விநாயகரையே வேண்டிப்பாடும் மரபு இன்றுவரை நிலைத்துள்ளது. முற்காலத்தில் சிவன் அல்லது திருமாலையே வணங்கிப்பாடிய பின்பு நூலை எழுதுவர். இடைக்காலத்தில் நூற்கடவுள் வணக்கமாகப் பிள்ளையாரைப் பாடும் வழக்கம் தோன்றியது. ஆனால் ஒளவையார் பாடிய இப்பாடல்கள் சற்று வேறுபட்டமைந்துள்ளன.

"ஆத்திசூடி அமர்ந்த தேவனை
ஏத்தி ஏத்தித் தொழுவோம் யாமே"

(ஆத்திசூடி: கடவுள் வாழ்த்து)

"கொன்றை வேந்தன் செல்வன் இணை
என்றும் ஏத்தித் தொழுவோம் யாமே"

(ஆத்திசூடி: கடவுள் வாழ்த்து)

சிவனைக் குறிப்பிட்டு விநாயகரை ஒளவையார் வணங்கும் நிலை இங்கு உணரப்படுகிறது. சிறுவர்க்காக இயற்றப்பட்ட இவ்விருநூல்களும் நீதிநெறிகளைப் புகட்டும் நோக்குடையவை. ஆத்திசூடி இரண்டு சீர்களால் ஆனது. கொன்றை வேந்தன்

ஒவ்வோர் அடியாக அமைந்தது. இளம் சிறுவர் மனதில் விநாயகர் பற்றிய எண்ணத்தைத் தெளிவுபடுத்த முயன்ற ஔவையார் காப்புப்பாடல்கள் காலத்தை வென்றுநிற்கும் பாடல்களாகும். பிற்காலத்தில் எழுந்த தமிழ் நூல்களில் விநாயவழிபாடு சமூகநிலையில் நடைபெறவேண்டியதென வற்புறுத்தப்படுகிறது. பெரியபுராணம், கந்தபுராணம், கோயிற்புராணம், விருத்தாசலபுராணம், சேக்கிழார் நாயனார் புராணம் போன்ற நூல்களிலே இணைந்துள்ள விநாயகர் வணக்கப் பாடல்கள் இக்கருத்தை விளக்கும் நல்ல சான்றுகளாய் உள்ளன.

"எடுக்கு மாக்கதை யின்றமிழ்ச் செய்யுளாய்
நடக்கு மேன்மை நமக்கருள் செய்திடத்
தடக்கை யைந்துடைத் தாழ்செவி நீண்முடிக்
கடக்களிற்றைக் கருத்துளி ருத்துவாம்"

(பெரியபுராணம்)

இங்கு சேக்கிழார் தான் இயற்றப்போகும் பெரியதொரு நூல் நன்கு நிறைவேறவேண்டிக் காப்புச் செய்யுளை விநாய வணக்கமாகப் பாடியுள்ளார். ஔவையார் சங்கத்தமிழில் ஒன்றான இயற்றமிழ் அருள வேண்டுமெனக் கேட்கிறார். சேக்கிழார் பாரிய முயற்சிக்கு விநாயகனை மனத்துள் இருத்திச் செயற்படுவதே நன்று என நம்பிப்பாடுகிறார். அவர் மனத்துள் இருக்கும் உருவத்தைச் சொல்லோவியமாக முதற்பாடலிலே எழுதிவிடுகிறார். மனத்தால் வழிபடும் சமூகம் ஒன்றின் பிரதிநிதியாகச் சேக்கிழார் விளங்குகின்றார்.

"மண்ணுல கத்தினிற் பிறவி மாசற
எண்ணிய பொருளெலாம் எளிதின் முற்றுற
கண்ணுதல் உடையதோர் களிற்று மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவோம்"

(கந்தபுராணம்)

இங்கு கச்சியப்பர் தாம் எண்ணியவற்றை எளிதிற் பெறுவதற்கு வழி காட்டுகிறார். களிற்று முகமுடைய விநாயகனின் மலரடிகளைப் பணிந்து வழிபட்டால் மண்ணுலக வாழ்வில் குற்றமின்றி வாழமுடியும். கச்சியப்பரின் பக்தி பணிந்து வாழும் சமய வாழ்வியலைச் சமூகத்திற்கு எடுத்துக்காட்டுகிறது. உலக வாழ்வியலில் நினைப்பவை கைகூட விநாயக வழிபாடே சிறந்தது எனக்கச்சியப்பர் இயம்பியுள்ளார். "மலரடி பணிந்து போற்றுவோம்" என்னும் தொடர் அவர் மனித சமூகத்தை வழிபாட்டின்பாற் செலுத்த விழைவதை விளக்கி நிற்கிறது.

திருவிளையாடற் புராணம் வழிபாட்டை எவ்வாறு முன்னெடுக்க வேண்டுமென்பதை விநாயவணக்கப் பாடல் மூலம் தெளிபடுத்தியுள்ளது.

"உள்ளமெனுங் கூடத்தில் ஊக்கமெனுந்
தறி நிறுவி யுறுதியாகத்
தள்ளரிய வன்பெனுஞ் தொடர்பூட்டி
யிடை படுத்தித் தறுகட் பாசக்
கள்ள வினைப் பசுபோதக் கவளமிடக்
களித்துண்டு கருணையென்னும்
வெள்ளமதம் பொழி சித்தி வேழத்தை
நினைந்து வருவினைகள் தீர்ப்பாம்"

(திருவிளையாடற்புராணம்)

இப்பாடல் வழிபாடு செய்வதற்குரிய பயிற்சிநெறிகளை விளக்கியுள்ளது. வழிபாடு என்பது சிறுவயதில் பெரியோரைப் பார்த்துச் செய்யும் நடைமுறையாக அமையலாம். ஆனால் வளர்ந்தவர்களிடையே வழிபாட்டுணர்வு தோன்றச் சில ஒழுங்குமுறைகள் பேணப்பட வேண்டும். உள்ளத்தை முதலிலே பக்குவப்படுத்தவேண்டும். அதில் ஊக்கத்துடன் செயற்படுவதற்கான உணர்வை வளர்க்கவேண்டும். உள்ளத்திலே அன்பு என்னும் தொடர்பாடல் மூலம் வினைகளையும் பாசத்தையும்

வேரறுக்கவேண்டும் அப்போது வேழமுகத்து விநாயகனின் கருணையை நாம் உணர்ந்து கொள்ளலாம். விநாயகன் நினைவால், வருகின்ற வினைகளை எல்லாம் களையும் ஆற்றலைப் பெறமுடியும். இத்தகைய உயர்ந்த மனப்பக்குவம் பெற்ற சமூகம் ஒன்று உருவாகினால் மக்கள் வாழ்வியல் சீராய் நடக்கும்.

எனவே இன்றைய காலகட்டத்தில் விநாயவழிபாடு பல ஐயங்களை இளைஞரிடையே தோற்றுவித்திருப்பதற்கு முக்கிய காரணம் தெளிவின்மையே. கடவுள்வழிபாடு இயற்கையானது நமது முன்னோரின் வாழ்வியலனுபவத்தாலும் எழுத்துப்பதிவுகளாலும் தொடர்ந்துவருவது. எம்முடைய மனத்தைப் பக்குவப்படுத்தும் பண்புடையது. நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் எனப்படும் பஞ்சபூதங்களால் உருப்பெற்ற இவ்வுலகத்தின் சீரான இயக்கத்தை விநாயகர் வழிபாடு நன்கு உணர்த்துகிறது. உருவவழிபாடு தோன்றுவதற்கு முன்னரே உள்ளத்தில் இயற்கையின் வரம்பிலா ஆற்றலைப் பதித்துக்கொள்ள 'விநாயகர்' என்ற கருத்துத் தோன்றியிருக்க வேண்டும். பின்னர் ஆற்றல் பொருந்திய களிற்றின் முகமும் ஐந்து கரமுமுடைய உருவம் தோன்றியது. கணங்களின் தலைவனாய், விக்கினங்கள் தீர்ப்பவனாய் பிள்ளையாராய் இன்று பல உருவில் விநாயகரை வழிபாடு செய்கிறோம். அதனைத் தொடர ஆற்றுப்படுத்திய கவிஞர்களில் பாரதி பாடிய விநாயகர் நான்மணிமாலை பாரத சமுதாயத்தை வழிபாட்டு நெறியில் செலுத்த விரும்பிப் பாடிய பாமாலையாகும். தன் வாழ்க்கையில் களிப்புடன் இருக்க கணபதியிடம் கேட்டவரம்! வருமாறு அமைகிறது.

"மணக்குள விநாயகா வான்மறைத் தலைவா
தனைத்தான் ஆளுந் தன்மை நான் பெற்றிடில்
எல்லாப் பயன்களும் தாமே எய்தும்
அசையா நெஞ்சம் அருள்வாய் உயிரெலாம்
இன்புற் றிருக்க வேண்டி நின் இருதாள்
பணிவதே தொழிலெனக் கொண்டு
கணபதி தேவா! வாழ்வேன் களித்தே"

வழிபாடு பற்றிய உறுதியான நினைப்பே வாழ்வைச் செம்மை நெறியிற் செலுத்தும். ஔவை அன்று சொன்னதை பாரதியும் உணர்ந்து பாடினான். உலகம் உள்ளவரை வழிபாடு ஒன்றே மக்கள் மனதைச் சீர்செய்யும். உள்ளத்தில் மகிழ்வைப் பரப்பும்.

# வாழ்வியற் சிந்தனைகள் (சிவபாலன்)

* மேன்மையான எண்ணங்களால்தான் சிறப்பான வாழ்க்கை அமைகிறது.
* எல்லா மனிதர்களையும் நேசிக்கும்போதுதான் ஆனந்தம் தோன்றுகிறது.
* பிறருக்கு வழிகாட்டியாக அமையும்போது வாழ்க்கையின் அர்த்தம் புரிகிறது.
* உனது மனமும் உடலும் உங்களுக்கு முழு ஒத்துழைப்புத் தர வேண்டும். அப்போதுதான் உனது விருப்பம் நிறைவுபெறுகிறது.
* நீங்கள் உள்ளுக்குள் அமைதியாகவும், ஆனந்தமாகவும் இருந்தால்தான் உங்களால் மற்றவர்களுக்கு உதவமுடியும்.
* சந்தோசமாக வேலைசெய்யும்போது வெற்றி கிடைக்கும்.
* கடுமையாக வேலைசெய்வதைவிட, கவனமாக வேலை செய்யவேண்டும்.
* நீங்கள் திருந்தும் வரை எந்த மதமோ, கடவுளோ குருக்களோ குருவோ உங்களை மீட்கமுடியாது.

# DILANI GUNARAJAH





## Real Estate

**(Residental & Commercial - Purchase, Sale, Mortgages)**

வீடு, வர்த்தக நிலையம் வாங்குதல், விற்றல், அடைமானம் வைத்தல்

## Barrister & Solicitor

**Languages: Tamil, Sinhala & English**

## Family Law

**(Divorce, Custody, Agreements, Support)**

குடும்பம் தொடர்பான வழக்குகள் விவாகரத்து, பிள்ளைகள் பராமரிப்பு

## Business Law

**(Purchase, Sale, Incorporation)**

வாணிபச் சட்டங்கள் சம்பந்தமான விடயங்கள்

## Estate Law

**(Continuing Power of Attorney for Property/Personal Care, Wills, Estate Administration)**

உயில் தத்துவப் பத்திரம் சம்பந்தமான விடயங்கள்

## Immigration Law

**(Sponsorship, Independent, Refugee, Appeal, Humanitarian & Compassionate Applications)**

# Tel: 416 755 7777

**Fax: 416 288 8633**

**2401, Eglinton Ave. E. Suite # 210,**

Toronto, ON M1K 2N8

Email: dilani@bellnet.ca

# குறைகள் அருக... இறையே வருக...!

கனக மனோகரன் - துணைத் தலைவர், கனடா இந்து மாமன்றம்

நல் மனிதர் கோவில்
நற் கனிகள் காவில்
பல் துலங்கும் ஆலில்
பனி உறங்கும் பூவில் 1

துறையில் ஒதுக்கிடம்
துணிகள் வெளுக்கிடம்
இறையின் இருப்பிடம்
நிறைவு பெருக்கிடம் 2

வேதன் முழு முதன்
வேதனை களை பவன்
நாதன் இணை இலன்
நாளும் துணை உளன் 3

விக்கினம் களை நாயகன்
விக்கின வி நாயகன்
நற்குண அவன் தாயவள்
நம்துயர் களை தூயவள் 4

செந்தூர் முருகன்
செம்மால் மருகன்
நொந்தார் பிணிகள்
நோய்செய் இனியன் 5

இறைவன் கந்தன்
எவர்க்கும் சொந்தம்
பறைய நந்தன்
இறையின் மைந்தன் 6

திருகு தாளம்
அழிவு ஆயுதம்
திருகை லாயம்
திகழு மாலயம் 7

ஏழையின் சிரிப்பு அது
இறையவன் ரசிப்பது
பாவிகள் கொடுப்பது
தேவியும் வெறுப்பது 8

யாழில் குழலில்
இறைவன் உறைவான்
பாவை தமிழில்
கேட்டால் வருவான் 9

கந்தன் உறையுள்
கந்தல் உடையும்
அந்தம் தனை இல்
சுடரிடம் சுடலையும் 10

பெற்றவர் கொடுவினை
பிள்ளைகள் அறுவடை
கொற்றவன் பணிவிடை
கொடுத்திடும் நனிகொடை 11

முற்பகல் நல் வினை
பிற்பகல் நம் துணை
நற்குண மனை துணை
நமக்குநல் வழி துணை 12

களவினில் வருவது
நிறையினும் நிலைக்காது
கடவுளர் தருவது
குறையினும் பிழைக்காது 13

ஆலயம் செல்வார்
காதகம் செய்தால்
பாதகம் கொள்வார்
பலனெதும் கொள்ளார் 14

களவு அட்டையால்
வரவு பெற்றவர்
இறை கை விட்டதால்
இழவு உற்றனர் 15

கஞ்சா கடத்திட
அஞ்சான் லாபம்
துஞ்சான் சபித்திட
மிஞ்சிடும் பாபம் 16

அடக்கம் காவான்
அறிஞன் ஆகான்
கடக்கு வழியில்
இடக்கி விழுவான் 17

விளம்பரம் தேடியே
இறைதலம் நாடுவார்
பரம்பொருள் மறந்து
பிறர்புகழ் பாடுவார்... 18

அன்னை தன்னை
அறவே மறந்து
அன்ன தானம்
முறையே புரிந்தார்... 19

பட்டாடை தேடுவார்
பரிவட்டம் சூடுவார்
பொற்றாளம் தருவோனை
செத்தாலும் அடைவாரோ? 20

தனி மனிதர்கள்
பெறும் வழிபாடு
தமிழ் வழிபாடுகள்
உறும் பெருங்கேடு 21

வருவாய் கேட்டு
கலைப்பதா ஆலயம்?
வருவார் பார்த்து
அணைப்பது ஆலயம்! 22

கோவிலே நண்ணார்
கொடுசெயல் பண்ணார்
பாவியா அன்னார்?
பாதாளம் நண்ணார் 23

அயலான் பசிக்க
அன்றாடம் புசிப்பான்
நிலையாய் தொழும்
நீள்கழல் இலதாம் 24

அழுத பிள்ளைக்கு
பால் தந்த அன்னையே
அகதிப் பிள்ளைக்கு
பால் இன்று இல்லையே... 25

வேல் ஒன்று உண்டு
வினை அது தீர்க்க
வினை இன்று உண்டு 26
வேல் அது தீர்க்க

பாற்கடல் ஈய்ந்தவா!
பக்தர் துயர் நீங்கவா!
வேற்கரம் கொண்டவா!
வினைதீர உண்டு: வா! 27



# A1 - TOP QUALITY FLORIST

பூமாலைகள், பூமாலை, பூச்செண்டு, பூக்கூடை
~ மணவறை CASKET அலங்காரம் -
CASKET SPRAY

அனுபவம் – தரம் – விலை – வாடிக்கையாளர் திருப்தி
அனைத்திலும் அனைவராலும் பாராட்டப்படுகின்ற பூக்கடை பிள்ளையின்

## அதி உயர்தர மலர்க் களஞ்சியம்

## Tel: 416 269 5522



2871 LAWRENCE AVENUE EAST
(BRIMLEY & LAWRENCE)
SCARBOROUGH, ON.
TEL: 416 269 5522

---

## பொங்கல் விழா இனிதே நடைபெற எனது வாழ்த்துக்கள்!



## NADA NADARAJAH B.V.Sc

SALES REPRESENTATIVE
ONTARIO EMERALD CLUB MEMBER

வீடுகள் வாங்க விற்க
அடமான (Mortgage) ஒழுங்குகள்
என்பன குறைந்த வட்டி வீதத்தில்
இலவசமாகச் செய்திட...

## அழையுங்கள் உங்கள் நண்பன்

## நடா ஜி. நடராஜா

**Res: 905 472 8703 Cell 416 616 8751**
**Bus: 416 293 5093 (24hrs)**
**Email: nanadarajah@trebnet.com**
**5200 Finch Ave. East, Suite 206, Scarborough, ON M1S 4Z4**

# சைவத்தில் ஐயப்பன்

டாக்டர் இ.லம்போதரன்



சைவம் சிவ சம்பந்தமானது. சைவத்தின் கடவுள் சிவன். சிவனுடைய திருமேனிகள் நான்கு. அவை சிவம், சக்தி, நாதம், பிந்து என்பனவாம். சிவனுடைய அருவுருவத் திருமேனி சிவலிங்கம். இதை சதாசிவ மூர்த்தம் எனவும் சொல்வர். சிவனுடைய உருவத் திருமேனிகள் நான்கு. பிரம்மா, விஷ்ணு, உருத்திரன், மகேசுவரன். இந்த பிரம்மாவும் விஷ்ணுவும் அடிமுடி தேடிய பிரம்மா விஷ்ணுக்கள் அல்லர். இவர்கள் சம்புபட்சமான சிவவிஷ்ணுவும், சிவபிரம்மாவும் ஆவர். அடிமுடி தேடிய பிரம்மாவும், விஷ்ணுவும் பிரம்ம பதமும் விஷ்ணுபதம் பெற்று உயர்ந்த ஆன்மாக்கள் ஆவர். இவர்களை அணுபட்ச பிரம்மா, அணுபட்ச விஷ்ணு என்றும் கூறுவர்.

நிற்க, உருவத் திருமேனியில் ஒன்றான மகேசுவரனுடைய மூர்த்தங்கள் இருபத்தைந்து. நடராசர், தட்சிணாமூர்த்தி என்பன அவற்றுள் நாம் அறிந்த சிலவாகும். இந்த இருபத்தைந்து மூர்த்தங்களில் ஒன்று ஹரியர்த்தர். இதை சங்கரநாராயணர் என்றும், ஹரிஹரன் என்றும் கூறுவர். இது சிவனை வலப்புறத்திலும், விஷ்ணுவை இடப்புறத்திலும் கொண்ட திருவுருவம் ஆகும். “அரியலால் தேவி இல்லை” என்று அப்பர் சுவாமிகள் பாடுகிறார். இந்த மூர்த்தத்தின் உடைய புத்திரனாக ஹரிஹர புத்திரன் ஐயப்பன் விளங்குகிறார்.

சிவன் தடை நீக்கத்துக்காகவும், ஞானத்தை அளிப்பதற்குமாக எடுத்த திருமேனி கணபதி. சைவ மரபில் முன்னர் இல்லாதிருந்த கணபதி வழிபாடு, பெரியபுராணத்தின் சிறுத்தொண்ட நாயனாரான பரஞ்சோதியார் படைத் தளபதியாக இருந்து சாளுக்கியர்களின் வாதாபி நகரை வெற்றிகொண்ட போது, அங்கிருந்து கொண்டுவந்து புகுந்தது என்ற ஆராய்ச்சியாளர் கூறுவர். சிறுத்தொண்டரின் சம காலத்தவரும், அவரைக் கண்டு அளவளாவி மகிழ்ந்தவரும், சைவ சமய குரவர்கள் நால்வரில் முதலாவதாக வைக்கப்படுபவருமாகிய திருஞானசம்பந்தர், தமது காலத்தில் புதிதாக வந்த கணபதி வழிபாட்டை எவ்விதமான பேதமும் இன்றி ஏற்று, தமது தேவாரத்திலும் “பிடியதன் உருவுமை கொளமிகு கரியது வடிகொடு தனதடி வழிபடு மவரிடர் கடிகணபதி” என்று பாடிப்போந்துள்ளார். ‘ஓம்’ என்ற பிரணவத்தின் வடிவான பெண் யானையின் வடிவை உமை எடுக்க, அதன் மிகுந்த விரிவாகிய பஞ்சாட்சர வடிவாகிய சிவன் ஆண் யானை வடிவு எடுத்து அவர்கள் இருவரின் சேர்க்கையால் நமது இடர்களைக் களைவதற்காகத் தோன்றியவர் கணபதி என்று பொருள் வரும். விநாயக புராணம் உட்பட வேறு புராணங்களில் கணபதியின் தோற்றத்தைப்பற்றி பலவிதமான கதைகள் இருந்தாலும் அவருடைய தோற்றத்தைச் சிறப்பாகவும், தத்துவ விளக்கத்துடனும், தெளிவாகவும், எளிதாகவும் விளக்குவது இக்கதை.

இவ்வாறாக சிவமூர்த்தமான விநாயகர், சுப்பிரமணியர், வைரவர், வீரபத்திரர் ஆகிய நால்வரும்

சைவ மரபில் உபசாரமாக சிவ புத்திரர்களாகக் கொள்ளப்படுகின்றனர். அதேபோல, சிவன் மோகினி வடிவம்கொண்ட திருமாலைச் சேர்ந்தபோது தோன்றியவர் ஐயனார் என்கின்ற ஐயப்பர் என்று தமிழிலுள்ள சைவத்தின் முப்பெரும் புராணங்களில் ஒன்றான கந்தபுராணம் கூறும். புராணங்களையும் சமயக் கதைகளையும் பழித்துரைக்கும் சிலர், சிவனும் திருமாலும் ஆகிய இரண்டு ஆண்கள் ஓரினச் சேர்க்கையாகச் சேர்ந்ததில் தோன்றியவரே ஐயப்பன் என்று கூறி ஏளனம் செய்கின்றனர். முதலாவதாக சைவம் பாலியலுக்கு நிறைவான ஆன்மீக முக்கியத்துவமும், விளக்கமும் தருகின்ற சமயம். பாலியலைப் பாவம் என்றும், சாத்தானின் வேலை என்றும் சொல்லிக்கொண்டே குடும்பம் நடத்தும் முரண்பாடு சைவத்துக்கு இல்லை. இரண்டாவதாக. சைவம் பிறழ்பால் சேர்க்கையாளர்களை இக்காலத்தில் மட்டுமல்ல, எக்காலத்திலுமே இழிவுபடுத்திய சமயமுமல்ல. சூனியக்காரர்கள் என்றும் சாத்தானின் பிடியில் உள்ளவர்கள் என்றும் இவர்களை உயிரோடு எரித்த சமயமல்ல எமது சைவம். சைவம் இவர்களைக் காலவரையறையின்றி சிறையில் அடைத்ததில்லை. மனித நேயமும் அடிப்படை மனித உரிமைப் பட்டயங்களும், மருத்துவமும், விஞ்ஞானமும் இப்போது ஒரு சில வருடங்களாக உணர்ந்து சொல்லி வருவதெல்லாம் 'சைவம் காலம் காலமாக உணர்ந்த உண்மைகளே' என்பதை ஏளனம் செய்பவர்களும் விமர்சிப்பவர்களும் கவனிக்க.

இறையை நாதம் என்கின்ற சிவம் அல்லது அப்பன் என்ற ஆண் வடிவும், பிந்து என்கின்ற சக்தி அல்லது தாய் என்ற பெண் வடிவும் இணைந்த ஒருமித்த அம்மையப்பர் வடிவில் எப்பொழுதும் எங்கும் காணும் தரிசனம் சைவத்தின் முனைப்புண்மை. எம்மில் இந்த நாதம், பிந்து இரண்டும் இணையும்போது அடி வயிற்றின் கீழே உள்ள குண்டலினி என்கின்ற பாலியற் சக்தி மேலெழுந்து, மூலாதாரம் முதலாக சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுக்தி, ஆக்ஞை ஊடான ஆறு ஆதாரச் சக்கரங்களின் ஊடாக (Energy Centres) சிரசு வரை மேல் நோக்கிப் பாய்ந்து இறையனுபவமாகிய பரவச நிலையை (State of Bliss), புதிய உணர்வை, பார்வையை (Perception), தெளிவை, தரிசனங்களை, விளக்கங்களைத் தருகின்றது. நாதம், பிந்து இணைந்த குண்டலினி சக்தி கீழ் நோக்கிச் செல்லும்போது உலக வாழ்க்கையில் பாலியல் இன்பமாகப் பரிணமிக்கின்றது.

ஆண், பெண், அலி, பிறழ்பால் சேர்க்கையாளர் என்று எம்மில் ஒவ்வொருவரிலும் ஏற்கெனவே இந்த நாதம் ஆண்மையாகவும், பிந்து பெண்மையாகவும் வெவ்வேறு விகிதத்தில் உண்டு. ஆணில் பெண்மையும், பெண்ணில் ஆண்மையும் கலந்துதான் காணப்படுகின்றது. இதையே சைவர்களாகிய நாம் ஆண் பாதி, பெண் பாதியான அர்த்த நாரீசுவர வடிவில் காண்கிறோம். ஆண்களில் நாதம் கூடிய விகிதத்திலும் பிந்து குறைந்த விகிதத்திலும் காணப்படுகின்றது. பெண்களில் பிந்து கூடிய விகிதத்திலும் நாதம் குறைந்த விகிதத்திலும் காணப்படுகின்றது. அவ்வாறில்லாமல், மாறுபட்டுக் காணப்படும் நிலையில் அலிகளும், பிறழ்பால் சேர்க்கையாளர்களும் வருகின்றார்கள். ஒவ்வொருவரும் தம்முள் உள்ள இந்த நாதம், பிந்து உந்துதல்களின் அகச் சமநிலையைப் பெறும் பொருட்டு புறத்தே பாலியல் நாட்டத்தை வெளிப்படுத்துகின்றார்கள். இது மிகச் சிறிய கண்ணுக்குத் தெரியாத பற்றீரியாக்கள் போன்ற நுண்ணுயிர்களில் இருந்து மனிதர் வரையுள்ள சிக்கலான உயிரினங்கள் வரை இவ்வுலகிற்கும், இக்காலத்திற்கும் மட்டுமன்றி, அண்ட சராசரங்கள் முழுமைக்கும், எக்காலத்துக்கும் பொருந்துகின்ற சாசுவதமான சைவ உண்மையாகும்.

சிவனுக்கு நான்கு வகையான சக்திகள் இருக்கின்றார்கள் என வேதம் கூறுகின்றது.

ஏகைவ சக்தி; பரமேச்வ ரஸ்ய
ப்ரயோஜ நார்த்தாய சதுர்விதாபூத்
போகே பவாநீ புருஷேஷு விஷ்ணு
க்ரோதே ச காளீ ஸமரே ச துர்க்கா.

இதை தமிழில் கந்தபுராணம் பின்வருமாறு சொல்கிறது:

இறுதிசெய் திடலேசீற்றம்
இன்பமே யாண்மைஎன்னா
அறைதரு சக்திநான்காம்
அரன்தனக் கையைகாளி
முறைதரு கவுரிஇன்னோர்
மும்மையும் பெற்றோரேனைப்
பெறலருஞ் சத்தியான்இப்
பெற்றியும் மறைகள்பேசும்.

சிவன் தனது நான்கு சக்திகளில் ஒன்றான திருமாலுடன் சேர்ந்தபோது தோன்றியவரே ஐயப்பர். இதைக் கந்தபுராணம் மகா சாத்தாப் படலத்திலே காணலாம்.

நால்வகைப் பட்ட நண்ணிய சக்தியுள்
மாலும் ஆதலின் மற்றது காட்டுவான்
ஆல கண்டத்தன் அச்சுதன் அச்சுறும்
கோலம் எய்திக் குறுகினன் அவ்விடை

இந்த வண்ணம் இருக்க முராரியும்
அந்தி வண்ணத்து அமலனும ஆகியே
முந்து கூடி முயங்கிய எல்லையில்
வந்தனன் எமை வாழ்விக்கும் ஐயனே.

மைக்கருங் கடல் மேனியும் வானுலாஞ்
செக்கர் மேனியுஞ் செண்டுறு கையுமாய்
உக்கிர மத்துடன் ஓர்மகன் சேர்தலும்
முக்கண் எந்தை முயக்கினை நீங்கினான்.

அத்தகும் திருமைந் தர்க்கு அரிகர
புத்திரன் எனும் நாமம் புனைந்து பின்
ஒத்த பான்மை உருத்திரர் தம்மொடும்
வைத்து மிக்க வரம்பல நல்கியே.

புவனம் ஈந்து புவனத்து இறைவனை
அவனை நல்கி அமரரும் மாதவர்
எவரும் ஏத்திடும் ஏற்றமும் நல்கினான்
சிவனது இன்னருள் செப்புதற்பாலதோ.

-கந்தபுராணம், மகா சாத்தாப் பாடல்

பையராவ மளியானும் பரம்பொருள்
முதலும் நல்கும்
ஐயனே ஓலம்! விண்ணோர்க்கும்
ஆதியேஓலம்! செண்டார்
கையனே ஓலம் எங்கள்
கடவுளே ஓலம் ஓலம்!
மெய்யனே ஓலம் தொல்சீர்
வீரரே ஓலம் ஓலம்!!

ஆரணச் சுருதியோர் சார்
அடலுருத்திரன் என்று ஏத்தும்
காரணக் கடவுள் ஓலம்
கடல்நிறத்து எந்தாய் ஓலம்
பூரணைக்கு இறைவா ஓலம்
புட்கலை கணவா ஓலம்
வாரணத்து இறைமேல்கொண்டு
வரும்பிரான் ஓலம்ஓலம்

- கந்தபுராணம், மாகாளர் வரு படலம்

இவ்வாறு சிவனே தம்மொடு ஒத்த உருத்திரர்களோடு ஒருவராக ஐயனாரை வைத்து, அவருக்கு என்று தனிப்புவனமும் ஈந்து, எல்லாவற்றுக்கும் மேலாக அவரை அமரர்களும், பெருந்தவம் செய்யும் முனிவர்களும் ஏத்தி, வணங்கித் துதிக்கும் பதமும் வழங்கினான் என்று கந்தபுராணம் கூறுகின்றது. இவ்வாறு சிவனே அளித்த ஏற்றத்தை மறுதலிக்கும் சைவர்கள் நிலை வருந்தத் தக்கது.

எட்டுத் திக்குகளிலும் திசைக்குப்பத்தாக உள்ள புவனங்கள் அவற்றுக்கு அதிபதிகளாயுள்ள உருத்திரர்களின் பெயரால் வழங்கப்பெறுகின்றன என்றும், அவ்வாறாக கிழக்குத் திசையில் உள்ள புவனங்களில் ஒன்று சாஸ்தா புவனம் என்றும் ஆகமங்கள் கூறும். இது பிரம்மலோகம், விஷ்ணுலோகம், சிவலோகம் போன்றதாகும்.

சேரர் காவலர் விண்ணப்பஞ் செய்தவத்
திருவுலாப் புறமன்று
சாரல் வெள்ளியால் கயிலையிற் கேட்டமா
சாத்தனார் தரித்திந்தப்
பாரில் வேதியர் திருப்பிட வூர்தனில்
வெளிப்படப் பகர்ந்தெங்கு
நாரவேலை சூழுலகினில் விளங்கிட
நாட்டினர் நலத்தாலே

- பெரியபுராணம். வெள்ளானைச் சருக்கம்.

பெரியபுராணத்திலும் சேரமான் பெருமாள் திருக் கைலாயத்தில் சிவனுக்கு முன் அரங்கேற்றிய திருவுலாப் பாடல்களைச் சாத்தனார் திருப்பிடவூரில் வெளிப்படுத்தி அருளினார் என்று வருகின்றது. இந்த உலாப் பாடலே தமிழில் உள்ள முதலாவது உலாப் பாடலாகும்.

சைவ ஆகமங்களிலும் சுப்பிரபேத ஆகமத்திலும், பூர்வ காரணாகமத்திலும், அம்சுமத் பேத ஆகமத்திலும் ஐயனாரைப் பற்றியும் அவருடைய உருவ லட்சணங்களைப் பற்றியும் பேசப்படுகின்றது. இதேபோல், சில்பரத்தினம் என்னும் நூலும், தீட்சேந்திரம் என்னும் நூலும் ஐயனாரைப்பற்றிய தகவல்கள் உள்ள நூல்களாகும்.

இவ்வாறு சைவ நூல்களான ஆகமங்களும், சைவ சித்தாந்தப் பெரும் பொருள் கூறும் கந்தபுராணமும் ஏற்றித் துதிக்கும் சிவ, விஷ்ணு, சக்தி அம்சமான ஹரிஹர புத்திரனான ஐயனார் என்னும் ஐயப்பரின் வழிபாடானது, சிவவழிபாடும், விஷ்ணு வழிபாடும், சக்தி வழிபாடும் ஒருங்கிணைந்த வழிபாடாகும். இது, ஆகமச் சைவ நெறிக்கும், கந்தபுராணம் போன்ற சைவத் தமிழ் இலக்கியங்களுக்கும் அமைவான, இசைவான வழிபாடாகும். சைவர்களாகிய நாம் வீணான குழப்புரைகளை விட்டு, குழப்பம் இல்லாமல், கலக்கம் இல்லாமல் மனம் ஒன்றி வழிபட்டு இறை அனுக்கிரகத்தைப் பெற்றுய்வோமாக.

ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் மிக்குச்
சோதிக்க வேண்டா சுடர் விட்டுளன் எங்கள் சோதி
மாதுக்கம் நீங்க லுறுவீர் மனம் பற்றி வாழ்மின்
சாதுக்கள் மிக்கீர் இறையே வந்து சேர்மின்களே.

- சம்பந்தர் தேவாரம்

# வாழ்வியந் சிந்தனைகள்

சிவபாலன்

* தோல்வியென்பது நீங்கள் ஏற்கும் முறையில் உள்ளது.
* உங்களை நீங்கள் வருத்திக்கொள்ளக்கூடாது. அப்படிச் செய்தால் நீங்கள் உடலாலும் மனதாலும் பலவீனம் அடைவீர்கள்.
* இயற்கையில் உள்ள எல்லா உயிர்களும் தங்கள் இயல்புப்படி முழுமையாக இருக்கின்றன. மனிதன் மட்டும்தான் சிதைந்து கிடக்கிறான்.
* மதம் இல்லாமல் இருந்தால் மனிதன் எப்போதோ ஞானத்தைப் பெற்றிருப்பான்.
* வசதிகள் மாறலாம்; வாழ்க்கை மாறிவிடாது.
* எதை வேண்டுமானாலும் செய்யுங்கள். அதன் விளைவுகளையும் வேதனையின்றி ஏற்றுக்கொள்ள வேண்டும்.
* வன்முறையால் வாழ்க்கை அமைத்தல் கோழைத்தனம்; அன்பினால் வாழ்க்கையமைத்தல் வீரத்தனம்.
* மனிதன் தன்னை நம்புவதுதான் நல்லது; கடவுளை அல்ல.
* புலி புல்லைத் தின்பதில்லை; பசு மாமிசம் உண்பதில்லை; மனிதனைத் தவிர வேறெந்த விலங்கும் இயற்கைக்கு மாறாக உணவு உண்பதில்லை.

# இயற்கையோடு இசைந்த வாழ்வு

## (ஒரு பொங்கல் சிந்தனை)

வைத்திய கலாநிதி தி. திவாகரன்
இலங்கை தேசிய வைத்தியசாலை.

இங்கிதம் பரப்பும் பொங்கல் திருநாள் தைத்திங்களின் சிறப்பு. இதர பண்டிகைகளிலிருந்து இந்நாளை வேறுபடுத்துவது அதன் "இயற்கையோடு இசைந்த சால்பு".

வானம் பொழிய, பூமி விளைய, "ஞாயிறு போற்றுதும்" என வந்தனை செய்து, தொழில் வாண்மைகள் வளர்த்து, வசந்தத்தை (Spring) வரவேற்கும் அற்புதக் காலம் இது.

செயற்கையின் உச்சியில் செயற்கரிய செய்யும் மனித குலம், புவியில் தொடர்ந்து நிலைக்க வேண்டுமாயின் இயற்கையோடு இசைந்து ஒழுகுதலின் இன்றியமையாமை அறிவியலால் இன்று உணரப்பட்டுள்ளது. இயற்கையை இறைவனாக்கி, அதன் வணக்கத்தை விழாவாக்கிய, சங்கத் தமிழரின் அறிவின் ஆழத்தை நினைந்து நாம் இறும்பூதடைய வேண்டும். எனவே தான், இப்பருவத்திற்கு இக்கட்டுரை பொருத்தமாகும் என்பது என் எண்ணம்.

உணவு, உடை, உறையுள் மனிதனின் அடிப்படைத் தேவைகள். வையகத்தின் வளங்கள் இவற்றை வாரி வழங்குகின்றன. ஆனால் நவீன மனிதன் இவ்வளங்களை வீணடிக்கின்றான். அதனால் வறுமையால் வாடுகிறது ஒரு பகுதி உலகம். வசதிகள் அபரிமிதமாகி வருத்தங்களைத் தேடுகிறது மறுபகுதி.

நீர்வளம் நிதானமான பயன்பாடு இன்றேல் இனி நீண்ட காலம் நிலைக்காது. அதனைப் பேணுவதே



நாளைய சந்ததிக்கு நாம் அளிக்கக் கூடிய சிறந்த நம்பிக்கைக் காப்புறுதி (Insurance) ஆகும்.

இயற்கை உணவுகள் போசணையை மட்டும் தருவனவல்ல. அவற்றுள் நோயை எதிர்க்கும் பல பதார்த்தங்களும் நிறைந்துள்ளன. பசுமையான பழங்களும் அதன் சாறுகளும் (Fresh Juice) இயற்கை எமக்கு அளிக்கும் அருமையான ஔடதங்கள். நாம் என்ன செய்கின்றோம்? இவற்றை மறந்து செயற்கை உணவுகளின் பால் மோகம் கொள்கிறோம். புதிய வகை, புதிய சுவை என "உடனடி உணவு" (Fast Food) வகைகளை மிதம் கடந்து புசிக்கின்றோம், சிலவேளை பசி இன்றிக் கூட. விளைவுகள் கன்ம வினைகளைப் போல எம்மைத் துரத்துகின்றன. பலர் அதிகரித்த உடற்பருமன் (Obesity) எனும் நிலைக்கு

உட்பட்டு அவதியுறுகின்றனர். இன்னொரு பாலார் எண்ணெய்ச் சத்து (Cholesterol) அதிகரித்து, அதன் பின் விளைவுகளான, உயர் குருதி அமுக்கம் (Hypertersoon), மாரடைப்பு (Mycardial Infarction) என்பவற்றுக்கு ஆட்படுகின்றனர். நவீன பானங்கள் (Fizzy Drinks) இயற்கைப் பழச்சாறுகளுக்கு நேர் எதிர் விளைவுகளை உருவாக்குகின்றனர். தீய இரசாயனங்கள் (Free Redicals) உடலில் பெருகி, அங்கங்களின் செயற்பாடுகளைக் குறைப்பதுடன் புற்று நோயையும் ஏற்படுத்த வல்லன.

"நோய் நாடி நோய் முதல் நாடி" தீர்க்க வேண்டிய இப்பிரச்சினைகளைச் செயற்கையாகத் தீர்க்கும் மருந்து வகைகளின் பயன்பாடும் பல்கிப் பெருகுகின்றது. அவற்றின் பக்க விளைவுகளின் பட்டியலும் வளர்கின்றது.

இந்த நச்சு வட்டத்தை (Viscious Circle) விட்டு வெளியேறும் ஊக்கத்தை எமக்கு இப் பொங்கல் திருநாள் அளிக்க வேண்டும்.

நாகரிகத்தின் நிழல் விழாத "எஸ்கிமோ", "பிக்மி" இனத்தவர்களைப் பார்த்தால் நாம் பல பாடங்களைக் கற்கலாம். ஊன் உண்பவர்களாக இருந்தும் இம்மக்களுக்கு குருதியில் Cholosterol அளவும், அதன் பின் விளைகளும் மிகக் குறைவு. காரணம் அவர்களது உணவு முறைகள் இயற்கையோடு இசைந்தவை.

இன்று நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த உழைத்த காலம் மலையேறி, இயந்திர வேகம் பெருகி, மனிதனை சடமாக்கும் தொழில்நுட்ப வளர்ச்சி பிரமிக்க வைக்கின்றது. ஆனால், "உழைப்பது உயர்ச்சி" என்ற ஔவை முதுமொழி மறக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

உடற்பயிற்சி வலிந்து செய்ய வேண்டிய ஒரு கடமையாக மாறி வருகின்றது. கணனிக்கும் எமக்கும் இடைவெளி குறைவடைய, கழனிக்கும் எமக்குமான இடைவெளி விரிகின்றது. இரவியைக் காண்பதும் அரிதாகின்றது. என்பு தேய்தல் (Osteoporosis) முதலிய நோய்கள் எம்மை அன்புடன் அரவணைக்கின்றன.

தாய்ப்பால் விலைமதிப்பற்ற பொருள். முலையூட்டி விலங்கினங்கள் எவையும் தாய்ப்பால் ஊட்டத் தயங்கியதில்லை - மனிதனைத் தவிர! ஆனால் மனிதக் குழந்தைக்குப் பிறப்பினின்று ஆறு மாதங்களுக்கு தாய்ப்பால் மட்டுமே அவசியமாகின்றது என்பது ஆய்ந்தறிந்த உண்மை. ஆனால் அழகுக்கும் வசதிக்குமாகப் பாலகர்க்குப் பால் மாவை மட்டும் பருக்குதல், பின்னாளில் அவரைப் பலப்பல நோய்களுக்கு ஆளாக்குவதுடன், மனங்களையும் பாசமற்ற பாலைவனமாக்கிவிடும்.

எமது வாழ்வின் வேகம் மிக அதிகரித்துள்ளது; உலகம் சுருங்குகின்றது. ஆனால் மிதமிஞ்சிய பாவனையால் நிலக்கீழ் எரிபொருளும் விரைவாகக் காலியாகிக் கொண்டிருக்கின்றது. பரிதியையும் பூமியையும் பிரிக்கும் ஓசோன் படலத்தில் துவாரம் விளைகின்றது. பச்சை வீடாக (Green House) இருந்த தரணி, உலக வெப்பமாதல் (Global Warming) எனும் அபாயத்தினுள் ஆட்பட்டிருப்பதாக விஞ்ஞானிகள் விசனப்படுகின்றனர். பனிப்பாறைகள் உருகிப் பெரும் கண்டங்களே காணாமற் போகக் கூடும் என்று அஞ்சுகின்றனர். "நாளை மறுநாள்" (The Day After Tomorrow) என்ற கற்பனைத் திரைப்படத்தை நிஜமாகாது தடுக்க நாம் இயற்கையைப் பாதுகாத்தல் அவசியம்.

ஆதியில் போர்கள் வாள், வேல், வில் கொண்டு நடைபெற்றன. இன்று அணுகுண்டும், விமானத் தாக்குதல்களும், இரசாயன ஆயுதங்களும் நிறைந்து, இயற்கையை இல்லாதொழித்துக் கொண்டிருக்கின்றோம்.

சந்திர மண்டலத்தையும் செவ்வாய்க் கிரகத்தையும் மனிதன் வெற்றி கொள்ளும்போது, பூமியை இழந்துவிடுவானோ? எனும் பயம் நியாயமானது.

எனவே இனிமேலும் இயற்கைக்குப் புறமுதுகு காட்டாமல், இயற்கையை நோக்கி எமது வாழ்க்கை பயணிக்க வேண்டும். (Instead of showing the back to the nature, we have to walk back to the nature.) சாதாரண அன்றாட வாழ்க்கை நடைமுறைகளிலேயே நாம் இதனை ஆரம்பிக்க வேண்டும். இச்சிந்தனையை ஊக்குவிக்கும் விழாவாக அமையும் சகல தகுதிகளும் எமது பொங்கலுக்கு உண்டு.

தங்க வொளி தரும் பகலோன்
திங்களையும் திகழ வைப்போன்
எங்கள் குல முதல்வன் என்றும்
பங்க மின்றிப் பால்வீதி செல்வான்
பொங்கல் நாளில் அவனைப் போற்றித்
தங்க வைப்போம் இயற்கைத் தாயை
இங்கெ மக்கு இவரே பெற்றோர்
நாங்கள் யாவரும் நல்லார், கேளிர்! (கேளீர்!!)
பொங்கலோ பொங்கல்!

---

## சிந்திப்போம்

வலிமை என்பது அசைக்கமுடியாத மனஉறுதியில் இருந்து வருகிறது. மனதில் தூய்மை இருந்தால் வலிமை ஏற்படும்.

கல்வி, பண்பு, நமது கலாச்சாரம் இவை நம் இளைய சமூகத்தை நல்வழிபடுத்த வேண்டும். இன்றைய நாகரீக, நவீன வாழ்க்கை சூழ்நிலையில் நெறி தவறிய பாதை, கட்டுப்பாடற்ற வாழ்க்கை, கோட்பாடில்லாத சிந்தனை, மிகவும் சர்வ சாதாரணமாகிவிட்டது.

இன்று பெரியோர்களின் கவலை என்னவென்றால், நம் இளைய சமுதாயம் திசை மாறிச் சென்றுவிட்டால், வாழ்க்கையின் போராட்டங்களில் அவர்களால் எதிர்நீச்சல் போட முடியுமா என்பதுதான்.

நம் இளைய தலைமுறைமீது நாம் அபார நம்பிக்கை வைத்து, அவர்கள் தீய சக்திக்கு அடிமையாகாமல் காக்க வேண்டும்.

வாழ்க்கையை இப்படித்தான் வாழவேண்டும் என்று நெறிமுறைகளோடு வாழும் ஒருசிலர், வாழ்வில் எந்தவிதமாகவும் வாழலாம் என்று நினைக்கும் பல கோடி மனிதர்களுக்கு வழிகாட்டியாக வாழ முடியும்.

"ஆன்மீக வாழ்வைத் தேடி மனிதன் காட்டிற்குச் செல்ல வேண்டியதில்லை. ஆன்மீகம் காட்டில் இல்லை. மானுட மனதில்தான் இருக்கின்றது நல்லவனாக இருப்பதும், நாட்டிற்காக உழைப்பதும்தான் ஆன்மீகம்" என்கிறார் சுவாமி விவேகானந்தர்.

உ

# சைவ உலகம் வணங்கிப் போற்றிய பஞ்ச கோபுரங்களின் மௌன ஞான ஒளி

- சிவதொண்டன்,
தில்லையம்பலம் சிவயோகபதி,
உலக சைவப் பேரவை – கனடா.



சிவயோக சுவாமிகள்

மௌனத்திற்கும், அமைதிக்கும் இருக்கும் மதிப்பு விலையிட முடியாதது. "சும்மாயிரு, சொல்லற" என்பது, முருகப் பெருமான் அருணகிரிநாதரைப் பார்த்து அருளிய ஆசி.

மௌனம் என்று சொல்லும்பொழுதே மனம் பேசாதிருத்தல் எனப் பொருள்படும். அவ்வாறு இருக்கும் நிலையில்தான் மெய்ஞ்ஞானத்தை உணர முடியும். இது ஆன்மீகத்தில் திளைத்த மகான்களின் வாக்கு.

மௌனமே பெரியோர் மனத்துள் வரம்பின்றிக் குடிகொண்டிருக்கும் ஞானத்திற்கு வெளியே தோன்றும் ஒரு அடையாளமாகும். "மௌனம்" என்பது ஞான வரம்பு. இவ்வாறு ஒளிநெறி பெற்ற பஞ்ச கோபுரங்களான மௌன ஞானிகள் முறையே ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர், பகவான் ரமண மகரிஷி, ஈழத்து மாமுனிவர் சிவயோக சுவாமிகள், காஞ்சிப் பெரியவர் ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள், ஈழத்துக் கைதடி மௌன முனி மார்க்கண்டு சுவாமிகள் ஆவர். இவ்வைவரும் ஒரு குத்து விளக்கின் ஒளிவிடு பஞ்சமுனைகள். திருவருள் இந்த அருள்விளக்கை ஏற்றிவைத்திருப்பது சைவ உலகம் செய்த பாக்கியமே. இந்த ஞானியரைக் குரு மூர்த்தங்களாகக் கொண்டாடும் ஆச்சிரமங்களும் உள. இந்த ஞானியர்கள் காட்டிய ஒளிநெறியிலே அருள்பெற்றுய்ந்த அடியாரும் அநேகர்.

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர், புனித கங்கைக் கரையிலே தியானத்தில் அமர்ந்து மௌனத்தில் ஒளிநெறி அருளினார். இராமகிருஷ்ண இயக்கம் கதிரொளி போன்று உலகெல்லாம் பரவியிருப்பதால், இராமகிருஷ்ணரை ஒரு அகில உலக ஞானி என்றே கூறலாம். "உன்னை நீ அறிந்துகொள்; அப்பொழுது கடவுளை அறிவாய்", இறைவனை வெளியே தேடுதல் அறியாமை. தமக்குள்ளே இறைவன் இருப்பதை உணர்வதே அறிவு; இறைவனை உணர்ந்தவனே அவரது பாதத் தாமரைகளில் தன்னை அர்ப்பணம் செய்வான், தியானத்தில் சித்தியடைந்தவனுக்கு முத்தி நெருங்கிவிட்டது" ஆகியவை பரமஹம்சர் அருளிய அருள் மொழிகளில் சிலவாகும்.



ஸ்ரீ ராமகிருஷ்ணர்

சிவயோக சுவாமிகளும் இராமகிருஷ்ண பரமஹம்சரிடம் பெருமதிப்பு வைத்திருந்தார். யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட ஸ்ரீமத் பிரேமாத்மானந்தாஜி இராமகிருஷ்ண மடத்தின் துறவியாக வருவதற்கு வழிகாட்டியாக, சிவயோக சுவாமிகள் ஊக்கம் கொடுத்தார். யாழ்ப்பாணம்,

செங்கலடி சிவதொண்டன் நிலையங்களில் இராமகிருஷ்ண மடத்தைச் சார்ந்த "காவி' உடுத்த துறவிகள் மட்டும், தங்கும் வசதி செய்வதற்கு சிவயோக சுவாமிகள் உத்தரவு கொடுத்தார். ஆனால், "கந்தசுவாமியே காவி உடுத்து வந்தாலும் தங்கும் வசதி இல்லை" என்றும் கட்டளையிட்டார். காரணம் யாதெனில், சிவதொண்டன் ஆசிரமத்தில் புனிதம், கட்டுப்பாடு, ஆன்மீகம் ஆகியவை மதிப்புடன் பேணப்படல்வேண்டும் என்ற கொள்கைதான். காவி உடுத்து வரும் சாதாரண பண்டாரிகளிடம் மிக எச்சரிக்கையாக இருக்க வேண்டுமெனவும், "அவர்களுக்கு அன்ன தானம் மாத்திரம் கொடுத்து, உடனே வெளியே அனுப்பிவிடுக" என்றும் மிக எச்சரிக்கையுடன் சுவாமி கட்டளையிட்டார்.



ஸ்ரீ ரமணர்

சிவயோக சுவாமிகள் தமிழ்நாட்டில் உள்ள சைவத் தலங்களுக்கு ஒரு தருணம் யாத்திரை சென்றபோது, சிதம்பர நடராஜர் தரிசனம் செய்தபின்னர் திருவண்ணா மலைத் தலத்திற்கும் சென்றார். அங்கு ரமண மகரிஷியின் ஆச்சிரமத்துக்கும் சென்று ரமணரின் அருகில் சுவாமியும் அமர்ந்தார். இருவரும் "சொல் எல்லாம் மோனம்" என்றிருப்பவர்களே. ஆதலால் அவர்களுக்கு வாய்ப்பேச்சு "என்ன பயனுமில". சிவயோக சுவாமிகள் பின்னர் இதுபற்றிக் கூறியபோது "ஒரு குன்றின் முன் இருந்தது போன்றிருந்தது" என ரமண மகரிஷியை மதித்துப் போற்றினார். அப்பரும் சம்பந்தரும் ஒருவரையொருவர் மதித்தும், வணங்கியும் இருந்த நிலைபோல் ரமணரும் சிவயோகரும் விளங்கினார்கள்.



ரமண மகரிஷி வாழ்ந்த காலத்தில் அவரைத் தரிசித்த அன்பர்கள், அடியார்கள் யாவரும் அவரவர் சந்தேகங்களுக்கான விளக்கங்களை மகரிஷியின் அமைதிப் பார்வையாலும், மௌனத்தாலுமே பெற்றனர். அவரைத் தரிசிக்க அன்பர்கள் பலர் குவிந்தனர். குழப்பம் நீங்கினர். தெளிவுபெற்றனர். ரமண பகவான் அண்ணாமலைச் சோதியாய்த் திகழ்ந்தார்.

ரமண மகரிஷியையும் சிவயோக சுவாமிகளையும் தனது இரு கண்களாக மதித்துப் போற்றி, குருபீடமாக வணங்கிவந்த ஒரு உத்தம சீடர், ஈழத் திருநாட்டின் நயினை நாகபூஷணி அம்மனைத் தனது குலதெய்வமாக வணங்கிவந்த சைவப் பெரியார், அமரர் கே.ராமச்சந்திரா அவர்களாவர். இவர் வழியைப் பின்பற்றியவர், சைவப் பெரியார் அமரர் `ஆத்மஜோதி' முத்தையா அவர்களாவர்.

காஞ்சிப் பெரியார் ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள், காஞ்சிபுரத்தில் காமாட்சி அம்மன் எழுந்தருளியிருக்கும் ஆலயத்தில் பீடாதிபதியாகவும், 'ஸ்ரீ காஞ்சி காமகோடி', காஞ்சிப் பெரியவர்' என்றும் உலகில் பரந்து வாழும் சைவ மக்கள் மதித்துப் போற்றி, வணங்கிவந்த ஒரு மகாஞானியாவார். தன்னை நாடிவரும் அன்பர்களுக்கு சிறிது வார்த்தைகள் மாத்திரம் கூறி, நல்லாசி

வழங்குவார். சிவசின்னமாக, எளிமையாகக் காட்சிகொடுப்பார். சிலவேளைகளில், தியான நிலையில், மௌனத்தில் ஆழ்ந்திருப்பார். மௌன குருவாகவே திகழ்ந்தார்.

ஈழவள நாட்டின் நல்லூர்க் கந்தன் ஆலய வீதியில் அருளாட்சி புரிந்த செல்லப்பா சுவாமிகளின் உத்தம சீடராகி, அருள் பெற்றவர் தவத்திரு சிவயோக சுவாமிகள். "சும்மா இரு" (Be still) "மௌனமாக இரு" என்று பற்பல அன்பர்களுக்கு நல்வழி காட்டிய ஞான ஒளி! அவற்றுடன் "தன்னை அறி" எனும் தாரக மந்திரத்தையும் (Know thyself) உபதேசித்தார். "தன்னைத் தன்னால் அறிவதே குருபூசை, மற்றெல்லாம் வெறும் உண்டாட்டு" என்றும் சிவயோக குருமணி கூறுவார். யாழ்ப்பாணம், செங்கலடி சிவதொண்டன் ஆச்சிரமங்களில் தியானம் செய்வதற்குத் தயாராக வேண்டிய கொள்கை நெறி சிவயோக சுவாமிகளால் விதிக்கப்பட்டது.

"சொல் எலாம் மோனம்
தொழில் ஆதியும் மோனம்,
எல்லாம் நன்மோன நிறைவே
மௌனம் நிலவுக"

சிவயோக சுவாமிகளின் உத்தம சீடர்தான், ஈழத்துக் கைதடி மார்க்கண்டு சுவாமிகள். இவரை "மௌன முனி" என்றும் மரியாதையுடன் அன்பர்கள் அழைப்பர். நன்றும், தீதும் அறியாத நன்மோனத்தில் ஆழ்ந்து கிடக்கும் நிட்டர். சிவயோக சுவாமிகள், மௌன முனியைப்பற்றி தம் அடியவர்களிடம் கூறும்பொழுது, "அவனை உங்களுக்கெல்லாம் ஒரு திசைகாட்டியாக வைத்திருக்கிறேன்" என்று கூறுவதுண்டு. மாரக்கண்டு சுவாமிகளும் "நற்சிந்தனை" எனும் நறுமலர்களைச் சொரியும் கற்பக தரு எனவே திகழ்ந்தார்.

குவை, சைவ சித்தாந்த ஆதீன ஸ்தாபக முதல்வரும், சிவயோக சுவாமிகளின் சீடருமான குருதேவர் என்று சைவ உலகத்தினரால் அன்புடன் அழைக்கப்படுபவருமான சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள், மார்க்கண்டு சுவாமிகளிடம் மரியாதையும், பெருமதிப்பும் அர்ப்பணம் செய்து, "நற்சிந்தனை" பற்றிய விளக்கங்கள், சைவ சித்தாந்த தத்துவ சாரம் பற்றிய விளக்கங்கள் ஆகியவற்றை ஆங்கில மொழியிலும் நன்றாகப் பாண்டித்தியம் பெற்ற மார்க்கண்டு சுவாமிகளிடம் கற்றுக்கொண்டார்.

சிவயோக சுவாமிகள், ஒருமுறை சிவராத்திரி விரத நாளில் கைதடி ஆச்சிரமம் சென்று, தாள, மேளம் இல்லாமல் பாட்டு, படிப்பு, நான்கு சாமப் பூசை என்ற ஆடம்பரங்கள் எல்லாவற்றையும் அடியோடு விட்டுவிட்டு, தானும் தனது சீடனும் தியான நிலையில், மௌனமாக விரதம் அனுட்டித்து, தூய சிவராத்திரி விரதத்தை பூரணமாக நிறைவுசெய்தனர்.

சிவயோக சுவாமிகள் எங்களுக்குப் பல வேலைகள் தரவில்லை; ஆனால் ஒரே ஒரு வேலைதான் - அது யாதெனில், "தன்னைத் தன்னால் அறிவதுதான்!" என்று மார்க்கண்டு சுவாமிகள், மிகச் சுருக்கமாக தனது அடியார்களுக்குக் கூறுவார்.

இங்கிலாந்தின் சோல்பரிப் பிரபுவின் புதல்வன், சந்தசுவாமி அவர்களும் சில ஆண்டுகள் கைதடி ஆச்சிரமத்தில் மார்க்கண்டு சுவாமிகளுடன் தங்கியிருந்து, மௌனியாகவே தியானத்தில் திகழ்ந்தார்.

ரமண பகவானின் சமாதி நாள். அன்று மாலை அவரைச் சூழ்ந்திருந்த அன்பர்கள், அருணாசல அட்ஷர மாலையை உருக்கமாகப் பாடிக்

கொண்டிருந்தனர். அப்பொழுது பகவானது கண்கள் குளமாகி, நீர் தாரை தாரையாகப் பெருகியது! அருணாசல சிவத்தின் மீது கொண்ட அன்பின் பெருக்கே அக்கண்ணீராகும். மாணிக்கவாசக சுவாமிகளையும், "அழுது அடி அடைந்த அன்பர்" என்பர். "காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி" செய்த இறைவழிபாடாகும்!

சிவயோக சுவாமிகள் மகா சமாதி அடைவதற்கு சில நாட்களுக்கு முன்பு, தமது நோய்பற்றிக் கூறியவை வருமாறு:

"இந்த நோய் ஒரு வரப்பிரசாதம். கன்மத்தை அனுபவித்தே தீரவேண்டும். உடம்பு தோன்றியபொழுது, அதோடு சம்பந்தப்பட்ட எல்லாவற்றையும் கொண்டு வந்தது. அதில் நோயும் ஒன்றாகும். இந்த நோயைப்பற்றி ஆராய வேண்டியதில்லை. இது எப்பவோ முடிந்த காரியம். ஒன்றுக்கும் அஞ்ச வேண்டியதில்லை. இந்த நோயின் காரணத்தை அறிந்தவர், இது எல்லாத் துக்கங்களுக்கும் நிவர்த்தி என்பதை அறிவர். அறிந்து அமைதியாயிருப்பர்."

இராமகிருஷ்ண பரமஹம்சருக்கும், ரமண மகரிஷிக்கும் புற்றுநோய் வந்ததை அன்பர்கள் அறிவார்கள். உடலுக்குப் பிணி, மூப்பு, சாக்காடு வருவது இயற்கை என்றும், ஞானிகளின் உடம்பும் இதற்கு விலக்கானவை அல்ல என்றும் சுவாமி விவேகானந்தர் கூறினார்.

'சர்வம் சிவமயம்!
சர்வம் சிவன் செயல்!
சும்மா இரு; தன்னை அறி.
ஒரு பொல்லாப்பும் இல்லை.
எப்பவோ முடிந்த காரியம்.
நாமறியோம், முழுவதும் உண்மை.
ஓம் நமசிவாய"

- சிவயோக சுவாமிகள்.

---

# குடும்பம்!

குடும்பம் எப்போதும் ஒரு கோவில் என்பார்கள். எதனால், கோவிலுக்கு ஏன் நாம் போகின்றோம்? கோவிலில்தானா இறைவன் இருக்கின்றான்? உங்களிடத்தில் இல்லையா? அல்லது உங்கள் வீட்டில் இல்லையா? பாடசாலைக்குச் சென்றால் படிப்பது போல்தான் கோவிலுக்குப் போனால் வழிபாடு செய்யலாம் என்ற ஒரு கட்டாய உணர்வு. கோவிலுக்குப் போவதென்றால் குளிக்க வேண்டும்; மாமிசம் உண்ணக்கூடாது என்றெல்லாம் எண்ணம் உங்கள் எண்ணம், ஏன் வீம்பு பேசி வேடிக்கை பார்த்து, கடும் சொற்களைப் பேசி நையாண்டிசெய்து, குறைகூறி உங்களை அறியாமலேயே உங்கள் வாழ்வில் பல பாவங்களைத் தேடிக்கொள்கிறீர்கள். இதுதானா இறைவனுக்கு நீங்கள் செய்யும் நன்றிக் கடன்? ஒன்றே செய்யுங்கள்; நன்றே செய்யுங்கள்; அதை இன்றே செய்யுங்கள். இதுதான் உங்கள் பிறப்பின் மகிமை. இதனால்தான் குடும்பம் கோவிலாகிறது!

# VEEDU VANGA VITKA



கூடிய விலையில் விற்கவும்

மலிவான விலையில்

உங்கள் ரசனைக்கேற்ப வாங்கவும்

குறைந்த வட்டி விகிதத்தில் மோட்கேஜ்

ஒழுங்கு செய்திடவும்

நட்பான சேவைக்கும் அழையுங்கள்

**EXPERIENCE**
**INTEGRITY**
**COURTESY**

**LOW LOW SELLING COMMISSION**

*for* **F R E E** *consultation*

## *Shiva Ponniah*

*Sales Representative*

**416-451-6680**

*REMAX*

VISION REALTY INC.
2210 Markham Road # 1
Toronto,ON
416-321-2228



RE/MAX Above the Crowd!

# மாணவர் பகுதி

## Lord Ganesha and Mango Fruit



By - Nirahulan Puvanenthira, Grade 3

Our religion is Saivasamayam. Lord Siva is our supreme God. Lord Siva and Umadevi have two sons. The older son's name is Ganesha and the younger son's name is Murugan.

One day Sage Narathar wanted to visit lord Siva. As usual Narathar decided to create some trouble in Lord Siva's family. He took a sweet mango in his hand and walked towards Lord Siva's Place. He observed that Lord Siva was in a very happy mood with wife Umadevi and sons. Narathar gave the mango fruit to Lord Siva and told him he wanted to have a contest between Lord Siva's sons. He further said "Ganesha and Murugan must run around the world and whoever comes back first will get the mango from Lord Siva".

Murugan decided to travel with the help of a peacock. Murugan went first on the peacock. Ganesha thought about how he can beat his brother in this contest. Ganesha has wisdom and has the ability to make good judgments. So Ganesha decided to go around his father Lord Siva and his mother Umadevi. He walked around them and stood in front of them.

Lord Siva asked Ganesha why he didn't go around the world. Ganesha looked at his father and mother and said, "Parents are the world. Therefore, I am the winner so give me the mango." Lord Siva and Umadevi gave the mango to Ganesha. While Ganesha was having the mango, Murugan came on the peacock and saw Ganesha have the mango. Murugan became angry with them and flew away and stood on Palanemalai. And that place became known as Murugan's temple. Ganesha taught everyone that Lord Siva and Umadevi represent the world.

"OM GANESHAYA NAMA"

# கேதாரகௌரி விரதம்



அனுஜா இந்திரகுமார்

கேதாரகௌரி விரதம் என்று அழைக்கப்படும் இவ்விரதம், இந்தியாவிலே திருக்கேதாரத்தில் கோயில்கொண்டருளிய கேதாரகௌரி அம்பிகை, திருக்கேதார நாதரைப் பூசித்து வழிபட்டமையால் இப்பெயர் பெற்றது. ஆயினும் இவ்விரதம் சிவ விரதமேயன்றி, சக்தி விரதமல்ல.

சிவனும் சக்தியும் ஒன்றென்ற தத்துவத்தை உலகிற்கு உணர்த்தும் ஓர் ஒப்பற்ற விரதமே கேதாரகௌரி விரதமாகும். புரட்டாதி மாதத்து சுக்கிலபட்ச தசமியன்று தொடங்கி, ஐப்பசி மாதம் கிருஷ்ண பட்ச தீபாவளி அமாவாசை வரை விரதமிருந்து முடிக்க வேண்டிய விரதமாகும்.

இவ்விரதம் தோன்றியதற்கான புராண வரலாற்றை இனிக் காண்போம். முன்னொரு காலத்தில் திருக்கைலாயத்தில் பரமேஸ்வரன், பார்வதி சமேதராக வீற்றிருந்தார். அவர்களை இந்திரன் முதலாய தேவர்களும், நாரதர் மற்றும் முனிவர்களும் தரிசித்தனர். அவ்வேளை தேவலோக நாட்டியப் பெண் ஊர்வசியின் நடனமும் இடம்பெற்றது. அப்பொழுது சிவபக்தரான பிருங்கி முனிவர் சிவனாரை மட்டும் தனியாக வலம்வந்து வணங்கி நின்றார். இதனால் சீற்றமடைந்த பார்வதி முனிவரின் உடல் வலிமையை நீக்கிவிட்டார். எலும்பும் தோலுமாகிய முனிவர் இயக்கமின்றித் தள்ளாடினார். சிவபெருமான் அவர்மீது இரங்கி, தண்டு ஒன்று கொடுத்து உதவினார். மேலும் சீற்றம் கொண்ட பார்வதி, சிவன் வேறு தான் வேறு அல்ல; இருவரும் ஒன்றே என்ற தத்துவத்தை உலகிற்கு உணர்த்தத் திருவுள்ளம் கொண்டார்.

அம்பிகை, அரனார் அடிமலர் தொழுது கைலையை விட்டு அகன்று கௌதம முனிவருடைய ஆச்சிரமம் அடைந்து அங்குள்ள வில்வமரத்தடியில் வீற்றிருந்தார். அப்பொழுது அங்கு வந்திருந்த கௌதம முனிவர், அம்பிகையை வணங்கி நின்றார். கௌதமரின் பக்திக்கு திருவுள்ளம் கனிந்த கௌரி, கைலையில் நடந்ததைக் கூறினார். அம்பிகை கௌதமரை நோக்கி, மீண்டும் நான் சிவனாரை அடைந்து ஒரே உருவில் சரி பாதியாக பொருந்தவேண்டும் என்றும், அதற்குரிய விரதம் அனுட்டிக்க வேண்டும் என்றும் தனது எண்ணத்தைத் தெரிவித்தார். முனிவர் கேதாரகௌரி விரதத்தை பார்வதிக்கு எடுத்துக்கூறி, விரத அனுட்டானங்களையும் விளக்கிச் சொன்னார். அவரும் அப்படியே அவ்விரதம் அனுட்டிக்கத் தொடங்கினார். விரதம் பூர்த்தி அடைந்த நாளன்று, நான்மறை போற்றும் நாயகன் - வேத முதல்வன் கௌரியின் முன்னால் சூலமும் மழுவும் தாங்கப்பெற்ற திருக்கரத்துடன காட்சி அளித்தார். கௌரிதேவி அவர் பாதங்களைப் பணிந்து நின்றார். விரத மகிமையால் அம்மையார் அரனாரின் இடப்பாகம் பெற்றார். அதுவே அர்த்தநாரீஸ்வரர் என்னும் சிவசக்தி வடிவின் அருள் தோற்றமாகும். ***

# வழிபாடு

சாயி ஞானசேகரன்

நாம் காலை நித்திரைவிட்டு எழுந்தபின், குளித்து வழிபாடு செய்யவேண்டும். வழிபாடு நம்மை நல்வழிப்படுத்தும். நாம் யாரை வழிபட வேண்டும்? கடவுளை வழிபட வேண்டும். கடவுள் எங்கே இருக்கிறார்? எம்மைப் பெற்ற மாதா பிதாவிடத்தில் இருக்கிறார்; எமக்குக் கல்வியைத் தருகின்ற குருவினிடத்தில் இருக்கின்றார். சகோதரர், மூத்தோர், குழந்தைகள், நல்ல நண்பர்கள் என்போரிடத்திலும் மற்றும் மற்றைய உயிரினங்கள் இடத்தும் கடவுள் இருக்கிறார். மாதா, பிதாவை நாம் காலையிலும் மாலையிலும் விழுந்து வணங்கவேண்டும்.

எல்லா இடத்திலும் இருக்கும் கடவுளை வழிபடச் சிறந்த இடம் ஆலயமாகும். அங்கே காணப்படும் தீப ஒளி, மங்கள இசை, பாடல் ஓசை என்பன மனத்திற்கு அமைதியைத் தருகின்றன. விசேட தினங்களில் நாம் கட்டாயமாகக் கோவிலுக்குச் செல்லுதல் வேண்டும். கோவிலுக்கு அர்ச்சனைப் பொருட்களைக் கொண்டு செல்ல வேண்டும். கடவுளை வழிபட்டால் நாம் அன்பும் பண்பும் உடையவர் ஆவோம். ***

# மாணிக்கவாசகர்

தீபனா தேவதாஸ்

மாணிக்கவாசகரது இயற்பெயர் திருவாதவூரர். அவரது தந்தை பெயர் சம்புபாதாசிரியர். அவரது தாய் பெயர் சிவஞானவதி. அவர் பிறந்த இடம் திருவாதவூர். இவர் நான்கு சைவசமய குரவர்களில் ஒருவர்.

இவர் பதினாறு வயதிலேயே சைவ சமயத்தில் பாண்டித்தியம் பெற்றவர். பாண்டிய மன்னன் அவரை அமைச்சர் ஆக்கி, தென்னவன் பிரமராயன் என்ற பட்டம் வழங்கினான்.

ஒருநாள் அரசன் திருவாதவூரரிடம் காசு கொடுத்து, குதிரை வாங்கிவருமாறு திருப்பெருந்துறைக்கு அனுப்பினான். போகும் வழியில் "ஹர ஹர" பாட்டு கேட்டு, அங்கு பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்த குருவிடம் சீடராக விரும்பினார். அங்கு தனது முதலாவது திருவாசகப் பாடலை (சிவபுராணம்) பாடினார். இதனால் "மாணிக்கவாசகர்" என்ற பெயர் பெற்றார். அங்கு ஒரு கோவில் கட்டப் பணித்துவிட்டு அந்தப் பெரியவர்(இறைவன்) மறைந்தார். மாணிக்கவாசகர் குதிரை வாங்கக் கொண்டுவந்த பணத்தில் கோயில் கட்டினார். மன்னன் ஆத்திரமடைந்தான். மாணிக்கவாசகர் இறைவனிடம் முறையிட்டார். இறைவன் மன்னனுக்கு குதிரைகள் அனுப்பிவைத்தார். அடுத்தநாள் குதிரைகள் யாவும் நரிகளாயின. ஆத்திரமடைந்த மன்னன் மாணிக்கவாசகரை வைகை ஆற்றங்கரையில் சுடுமணலில் நிற்கவைத்தான். ஆறு பெருக்கெடுத்து ஓடியது. மன்னன் இறைவனின் பெருமையை உணர்ந்துகொண்டான். மாணிக்கவாசகரிடம் மன்னிப்புக் கேட்டான்.

மாணிக்கவாசகர் திருத்தலங்களுக்குச் சென்று இறைவனின் பெருமையைப் பாடினார். இறுதியில் தில்லைச் சிதம்பரம் அடைந்தார். அங்கு திருவாசகம், திருக்கோவையார் பாடினார்.சைவ சமயத்தை வளர்க்க பாடுபட்டு, உலகறியச் செய்த மாணிக்கவாசகர் தமது முப்பத்திரண்டாவது வயதில் ஆனி மகத்தன்று இறைவனோடு இரண்டறக் கலந்தார். ***

# திருநாவுக்கரசர்

வித்யா சிவகுமாரன்

இவர் வாழ்ந்த காலம் கி.பி.6ம் நூற்றாண்டு என அறியப்படுகிறது. அப்பர், வாகீசர் எனப்படும் பெயர்களாலும் இவர் அழைக்கப்படுகின்றார். இவரது வரலாறு பற்றிய செய்திகள் சேக்கிழாரின் பெரியபுராணத்தில் காணப்படுகிறது. இவரது காலத்தில் வட தமிழகத்தை பல்லவ மன்னன் மகேந்திரவர்மன் ஆட்சிசெய்தான்.

இவர் பிறந்த இடம் திருவாமூர் ஆகும். இவரது தந்தையார் பெயர் புகழனார் தாயார் பெயர் மாதினியார். இவரது இயற்பெயர் மருள்நீக்கியார். தமக்கையார் திலகவதியார். திலகவதியாருக்கு கலிப்பகையார் என்பவரை மணமகனாக நிச்சயித்திருந்தனர். சிலநாட்களில் நாட்டில் இடம்பெற்ற போரில் பங்குபெறுவதற்காக கலிப்பகையார் வடநாடு செல்லநேரிட்டது. இவ்வேளையில் இவர்களது பெற்றோர் நோய்வாய்ப்பட்டு இறந்தனர். கலிப்பகையாரும் போரில் இறந்துவிட, மருள்நீக்கியார் தமக்கையாரின் பராமரிப்பில் வாழ்ந்துவந்தார். மருள்நீக்கியார் இந்த உலக வாழ்க்கையின் நிலையில்லாத தன்மையை அனுபவ வாயிலாக உணர்ந்திருந்தார். இவ்வேளையில் தமிழ்நாட்டில் சமண சமயம் ஓரளவு வேரூன்றத் தொடங்கியிருந்தது. பல்லவ மன்னனும் சமண சமய வளர்ச்சிக்குப் பேராதரவு அளித்துவந்தான். மருள்நீக்கியாரும் சமய சமயக் கொள்கையின்பால் நாட்டமுற்று, பாடலிபுரம் என்ற ஊரில் இருந்த சமணப் பள்ளியில் சேர்ந்து சமண நெறியினைக் கற்றுத் தேர்ந்தார். இவரது மேலான அறிவைக் கண்ட சமணகுருமார் இவருக்கு தருமசேனர் எனப் பெயரிட்டு, சமணப் பள்ளியின் தலைவராக்கினர்.

திலகவதியார் திருவதிகை என்னும் சிவத்தலத்திலுள்ள இறைவனிடம் தன் தம்பியார் விரைவில் சைவ சமயத்துக்குத் திரும்பவேண்டுமென்று பிரார்த்தித்து வந்தார். ஒருநாள் மருள்நீக்கியார் மிகக் கொடிய சூலை நோய்க்கு ஆளானார். நோயைக் குணமாக்க சமணக் குருமார் எடுத்த மருத்துவ முயற்சிகளும் எதுவித பலனையும் கொடுக்கவில்லை. மருள்நீக்கியார் தம் நிலையைத் தமக்கையாரிடம் தெரியப்படுத்திய பின் ஒருநாள் அவரிடம் வந்தார்.

திலகவதியார், மருள்நீக்கியாருக்கு திருநீறு அணிவித்து, திருவதிகை வீரட்டானேசுவரர் சந்நிதிக்கு அழைத்துச் சென்றார். அங்கே மருள்நீக்கியாருக்கு இறைவன் மீது தமிழ் பாக்கள் பாடும் உணர்வு மேலிட, ''கூற்றாயினவாறு'' எனத் தொடங்கும் திருப்பதிகத்தைப் பாடினார். உடனே சூலை நோயும் நீங்கியது. இந்த நேரத்தில் ''இனி நீ 'திருநாவுக்கரசு' என்று நாமம் பெறுவாய்'' என்ற வானிலிருந்து ஒரு அசரீரி ஒலித்தது. திருநாவுக்கரசர் திருவதிகையில் தங்கியிருந்து உழவாரப் பணியும் சிவத்தொண்டும் புரிந்துவந்தார்.

இவர் மீண்டும் சைவராகிய செய்தி சமணக் குருமாருக்கும் பல்லவ மன்னனுக்கும் எட்டியது. அவர்கள் நாவுக்கரசரைத் தண்டிக்க எண்ணி, பலவிதமான கொடுமைகளுக்கும் ஆளாக்கினர். ஆனால் இறைவன் திருவருளால் அவர் எல்லாவற்றிலிருந்தும் விடுபட்டார். இவர்கள் செய்த இடர்கள் அனைத்திலும் இருந்து நாவுக்கரசர் மீண்ட செய்தி அறிந்த மன்னனும் அவரை வீழ்ந்து வணங்கி மீண்டும் சைவ சமயத்தவன் ஆகினான்.

திருநாவுக்கரசர் சிவத் தலங்கள் பலவற்றுக்கும் சென்று இறைவனைத் தமிழால் பாடிப் பரவினார். பின்னர் திருஞானசம்பந்தப் பெருமானைப் பற்றி அறிந்து, அவரைக் காணச் சீர்காழிக்குச் சென்றார். சம்பந்தர் அவரை 'அப்பரே' என்று அழைத்து மகிழ்ந்தார். இருவருமாகப் பல தலங்களுக்கும் சென்று வழிபட்டனர்.

அப்பரது சிவத்தொண்டுகள் பற்றிப் பலவகையான செய்திகள் தமிழ்நாட்டில் பரவியது. அப்பூதியடிகள் என்னும் அடியவர் அப்பர்மீது மிகுந்த அன்பு பாராட்டினார். பாம்பு தீண்டி இறந்த அவரது மகனை, "ஒன்றுகொலாம்" என்று தொடங்கும் பதிகத்தைப் பாடி உயிர்ப்பித்தார்.

இவ்வாறு மேலும் பல அற்புதங்களைச் செய்த அப்பர், தனது தள்ளாத வயதில் திருக் கைலாயத்திற்குச் செல்ல விரும்பினார். நீண்டதூரம் நடந்தார். இதனால் இவரது அங்கங்கள் தேயத் தொடங்கின. இவரது உறுதியை அறிந்த சிவபெருமான், திருவையாற்றிலே சென்று கயிலையைத் தரிசிக்குமாறு பணித்தார். திருவையாற்றிலே கயிலைநாதனைக் கண்டு, "மாதர்ப் பிறைக்கண்ணியானை" எனத் தொடங்கும் பதிகத்தைப் பாடினார்.

நீண்ட காலம் வாழ்ந்து, பல தேவாரப் பதிகங்களைப் பாடியருளிய திருநாவுக்கரசர் சித்திரை மாத சதய நாளில் இறைவன் அடி சேர்ந்தார்.

---

# சைவத் தமிழ் அன்பர்களுக்கு ஒரு வேண்டுகோள்!

சைவநீதி மலர் அடுத்த வருடம் புத்தம் புது மலராய் நறுமணம்வீசி பொலிவுடன் விளங்க, சமய சம்பந்தமானதும், பலதரப்பட்ட மக்களுக்கும் பயன் தரக்கூடிய வகையிலும் உள்ள ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன. அவை, சைவநீதி மலரில் ஏற்கெனவே வெளிவராத புதிய ஆக்கங்களாக இருப்பது விரும்பத் தக்கது. இவற்றை தமிழிலோ, ஆங்கிலத்திலோ கட்டுரைகளாகவும், கவிதைகளாகவும், வினா விடைகளாகவும், கதைகளாகவும் தமது ஆக்கங்களைத் தந்துதவுமாறு கேட்டுக்கொள்கிறோம். ஆக்கங்கள் ஒவ்வொன்றும் தரமானதாகவும், இம் மலரில் மூன்று பக்கங்களுக்குள் அடங்குவதாகவும் இருத்தல் வரவேற்கத் தக்கது. இதனை கணனி மூலம் அச்சிட்டோ, திருத்தமான கையெழுத்துப் பிரதியாகவோ 1.10.2008க்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

ஆசிரியர்,
சைவநீதி

ஸ்ரீ

# இந்து மத சேவை

திருமணம், பதிவுத் திருமணம், புண்ணியா வாசகம்,
புதுமனைப் புகுவிழா, புதுக் கடைத் திறப்பு விழா,
விவாகப் பொருத்தம் பார்த்தல்,
இறுதிக் கிரியைகள், அந்தியேட்டி,
மற்றும் அனைத்து இந்து மதச் சேவைகளுக்கும்
எம்மை நாடுங்கள்.

**சைவச் சிவாச்சாரியார், சைவ கிரியாபூஷணம்**
**திருமணப் பதிவாளர்**
**ச.திருஞானசம்பந்தக் குருக்கள் B.A.**

Tel: 416 535 1491
769 lansdowne Ave., Toronto M6H 3Z1

# ப்ருந்தகானாலயா இசைக் கல்லூரி



சங்கீத வகுப்புக்கள்



வாய்ப்பாட்டு வயலின், வீணை ....
கற்பித்தல் அனுபவமுள்ள ஆசிரியரால் முறையாகக்
கற்பிக்கப்படுகிறது.

வருடாந்தம் பரீட்சைகள் நடாத்தப்பட்டு சான்றிதழ்கள் வழங்கப்படும்.
**Practical and theory preparing for Exams and performance**

ஆசிரியர்:
உலகப் புகழ்பெற்ற மாபெரும் இசைமேதை மாவிட்டபுரம்
N.S.உருத்திராபதி அவர்களின் பேத்தியும்,
கலாபூஷணம், ஆசிரியர் இராஜாமணி சிங்கராஜாவின் மகளுமாகிய
ஹம்சத்வனி ஜெயந்திரன்

தொடர்புகளுக்கு:
Tel: 416 244 8250

வகுப்புகள் நடைபெறும் இடங்கள்
**Scarborough, Toronto, Mississaugh**

# வான் சிறப்புரை

மலர்மாமணி, கவித்தேன் குன்றம்
புலவர் இளஞ்செழியன் எம்.ஏ.,

தேன்திரு வாச கத்தைத்
தேர்ந்தவர், ஆய்ந்த செம்மல்
வான்சிறப் புரை, ந மக்கு
வழங்கினார் வெல்லம் போலே!
நானதைப் படித்தேன்; எங்கும்
நற்றமிழ் மிளிரக் கண்டேன்!
ஏனிந்த உரைஎன் றிட்டால்,
எல்லாரும் படிப்ப தற்கே!

திருவாச கத்திற் கிங்கே
திருவாச கன், எழுந்து,
தருகின்ற உரைஒவ் வொன்றும்
தமிழுக்குத் தமிழை ஊட்டும்!
வருகின்ற தலைமு றைக்கே
'வாசகப் பெருமை' தன்னைப்
பறைகின்ற இவரின் ஆற்றல்
பலர்புகழ் ஆற்ற லாகும்!

உரைவகை பதினான் காகும்!
ஓதிய அவற்றுள், இந்த
உரை 'தொகுத் துரைத்தல்' என்னும்
ஒப்பில்லா முறையாம்! நன்னூல்
வரையறை செய்தி ருக்கும்
வழிநின்று எனது நண்பர்
உரைவளம் கண்டுள் ளார்கள்!
தமிழ்க்கிது பெருந்தொண் டாகும்!

‘பொருள் காணல்’ எனு
புதுப் பொருள் பல
அருள்திரு வாச கன், தன்
ஆய்வினால் படைத்தி
ஒருபெரும் புலமை கண்
உண்மையில் உவக்கி
பெரும்உழைப் பாலே இ
பேருரை அவர்தந் துள்

பலநாளும் படித் திருந்து
படுக்காமல் விழித்தி ரு
பலர்உரை ஒப்பிட் டாய்ந்
பழகிய தமிழில், நல்ல
மலரென இதைநம் கையி
மகிழ்வுடன் நீட்டி யுள்
உலராத உரைநூல் இந்நூல்
உலகினர் ஏற்கும் நன்னு

பாவலர் இவர்தான்! இந்த
பாட்டுநூல் மீது வைத்த
ஆவலால், காத லாலே
ஆக்கிய உரைநூல் இந்நு
சாவலால் - நினைப்பில்
சஞ்சல உலகில், ஞான
பூவலால் - வேறில் லா, இ
புத்தகம் தேவை என்பே

# வான் சிறப்புரை

மலர்மாமணி, கவித்தேன் குன்றம்
புலவர் இளஞ்செழியன் எம்.ஏ.,

தேன்திரு வாச கத்தைத்
தேர்ந்தவர், ஆய்ந்த செம்மல்
வான்சிறப் புரை, ந மக்கு
வழங்கினார் வெல்லம் போலே!
நானதைப் படித்தேன்; எங்கும்
நற்றமிழ் மிளிரக் கண்டேன்!
ஏனிந்த உரைஎன் றிட்டால்,
எல்லாரும் படிப்ப தற்கே!

திருவாச கத்திற் கிங்கே
திருவாச கன், எழுந்து,
தருகின்ற உரைஒவ் வொன்றும்
தமிழுக்குத் தமிழை ஊட்டும்!
வருகின்ற தலைமு றைக்கே
'வாசகப் பெருமை' தன்னைப்
பறைகின்ற இவரின் ஆற்றல்
பலர்புகழ் ஆற்ற லாகும்!

உரைவகை பதினான் காகும்!
ஓதிய அவற்றுள், இந்த
உரை 'தொகுத் துரைத்தல்' என்னும்
ஒப்பில்லா முறையாம்! நன்னூல்
வரையறை செய்தி ருக்கும்
வழிநின்று எனது நண்பர்
உரைவளம் கண்டுள் ளார்கள்!
தமிழ்க்கிது பெருந்தொண் டாகும்!



'பொருள் காணல்'
புதுப் பொருள் ப
அருள்திரு வாச கன்,
ஆய்வினால் படை
ஒருபெரும் புலமை
உண்மையில் உவ
பெரும்உழைப் பாே
பேருரை அவர்தந்

பலநாளும் படித் திரு
படுக்காமல் விழித்தி
பலர்உரை ஒப்பிட் டா
பழகிய தமிழில், நல்
மலரென இதைநம் கை
மகிழ்வுடன் நீட்டி யு
உலராத உரைநூல் இந்
உலகினர் ஏற்கும் நன்

பாவலர் இவர்தான்! இ
பாட்டுநூல் மீது வைத்
ஆவலால், காத லாலே
ஆக்கிய உரைநூல் இந்
சாவலால் - நினைப்பில்
சஞ்சல உலகில், ஞான
பூவலால் - வேறில் லா,
புத்தகம் தேவை என்

# ஆசாரம் - ஆரோக்கியம் - ஆனந்தம்

- பேரறிஞர் ஆழ்கடலான் முருகவே பரமநாதன்

“உரைக்க வல்லாருக்கும் நினைக்க வல்லாருக்கும் வைகுண்டமாம் - நம்மூர் எல்லாம்”

நரகத்திலே இருந்து ஒருவர் பகவானை நினைக்கிறார். அந்நரகமே வைகுந்தமாம். ஞானத்தைக் காட்டிலும் ஆசாரத்துக்கு விசேஷ கௌரவம் தரப்பட்டிருக்கின்றது. ஆசாரம் என்ற ஒன்று இருந்தாற்றான் கட்டுப்பாட்டுடன் வாழ்க்கை இருக்கும். அதனால்தான் அவ்வளவு சாஸ்திரங்கள் வைக்கப்பட்டுள்ளன.

யக்ஞம்(வேள்வி) பண்ணுகிறவர்கள், பண்ணச்செய்கிறவர்கள், உடன் இருப்பவர்கள் எல்லோருக்குமே என்ன கொடுக்கும் இந்த யக்ஞம்! இப்போது சொன்ன ஆயுள் ஆரோக்கியம் எல்லாம் கொடுக்கும். உபநிஷத் என்ன சொல்கிறது தெரியுமோ? மனிதனுடைய ஆசாரம், ஆனந்தம், ஆரோக்கியத்தில் இருக்கிறது என்று சொல்கிறது. நன்றாகச் சாப்பிடவேண்டும்; ஜீரணமாக வேண்டும். இதுதான் ஆனந்தம். பகவானுக்கு என்று நினைத்துக்கொண்டு நாம் சாப்பிடுவதாலே சரீர ஆரோக்கியத்தைப் பூரணமாக அவன் நமக்குக் கொடுக்கிறான்.

குறையொன்றுமில்லை முக்கூர் லட்சுமி நரசிம்மாசாரியார்.

ஆசாரம் என்பது ஒழுக்கம்; ஆசாரம் என்பது கல்வி; ஆசாரம் என்பது சுத்தம்; புனிதம்; தூய்மை; பரிசுத்தம்; சமயாசாரம்; மனிதாய நலம்; சக்கரவர்த்திகளும், முனிவர்களும் தேவர்களும் ஓமம், யாகம் செய்வது பற்றிப் புராணங்களும், இதிகாசங்களும் வேதங்களும் பேசுகின்றன. புத்திரகாமேஷ்டியாகம். சந்ததி வேண்டிச் செய்யப்படுகின்றது. யாகத்தின் பயனாக நீடித்த ஆயுள், ஆரோக்கியம், செல்வம், கல்வி போல்வன கிடைக்கின்றன. இந்த யாகப் பூர்த்தியிலே வாழ்த்துதல் முக்கிய நிகழ்வு. இதில் முதல் வருவது நீடித்த பூரண ஆயுள். அடுத்து ஆரோக்கியமான வாழ்வு இடம்பெறும்.

இந்த நிரலிலிருந்து நமக்கு என்ன புலப்படுகின்றது? ஆரோக்கியமான வாழ்விற்கு ஆசாரம் இன்றியமையாதது. ஆசாரமும் ஆரோக்கியமும் நிறைந்த வாழ்வில் ஆனந்தம் இயல்பாகவே அமையும். எனவே, மன மகிழ்ச்சி தானாகவே வரும். இன்று சுற்றுப்புறச் சூழலின் சுகாதாரம் பற்றிப் பெரிதும் அக்கறை காட்டப்படுகிறது. புனிதமான வாழ்வின் ஓரங்கம் சுத்தம். சுத்தம் சுகம் தரும். நமக்குச் சமயாசாரம், நல்லொழுக்கம் என்பன நல்வாழ்விற்குக் கிடைத்த விதிமுறைகளாம். மனித மேம்பாடுபற்றி, மனித விழுமியம் பற்றிப் பேசும் தமிழ்சார்ந்த ஏடுகள் நிறைய உண்டு. ஆத்திசூடியில் இருந்து அறநெறிச்சாரம் வரையான நீதி நூல்கள், இதோபதேசம் என்பனவும், கீழ்க்கணக்கு நூல்களும் இதில் அடங்கும். பதினெண்கீழ்க் கணக்கு நூல்களில் ஒன்று ஆசாரக் கோவை. இதன் ஆசிரியர் கயத்தூர் பெருவாயின் முள்ளியார். இவர், சைவசமயத்தினர். இப்பார்வையிலே, பல சைவ சமய இலக்கியங்கள் நம் புனித வாழ்வு பற்றிப்பேசும் கையேடுகளாம். ஒழுக்கம், ஒழுங்கு, ஒழுகலாறு சட்ட திட்டம் நீதிமுறை போன்ற பல அடிப்படை நூல்கள் மனித சமுதாயத்தின் உயரிய வாழ்விற்கு உகந்த ஏடுகளாம். எல்லாம் நடைமுறைப்படுத்த வேண்டியன. சொல்வேறு, செயல் வேறாய் அமைதல் பொருந்தாது. மனம் வாக்குக் காயம் மூன்றும் சுத்தமாய் அமைதல் முக்கியம். இதுவே, திரிகரணசுத்தியாம். காந்தியடிகள் இம்மூன்று தூய்மை பற்றியும் எடுத்துப் பேசுகின்றார் ‘சத்தியசோதனையில்’.

'கனவிலும் இன்னாது மன்னோ சொல்வேறு

செயல்வேறு பட்டார் தொடர்பு'

என்பது குறட்பா. எனவே, ஒரு புனிதமான வாழ்வின் இலட்சியக் கோட்பாட்டில் ஆசாரம் முக்கிய அங்கம் வகிக்கிறது. சைவமயிகளாகிய நாம், ஆசார சீலர்களாய் வாழ்ந்து உயரிய சமுதாயத்தைக் கட்டியெழுப்ப முயல்வோம். சுத்தம், தூய்மை, புனிதம், துப்புரவு பேணுவது இன்றியமையாதது. சுற்றுப்புறச் சூழல் அழுக்காகாமல் இருக்க விஞ்ஞானம் பல வழிமுறைகளைக் கையாளும். உடல், துணி, பாத்திரங்கள், வீடு, வாசல், சுற்றாடல் இன்னபிறவற்றையும் சுத்தம் செய்ய நீர் பயன்படுத்தப்படும். இயந்திரங்கள், இரசாயனப் பொருட்கள் மூலம் சுகாதாரம் பேணப்படும். பொதுவாக நீரின் சிறப்பை வள்ளுவனார் வான் சிறப்பிலே வெளிக் கொணர்ந்துள்ளார்.

'துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்கு

துப்பாய தூஉம் மழை.' (திருக்குறள் 12)

உண்பவர்களுக்குச் சிறந்த உணவுகளை உருவாக்கிக்கொடுத்து, அவற்றை உண்பவர்களுக்குத் தானும் உணவாக இருப்பது மழையாகும்.

நீர் கெட்டுப் போகாமல் இருக்க விஞ்ஞானம் பல கலவைகளைத் தயார்செய்து கொடுத்துளது. நாம் குடிக்கும் நீர், உண்ணும் உணவு, உடுக்கும் உடை, உண்கலங்கள், சமையற்கட்டு, பாத்திரங்கள் போல்வனவும் துப்புரவாய் அமைதல் ஆரோக்கிய வாழ்விற்கு அடித்தளங்களாம். புறச் சுத்தம் பேணுதல் போல அகச்சுத்தம் காப்பதும் நம் கடமையாகும். வள்ளுவர் இவ்விரு விடயங்களின் முக்கியத்துவத்தை ஒரு குறட்பாவிலேயே எடுத்து விளக்குகிறார்.

'புறத்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை

வாய்மையால் காணப் படும். (குறட்பா 298)

உடம்பின் புற அழுக்கு தண்ணீராற் தூய்மை அடைகிறது. அஃதே போல மனம் வாய்மையினால் தூய்மை அடைகிறது. புற அழகோடு, அக அழகும் பேணிக்காத்தல் முக்கியம். அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பது ஔவை வாக்கு. மனநிகழ்வுகளின் கண்ணாடியே முகம். மனம் செப்பமானால் மந்திரம் செபிக்க வேண்டாம்.

'அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்

கடுத்தது காட்டும் முகம்.' (குறட்பா 706)

தன்னைச் சார்ந்த பொருளின் நிறத்தைத் தான் கொண்டு பிறர்க்குக் காட்டும் காண்ணாடிபோல, ஒருவருடைய மனத்தின் உணர்ச்சியை அவரது முகம் பிறர்க்கு அறிவித்துவிடும்.

எனவே, மனச் செம்மையும் பேணப்படல் வாழ்வைச் சிறப்பிக்கும். சேர்ந்ததன் வண்ணமாதல் உயிர் இயற்கை. மனித இயல்புமாம். இதையே நல்லாரிணக்கம் என்பர். நாம் கூடும் கூட்டம் நல்லவர்களோடுதான் அமைதல் நன்று. 'தக்கோர் இனத்திரு' என்றார் ஔவை. ஆக, இன நலமும் மன நலமும் பேணல் நம்மை உயர்ந்த நிலைக்கு உய்க்கும்.

'மனநலம் நன்குடைய ராயினும் சான்றோர்க்கு
இனநலம் ஏமாப் புடைத்து.' (குறட்பா 458)

மனநன்மையை முன்னை நல்வினையால் தாமே உடையராயினும், சான்றோர்க்கு இனத்தின் நன்மை மேலும் நல்ல காவலாகும்.

நல்லாரைக் காண்பதுவும் நன்று அவரோடு இணங்கி இருப்பதுவும் நன்று. இம் மனமாசு அகற்றி, மாண்புடன் வாழ வழிவகுப்பது மனிதம். இந்த நல்ல மனப்பாங்குபற்றிப் பல குறட்பாக்கள் எழுந்துள்ளன.

'மனத்தூய்மை செய்வினை தூய்மை இரண்டும்
இனந்தூய்மை தூவா வரும்' (குறட்பா 455)

'மனம்தூ யார்க்கெச்சம் நன்றாகும் இனந்தூயார்க்கு
இல்லை நன்றாகா வினை' (குறட்பா 456)

மனந்தூய்மை உடையார்க்கு மக்கட் பேறு நன்றாகும். இனம் தூய்மையாக உள்ளார்க்கு எல்லாம் நன்மையாக முடியும்.

'மனநலம் மன்னுயிர்க்கு ஆக்கம் இனநலம்
எல்லாப் புகழும் தரும்.' (குறட்பா 457)

'மனநலத்தின் ஆகும் மறுமை மற்றஃதும்
இனநலத்தின் ஏமாப்பு உடைத்து' (குறட்பா 459)

மனத்தின் நலத்தால் மறுமை இன்பம் உண்டாகும். அதுவும் இனத்தின் நன்மையால் மேலும் சிறப்புடையதாகும்.

'மனத்தானாம் மாந்தர்க்கு உணர்ச்சி இனத்தானாம்
இன்னான் எனப்படுஞ் சொல்' (குறட்பா 453)

மக்களுக்கு இயற்கையறிவு மனத்தால் உண்டாகும். இவன் இத்தன்மையன் என்று உலகினரால் அறியப்படும் சொல் சேர்ந்த இனத்தால் ஏற்படும்.

மனித விழுமியங்கள், விழுப்பங்கள் பேணிப் பாதுகாக்கப்படல் உசிதமான வாழ்வைத் தரும். சேரும் கூட்டம் நல்லதாய் அமைதல் முக்கியம். இஃதே போல, உணவிலும் நாம் அக்கறையுள்ளவர்களாய், கட்டுப்பாடுடையவர்களாய் வாழவேண்டும். சாத்வீக உணவை உட்கொள்வது நலன்தரும். கெட்ட குணங்களைத் தூண்டும் இறைச்சி, மாமிசம், ஒவ்வா உணவுகள், குடிவகைகள், மஸ்துகள், கஞ்சா, அபின், பிரண்டி, விஸ்கி, தூள் வகைப் பாவனை என்பவற்றை முற்றாய்த் தவிர்த்தல் நலன்தரும். பிறந்தநாட் கொண்டாட்டம், ருதுசாந்திக் கொண்டாட்டம் என்பவற்றில் குடிப்பதும் வெறியாடுவதும் புனித கொண்டாட்டங்களை மாசுபடுத்தும். மேலை நாட்டவர்கள் பலர் தாவர போசனத்தின் மேன்மையை உணர்ந்து, மாமிச உணவுகளை விட்டுவிட்டனர். பல அறிஞர்கள் சைவ உணவு பற்றிப் பல நூல்களை ௌியிட்டுள்ளனர். நாம் அவ்வழியிலேயே நம்மை வழிநடத்துவது நன்மையைத் தரும். சைவ ஆசாரங்களைக் கட்டிக் காப்பதனாலேயே மனம் பக்குவமடையும்.

வாழ்வு மேன்மையடையும். உயிர் நலம் ஓங்கும். தின வாழ்வின் நடைமுறைகள் செவ்வனே கடைப்பிடிப்பதால் ஆன்மீகம் அழைக்கும்.

'மாறுபா டில்லாத உண்டி மறுத்துண்ணின்
ஊறுபாடில்லை உயிர்க்கு.' (குறட்பா 945)

மாறுபாடில்லாத உணவை அளவு மீறாமல் மறுத்து அளவோடு சாப்பிட்டால், உயிர் உடம்பில் வாழ்வதற்கு இடையூறான நோய் என்பது இல்லாமற் போகும்.

மகாகவி பாரதியார் மனம் வெளுக்க வழியில்லையே என முத்துமாரியிடம் முறையிடும் பாடல் நமக்கு நல்ல மறுமலர்ச்சியைத் தரும் பாங்கில் அமைந்துள்ளது.

துணிவெளுக்க மண்ணுண்டு – எங்கள் முத்து
மாரியம்மா எங்கள் முத்துமாரி
தோல் வெளுக்கச் சாம்பருண்டு - எங்கள் முத்து
மாரியம்மா எங்கள் முத்துமாரி
மணிவெளுக்கச் சாணையுண்டு - எங்கள் முத்து
மாரியம்மா எங்கள் முத்துமாரி
மனம் வெளுக்க வழியில்லை - எங்கள் முத்து
மாரியம்மா எங்கள் முத்துமாரி
பிணிகளுக்கு மாற்றுண்டு - எங்கள் முத்து
மாரியம்மா எங்கள் முத்துமாரி
பேதைமைக்கு மாற்றில்லை - எங்கள் முத்து
மாரியம்மா எங்கள் முத்துமாரி
அணிகளுக்கோர் எல்லையிலாய் - எங்கள் முத்து
மாரியம்மா எங்கள் முத்துமாரி
அடைக்கலமிங் குனைப்புகுந்தோம் - எங்கள் முத்து
மாரியம்மா எங்கள் முத்துமாரி (உலகத்து நாயகியே)

துணிகளைச் சலவைசெய்து அழுக்கறுத்தல் போல மனதை வெளியே எடுத்துக் கறையை அகற்ற முடியாது. ஆனால், மனத்தைச் சுவீகரிக்கும் அரக்கத்தனங்களை உட்புகாமல் காக்க வேண்டும். அவர்களாலேதான் எம் மத்தியில் அரக்கத் தனம் மலிந்து காணப்படுகிறது. அவையே காம, குரோத, லோப, மோக, மத மாற்சரியங்கள். இவற்றை அறவே வேரோடு கெல்லி எறியவேண்டும். தண்ணீரிலே தோணி மிதக்கிறது. ஆனால், அத்தண்ணீரே கலத்துட் புகுந்துவிட்டால் தோணி கடலிலே ஆழ்ந்து நமக்கும் அபாயம் ஏற்படும். எனவே, தீய பண்புகளைக் களைந்து நல்ல பக்குவமான குணநலங்களை நிரப்பி வாழ்க்கைத் தோணியைச் செலுத்துவோம்.

# திருவள்ளுவர் ஆண்டு

திரு.மு.க.தமிழேந்தி

இன்று வழக்கில் உள்ள நாட்காட்டியில் உள்ள பிரபவ முதல் அட்சய வரையுள்ள 60 ஆண்டுகளின் பெயர் தமிழ் அல்ல - தமிழருக்குரியதும் அல்ல. இது ஆரியரின் நாட்காட்டி. இந்த 60 ஆண்டுகளின் பெயர் தமிழராகிய எம்முடைய அறிவிற்கும் அறிவியலுக்கும் பொருத்தமானதாக இல்லை. நாம் தப்புத் தப்பாகச் செய்கின்ற தவறினால் பல துயரத்தினை நாளாந்தம் சுமக்கின்றோம்.

நாம் தமிழர். எமக்கு பண்டைய பல தமிழ்ச் சான்றோர், அறிஞர், புலவர் பல நல்ல எண்ணத்தினை பல வடிவில் வழங்கி இருக்கின்றனர். நாம் அதைத் தேடிப் படித்து அந்த வழியினில் முன்னேற வேண்டும். இன்னொரு இனத்தனவரின் வழியைப் படித்து அறிவதில் தவறில்லை. ஆனால் தமிழரின் நேர்த்தியான உண்மையான வாழ்க்கைக்கு உயர்ந்த நல்ல வழிமுறை அனைத்தும் எம்மிடத்தில் இருப்பதை அறியாமல் எம்மிடத்தில் ஒன்றுமில்லை என நினைப்பது எமது அறியாமை ஆகும்.

1921 ஆம் ஆண்டு எமது அனைத்து தமிழ்ச் சான்றோர், அறிஞர், புலவர், போன்றோர் சென்னை பச்சையப்பன் கல்லூரியில் தமிழ்க் கடல் மறைமலை அடிகளின் தலைமையில் ஒன்று கூடி ஆராய்ந்தனர் .இந்த ஆய்வின் முடிவாக திருவள்ளுவர் பெயரில் தொடர் ஆண்டாகக் கொண்டு அதையே தமிழ் ஆண்டாக கொண்டனர். திருவள்ளுவர் காலம் கி.மு 31 என்று முடிவு செய்தனர்.

திருவள்ளுவர் ஆண்டிற்கு முதல் திங்கள் சுறவம் எனவும் கடைசித் திங்கள் சிலை ஆகும். புத்தாண்டு சுறவத்திங்கள் முதல் நாள். 7 கிழமை நாளின் பெயரில் புதன் சனி தவிர்நத மற்றயவை தமிழ் ஆகும். புதனை தமிழில் அறிவன் எனவும் சனியை காரி எனவும் நடைமுறைப் படுத்தப்பட்டது. இப்போது தமிழக அரசு இதை நடைமுறைப் படுத்தி வருகிறது.

சுறவம் 29 நாளையும், கும்பம் 30 நாளையும், மீனம் 30 நாளையும், மேழம் 31 நாளையும், விடை 32 நாளையும், ஆடவை 31 நாளையும், கடகம் 32 நாளையும், மடங்கல் 31 நாளையும், கன்னி 30 நாளையும், துலை 30 நாளையும், நளி 30 நாளையும், சிலை 29 நாளுமாக மொத்தம் 365 நாளை ஆண்டாகக் கொண்டவர் தமிழர்.

ஆங்கில ஆண்டுடன் 31ஐக் கூட்டி வருவது திருவள்ளுவர் ஆண்டு. ஆங்கில ஆண்டு 2008 உடன் 31ஐக் கூட்ட வேண்டும். இந்த ஆண்டு 2039 திருவள்ளுவர் ஆண்டு. இங்கே எமது தமிழ் அறிஞர் புதிதாக எதையும் புகுத்தவில்லை. ஆரியர் இடையில் சொருகிய ஆரியரின் நாட்காட்டியை அதாவது இடையில் தமிழருக்குள் சொருகியதை தமிழ் அறிஞர்கள் அகற்றி, இன்று நம்மால் பயன்படுத்தப் படாமல் இருக்கும் தமிழருக்குரிய தமிழ் நாட்காட்டியை நடைமுறைப் படுத்தி இருக்கின்றனர்.

தமிழரின் காலக் கணிப்பு பகலவனை அடிப்படையாகக் கொண்டது. கதிரவன் தோன்றும் வேளையில் இருந்து மறையும் வேளை வரை பகல் எனவும் பின்னர் இரவு எனவும் கணித்தனர். ஒரு நாள் என்பது

பகலவன் தோன்றி மீண்டும் அடுத்த நாள் தோன்றும் வரை ஆகும். வான மண்டலத்தை 12 ஓரையாகப் பிரித்திருந்தனர். ஒரு ஓரைக்குள் பகலவன் நுழைந்து வெளியேறும் காலத்தினை ஒரு திங்கள் எனக் கணக்கிட்டுக் கொண்டனர். 12 ஓரையையும் 12 திங்களாக தமிழர் கொண்டுள்ளனர். பகலவனை நடுவில் கொண்ட நீள் வட்டப் பாதையில் பூமியில் இருந்து பார்த்தால் பகலவனுக்குப் பின்புறம் ஒரு ஓரை மறைந்திருக்கும். அந்த ஓரை மறைந்திருக்கும் காலம் தான் ஒரு திங்கள் ஆகும். அப்போது அந்த ஓரையின் வடிவத்தைக் கொண்டே ஒவ்வொரு திங்களின் பெயர் இடப்பட்டுள்ளது. எடுத்துக் காட்டாக தமிழரின் முதல் திங்கள் சுறா வடிவத்தைக் கொண்டதால் சுறவம் என அழைக்கின்றனர். இரண்டாவது திங்கள் கும்ப வடிவத்தைக் கொண்டதால் கும்பம், இப்படி மீனம், மேழம், விடை, ஆடவை, கடகம், மடங்கல், கன்னி, துலை, நளி, சிலை என 12 திங்களும் தமிழில் அழைக்கிறோம்.

தமிழர் திருநாள்

திருவள்ளுவர் கிழமை விழா

சிலைத்திங்கள் 29 போகிவிழா

சுறவத்திங்கள் 1 பொங்கல் புத்தாண்டுவிழா

சுறவத்திங்கள் 2 திருவள்ளுவர் விழா

சுறவத்திங்கள் 3 பட்டிப் பொங்கல் உழவர்விழா

சுறவத்திங்கள் 4 இயல்தமிழ்விழா

சுறவத்திங்கள் 5 இசைத்தமிழ்விழா

சுறவத்திங்கள் 6 நாடகத்தமிழ்விழா

நாம் தமிழ்ச் சான்றோரின் நல்ல அறிவுரையினை முன்னெடுத்து நடைமுறைக்கு கொள்ளவேண்டும். நாம் தமிழனாக வாழ வேண்டுமானால் தமிழைப் பேச வேண்டும்.

தமிழில் மாதங்கள் கீழ்வருமாறு அமையும்:

திருவள்ளுவர் ஆண்டு 2038
சிலை
திசம்பர் 2007- சனவரி -2008

| திங்கள் | செவ்வாய் | அறிவன் | வியாழன் | வெள்ளி | காரி | ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | 1 16 |
| 2 17 | 3 18 | 4 19 | 5 20 | 6 21 | 7 22 | 8 23 |
| 9 24 | 10 25 | 11 26 | 12 27 | 13 28 | 14 29 | 15 30 |
| 16 31 | 17 1 | 18 2 | 19 3 | 20 4 | 21 5 | 22 6 |
| 23 7 | 24 8 | 25 9 | 26 10 | 27 11 | 28 12 | 29 13 |

திருவள்ளுவர் ஆண்டு 2039
சுறவம்
சனவரி –பிப்ரவரி-2008

| திங்கள் | செவ்வாய் | அறிவன் | வியாழன் | வெள்ளி | காரி | ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|
| 1 14 | 2 15 | 3 16 | 4 17 | 5 18 | 6 19 | 7 20 |
| 8 21 | 9 22 | 10 23 | 11 24 | 12 25 | 13 26 | 14 27 |
| 15 28 | 16 29 | 17 30 | 18 31 | 19 1 | 20 2 | 21 3 |
| 22 4 | 23 5 | 24 6 | 25 7 | 26 8 | 27 9 | 28 10 |
| 29 11 | | | | | | |

திருவள்ளுவர் ஆண்டு 2039
கும்பம்
பிப்ரவரி – மார்ச்சு 2008

| திங்கள் | செவ்வாய் | அறிவன் | வியாழன் | வெள்ளி | காரி | ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|
| | 1 12 | 2 13 | 3 14 | 4 15 | 5 16 | 6 17 |
| 7 18 | 8 19 | 9 20 | 10 21 | 11 22 | 12 23 | 13 24 |
| 14 25 | 15 26 | 16 27 | 17 28 | 18 29 | 19 1 | 20 2 |
| 21 3 | 22 4 | 23 5 | 24 6 | 25 7 | 26 8 | 27 9 |
| 28 10 | 29 11 | 30 12 | | | | |

திருவள்ளுவர் ஆண்டு 2039
மீனம்
மார்ச்சு –ஏப்ரல் 2008

| திங்கள் | செவ்வாய் | அறிவன் | வியாழன் | வெள்ளி | காரி | ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 13 | 2 14 | 3 15 | 4 16 |
| 5 17 | 6 18 | 7 19 | 8 20 | 9 21 | 10 22 | 11 23 |
| 12 24 | 13 25 | 14 26 | 15 27 | 16 28 | 17 29 | 18 30 |
| 19 31 | 20 1 | 21 2 | 22 3 | 23 4 | 24 5 | 25 6 |
| 26 7 | 27 8 | 28 9 | 29 10 | 30 11 | | |

திருவள்ளுவர் ஆண்டு 2039
மேழம்
ஏப்ரல் - மே 2008

| திங்கள் | செவ்வாய் | அறிவன் | வியாழன் | வெள்ளி | காரி | ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 1 12 | 2 13 |
| 3 14 | 4 15 | 5 16 | 6 17 | 7 18 | 8 19 | 9 20 |
| 10 21 | 11 22 | 12 23 | 13 24 | 14 25 | 15 26 | 16 27 |
| 17 28 | 18 29 | 19 30 | 20 1 | 21 2 | 22 3 | 23 4 |
| 24 5 | 25 6 | 26 7 | 27 8 | 28 9 | 29 10 | 30 11 |
| 31 12 | | | | | | |

### திருவள்ளுவர் ஆண்டு 2039
### விடை
### மே - சூன் 2008

| திங்கள் | செவ்வாய் | அறிவன் | வியாழன் | வெள்ளி | காரி | ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|
| | 1 13 | 2 14 | 3 15 | 4 16 | 5 17 | 6 18 |
| 7 19 | 8 20 | 9 21 | 10 22 | 11 23 | 12 24 | 13 25 |
| 14 26 | 15 27 | 16 28 | 17 29 | 18 30 | 19 31 | 20 1 |
| 21 2 | 22 3 | 23 4 | 24 5 | 25 6 | 26 7 | 27 8 |
| 28 9 | 29 10 | 30 11 | 31 12 | 32 13 | | |

### திருவள்ளுவர் ஆண்டு 2039
### ஆடவை
### சூன் - சூலை 2008

| திங்கள் | செவ்வாய் | அறிவன் | வியாழன் | வெள்ளி | காரி | ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 1 14 | 2 15 |
| 3 16 | 4 17 | 5 18 | 6 19 | 7 20 | 8 21 | 9 22 |
| 10 23 | 11 24 | 12 25 | 13 26 | 14 27 | 15 28 | 16 29 |
| 17 30 | 18 1 | 19 2 | 20 3 | 21 4 | 22 5 | 23 6 |
| 24 7 | 25 8 | 26 9 | 27 10 | 28 11 | 29 12 | 30 13 |
| 31 14 | | | | | | |

### திருவள்ளுவர் ஆண்டு 2039
### கடகம்
### மே - சூலை – ஆகஃச்டு 2008

| திங்கள் | செவ்வாய் | அறிவன் | வியாழன் | வெள்ளி | காரி | ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|
| | 1 15 | 2 16 | 3 17 | 4 18 | 5 19 | 6 20 |
| 7 21 | 8 22 | 9 23 | 10 24 | 11 25 | 12 26 | 13 27 |
| 14 28 | 15 29 | 16 30 | 17 31 | 18 1 | 19 2 | 20 3 |
| 21 4 | 22 5 | 23 6 | 24 7 | 25 8 | 26 9 | 27 10 |
| 28 11 | 29 12 | 30 13 | 31 14 | 32 15 | | |

### திருவள்ளுவர் ஆண்டு 2039
### மடங்கல்
### ஆகஃச்டு – செப்டம்பர் 2008

| திங்கள் | செவ்வாய் | அறிவன் | வியாழன் | வெள்ளி | காரி | ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 1 16 | 2 17 |
| 3 18 | 4 19 | 5 20 | 6 21 | 7 22 | 8 23 | 9 24 |
| 10 25 | 11 26 | 12 27 | 13 28 | 14 29 | 15 30 | 16 31 |
| 17 1 | 18 2 | 19 3 | 20 4 | 21 5 | 22 6 | 23 7 |
| 24 8 | 25 9 | 26 10 | 27 11 | 28 12 | 29 13 | 30 14 |
| 31 15 | | | | | | |

### திருவள்ளுவர் ஆண்டு 2039
### கன்னி
### செப்டம்பர் – அக்டோபர் 2008

| திங்கள் | செவ்வாய் | அறிவன் | வியாழன் | வெள்ளி | காரி | ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|
| | 1 16 | 2 17 | 3 18 | 4 19 | 5 20 | 6 21 |
| 7 22 | 8 23 | 9 24 | 10 25 | 11 26 | 12 27 | 13 28 |
| 14 29 | 15 30 | 16 1 | 17 2 | 18 3 | 19 4 | 20 5 |
| 21 6 | 22 7 | 23 8 | 24 9 | 25 10 | 26 11 | 27 12 |
| 28 13 | 29 14 | 30 15 | | | | |

திருவள்ளுவர் ஆண்டு 2039
துலை
அக்டோபர் – நவம்பர் 2008

| திங்கள் | செவ்வாய் | அறிவன் | வியாழன் | வெள்ளி | காரி | ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 16 | 2 17 | 3 18 | 4 19 |
| 5 20 | 6 21 | 7 22 | 8 23 | 9 24 | 10 25 | 11 26 |
| 12 27 | 13 28 | 14 29 | 15 30 | 16 31 | 17 1 | 18 2 |
| 19 3 | 20 4 | 21 5 | 22 6 | 23 7 | 24 8 | 25 9 |
| 26 10 | 27 11 | 28 12 | 29 13 | 30 14 | | |

திருவள்ளுவர் ஆண்டு 2039
நளி
நவம்பர் – திசம்பர் 2008

| திங்கள் | செவ்வாய் | அறிவன் | வியாழன் | வெள்ளி | காரி | ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 1 15 | 2 16 |
| 3 17 | 4 18 | 5 19 | 6 20 | 7 21 | 8 22 | 9 23 |
| 10 24 | 11 25 | 12 26 | 13 27 | 14 28 | 15 29 | 16 30 |
| 17 1 | 18 2 | 19 3 | 20 4 | 21 5 | 22 6 | 23 7 |
| 24 8 | 25 9 | 26 10 | 27 11 | 28 12 | 29 13 | 30 14 |
| | | | | | | |

திருவள்ளுவர் ஆண்டு 2039
சிலை
திசம்பர் 2008 – சனவரி 2009

| திங்கள் | செவ்வாய் | அறிவன் | வியாழன் | வெள்ளி | காரி | ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|
| 1 15 | 2 16 | 3 17 | 4 18 | 5 19 | 6 20 | 7 21 |
| 8 22 | 9 23 | 10 24 | 11 25 | 12 26 | 13 27 | 14 28 |
| 15 29 | 16 30 | 17 31 | 18 1 | 19 2 | 20 3 | 21 4 |
| 22 5 | 23 6 | 24 7 | 25 8 | 26 9 | 27 10 | 28 11 |
| 29 12 | | | | | | |



எமக்கூடாக

மோட்கேஜ்

எடுப்பது

இதுபோல

இலகுவானது...

CENTUM™
Veedu Mortgages Inc

201-1711 McCowan Road, Toronto ON M1S 2Y3



**Das Narayanasamy** AMP
Mortgage Specialist

**Cell: 416-543-6614**
Business: 416-759-1818
Fax: 416-299-0789
E-mail: das.narayanasamy@centumveedu.com
www.centumveedu.com

# Philosophy of Sivayogaswami

- **Dr. K. Ganesalingam**
*Adheenap Pulavar,*
*London Meykandar Adheenam*

Sivayogaswami was a mystic saint who attracted many from home and abroad. Prominent among the western disciples was the American born Subramuniyaswami (1927 2001) who founded the Kauai Aadheenam and the temple complex in Hawaii. His successor and present head of this Adheenam is Bodhinatha Veylanswami.

Came in the Saiva Siddhanta tradition of Jaffna (*Yazhpanam*), Sri Lanka (Ceylon), Yogaswami (1872 1964) was giving solace and spiritual guidance to many. His teachings are given in the Tamil book ***Natchinthanai*** as poetry and prose, mostly in poetic form. A study of this book would show the philosophical views of Yogaswamy.

For those who have not come in the Saiva-Tamil tradition, his philosophical views may appear to be a mixture of Siddhanta and Vedanta. Main area where this is seen is the one relating to God and soul. However, a careful study of the book would reveal that they are actually Siddhanta views.

'Soul is one; it is Brahmam or God', are Vedanta views. Following lines in Natchinthanai reflect these views:

***'Soul as Siva is for those of understanding'* (*Seevan Sivan enal therinaarkkundu*)**
***'It is a joy to seek as we are Siva'* ( *Naam Sivanena naaduthal inpame*)**
***'Are you not the aspect of Siva?'* (*Nee Sivaththin amsam allavaa?*)**

Sivayogaswami also says that you, I and all are Siva. Perhaps because of these words of him Kauai Aadheenam has given its philosophical conclusion, which is Vedantic, as follows:

'***They are eternally perfect and one with God Siva. We are That. We do not become That.***' (Aadheenam's booklet, '*All about Kuai's Hindu Monastery*', Himalayan Acdemy, USA, 2006)

'We are That (Brahmam, God)' or 'I am That' is the Vedanta interpretation of the *Veda mahavakya, 'Aham Brahmasmi'*. Siddhanta interpretation is 'I become That'. Obviously Kauai Aadheenam accepts the Vedanta interpretation and refutes the Siddhanta interpretation. It gives its Vedantic interpretation as Saiva Siddhanta truth, and that also as told by Sivayogaswamikal.

While Kauai Aadheenm reads Vedanta views in the words of Sivayogaswami, most of his teachings indicate that Saiva Siddhanta was his philosophy. Even the lines given above, if interpreted correctly in the background of the Saiva tradition in which he came, would not be understood in the Vedantic way.

According to Saiva Siddhanta, souls are many and eternal like God. They are also separate from God. It also speaks of *Anavam*, which is the source of our ego, the I-ness, ignorance, hatred etc. Existence of anavam is not found in Vedanta or any other Indian philosophy.

Soul is in association with anavam and acts as one with it. This relationship is called *Advaita relationship*. Advaita means 'not two'. Soul should strive to break its advaita relationship with anavam and develop the advaita relationship with God. (Meaning of Advaita relationship in Siddhanta is different from that in Vedanta). St. Thayumanavar asks, "*When could I attain the advaita relationship with God, like the advaita relationship I had with anavam*?"

In the chapter, '*Let us meditate on Siva' ('Sivaththiyaanam Seivom')*, in Natchinthanai, Yogaswami states, "***Remove the anavam of I-ness, we are That***". Removing the anavam is a Siddhanta view. Saying 'We are That', is a Vedanta view. However, identifying with Lord Siva, and considering ourselves as He, is called ***Sivohambavana***, which finds place in Saiva religion.

Sivohambavana is stressed as an essential part of the spiritual exercise in Saiva Siddhanta tradition. It helps one to snap all his worldly attachments, and develop attachment to Lord Siva. This is explained by Yogaswami at many places in Natchinthani. The line, '***It is a joy to seek as we are Siva***', given above, is an example. Few other lines are,

***'Meditate, soul is Siva'***
***'Say I am He and meditate daily; all the mental attachments (aasai) will disappear and Grace of Siva will be showered'.***

Yogaswami also speaks as follows:

***'Oh the mind, Worship as one (with me) the Being that shines as this world, soul and higher Reality'.***
***'Believe in God —— Think that I am not—— God is existing — Whoever thinks of something, he becomes that — Ultimately all will be seen as He'.***

Such teachings of Yogaswamy clearly indicate that he speaks of contemplating as '*I am Siva*', which is Sivohambavana. He also uses the word '*bavanai*' in these teachings. His words, ***'Whoever thinks of something, he becomes that'*** explains the basis of Sivohambanai. These show that he considers the soul as different from Siva, which is a Siddhanta view. This is clearly seen in the following words of his:

***'I have the greatness ('mahimai') to meditate as I am He. In whatever way one meditates, he becomes in that way'.***

Siddhanta views are also given directly by him at many places. Following are some such views relating to God and soul:

***'You are not the mind, not budthi, not chitham. You are Atma. Atma never perishes.— Practice as the soul is in the presence God. — God exists inside and outside.'***
***'Siva, in His inherent form, is inseparable from Sakthy'.***
***'If the thirty six tatvas leave away ——.'.***
***'Transcending the six aatharams —'***
***'Praise to the Satguru who made me as the one who transcended the tatvas (thaththuvaatheethan) by removing the six paths of Aththuva —.'***

These are Saiva Siddhanta views found in Sivagnanabodham and other Siddhanta texts. They are not Vedanta views. Many more such Siddhanta views are seen in his Natchnthanai book.

When Sivayogaswami clearly expresses Saiva Siddhanta views in his Natchinthanai book, it is unfortunate that Kauai Aadheenam chose very few lines in it and reading Vedanta in his words. Correct interpretation of such lines which appears to reflect Vedanta views is as follows:

1. ***"He makes the innumerable souls" ('Alakil uyirkalai aakkuvaan avane')***
In Tamil language the word '**uyirkal**' means 'souls'. However, in usage it also denotes the physical bodies of living beings. In Saiva Siddhanta, creation means the soul obtaining a physical body. This body is made from *maya* and given to the soul by God. (*Maya* in Vedanta is different from that in Siddhanta).

When Yogaswami said "*He makes the innumerable (alakil) souls*", what he meant is that God creates the physical bodies of living beings. He also indicates that souls are many by giving an adjective '*alakil*'. In one of his letters (*Thrumukangkal*), he refers to the souls as '*mannuyir*' meaning 'eternal soul'. It is to be noted that his choice of Tamil words relates mostly to words in Saiva devotional and philosophical texts.

These are not properly understood by Kauai Aadheenam which, knowingly or unknowingly, gives out its view that 'soul is one, and it is God', as Siddhanta concept.

2. **"Soul as Siva is for those of understanding" ('*Seevan Sivanenal therinarkkundu*')**
To think of soul as Siva comes out as a practice of Sivohambavana. One with spiritual understanding would see himself as Siva and everything as Siva.

3. **'It is a joy to seek as we are Siva' ( *Naam Sivanena naaduthal inpame*)**
This again is Sivohambavana.

4. **"Are you not the aspect of Siva?" ('*Nee Sivaththin amsamallavah?*')**
We, the souls, are in the form of *icchai, gnanam* and *kiiyai*, which are our capabilities. For this reason, the soul is also referred to as ***iccha gnna kiriya sorupi***. Sivasakthy is also in this form. Our capabilities are impaired by the associated anavam. If not for anavam we would be like Siva, as an aspect of Him, but **never equal to Him or part of Him**. Eighth aphorism (sutra) of Sivagnanabodham indicates it by saying that the true nature of soul is to be in the company of Lord Siva who is not alien to it.

Given above are few examples of Natchintanai lines which need correct interpretation. Kauai Adheenam has given incorrect interpretation and injected alien views into Saiva Siddhanta, in the name of Yogaswami. It has also incorrectly interpreted Thirumanthiram and other Saiva texts, paving the way for a new brand of Saiva philosophy. This was exposed earlier by Siddhanta scholars. Two books which give the exposition and refutation of the views of this Aadheenam are, *"Souls Are Beginningless"* and *"There Has Always Been Only A Pluralistic Saiva Siddhnta Philosophy"*. These books were written by V.K.Palasuntharam and issued by *Selangor Ceylon Saivites Association* of Malaysia in 1984.

A careful study of Natchinthanai shows that the philosophy of Yogaswami is Saiva Siddhanta. For correct interpretation of Sivayogaswami's words, one should have Siddhanta knowledge and must be familiar with the Saiva Tamil tradition in which this mystic saint came.

# LAW OFFICE

## T. JEGATHEESAN

உங்கள் சட்டப் பிரச்சினைகள் எதுவாயினும்
தமிழிலும், ஆங்கிலத்திலும் ஆலோசனைகளுக்கும் சட்ட
நடவடிக்கைகளுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்

- **REAL ESTATE - Purchase, Sale, Mortgage**
  காணி, நிலம், வீடு வாங்குதல், விற்றல், அடமானம் வைத்தல்
- **FAMILY LAW - Divorce, Seperation**
  குடும்பம் தொடர்பான வழக்குகள் விவாகரத்து, பிரிவு
- **BUSINESS - Purchase, Sale, Incorporation**
  வர்த்தக ஸ்தாபனங்கள் கொள்முதல், விற்பனை
- **IMMIGRATION - Refugee Matters, Sponsorship, Appeal**
  குடிவரவு அகதி விவகாரம், உறவினர் சேர்க்கை, மேன்முறையீடு
- **POWER OF ATTORNEY - Affidavits, Statutory Declarations, Last Will**
  தத்துவப் பத்திரம் சத்தியக்கடுதாசி, உயில்

**இலங்கை, இங்கிலாந்து ஆகிய நாடுகளில் இருபது ஆண்டுகளுக்கு மேலாக அனுபவம் பெற்று கனடாவிலும் சட்ட வல்லுனராகப் பயிற்சி பெற்று பதிவு பெற்ற தமிழ் வழக்கறிஞர்**

## தி. ஜெகதீசன்

Barrister, Solicitor and Notary Public (ONTARIO)

**☎: Off: 416- 266 6154 Res: 416- 449 0358 Fax: 416- 266 4677**
**2620 Eglinton Ave. E., # 201 Scarborough, On., M1K 2S3**

# என்னைக் கவர்ந்த திருமுறைகள்

திருமதி நீலா நகுலேசபிள்ளை



மண்ணில் நல்லவண்ணம் வாழ உலகில் பிறவி எடுத்த ஒவ்வொருவரும் இறையருளில் திளைத்தல் வேண்டும். அந்த அருளே நம் எல்லாத் துன்பங்களையும் விரட்டியடித்து நெஞ்சுக்கு நிம்மதி தரும் அருட் கவசம் ஆகும்.

தூங்குகிறவனுக்கு, எழுந்திருக்கவும் தன் முயற்சியில் ஈடுபடவும் வேளை ஒன்று வருகிறது. அங்ஙனம் பிரபஞ்ச வாழ்வில் உழன்றுகொண்டிருக்கும் எமக்கும் சலிப்புத் தட்டுகிறது. அப்பொழுதுதான் அருள்நாட்டத்தில் உணர்வும் ஊக்கமும் ஓங்குகின்றன. இறைவனின் அருளைப் பெறப் பணம் வேண்டாம். படாடோபம் வேண்டாம். இறைவன் நம்மிடம் வேண்டுவது தூய உள்ளமும், உள்ளம் நிறைந்த பக்தியும்தான். இந்தப் பக்தியை வளர்க்க நாம் என்ன செய்யலாம்? நம்மால் இயன்றளவு நாயன்மார்களாலும் அருளாளர்களாலும் நமக்காக விட்டுச்சென்ற பாடல்களையும் அவர்கள்தம் வரலாறுகளையும் முறையாகப் பாடியும் படித்தும் பொருள் உணர்ந்தும் சுவைதெளிந்தும் அவற்றினை அனுபவிக்க வேண்டும். இந்த வகையில், என்னைக் கவர்ந்த திருமுறைகள் பற்றி நோக்குவோம்.

சைவத் திருமுறைகள் பன்னிரண்டு. இப்பன்னிரண்டு திருமுறைகளும் இருபத்தியேழு அருளாளர்களால் பாடப்பட்டவையாகும். நமது பஞ்சாங்கக் கணக்குப்படி இருபத்தியேழு நட்சத்திரங்கள் உள்ளன. அந்த இருபத்தியேழு நட்சத்திரங்களும் பன்னிரு இராசிகளாக வகுக்கப்பட்டுள்ளன. இருபத்தியேழுக்கும் பன்னிரண்டுக்கும் இடையே உள்ள தொடர்புகள் எங்கெங்கெல்லாம் பரிணமிக்கின்றன என்பதை நாம் கவனிக்க வேண்டும். 27 அருளாளர்களை 27 நட்சத்திரங்களாகவும், பன்னிரண்டு திருமுறைகளை பன்னிரண்டு இராசிகளாகவும் ஒப்பிட்டுப் போற்றுகிறோம். சம்பந்தரின் தேவாரப் பதிகங்கள் தொடக்கம், சேக்கிழாரின் பெரியபுராணம் வரை பாடப்பட்ட பாடல்களின் தொகுப்பே பன்னிரு திருமுறைகளாகும். இப்பன்னிரு திருமுறைகளும் 'ஓம்' என்ற பிரணவத்துள் அடக்கம் என்பதற்கமைய சம்பந்தரின் 'தோடுடைய' என்ற ஓகார ஒலியில் தொடங்கி, 'உலகெலாம்' என்று தொடங்கும் மகர ஒற்றில் (ம்) முடிவடையும் சேக்கிழாரின் பெரியபுராணத்தில் முடிவடைகிறது. எனவே, பிரணவத்தின் விரிவே திருமுறைகள் எனக் கருதப்படுகிறது. இத்திருமுறைகளின் சிறப்பினை "சிவானந்த மாலை" ஆசிரியர்,

"சொற்கோவும் தோணிபுரத் தோன்றலும் நம்சுந்தரனும்
சிற்கோல வாதவூர்த் தேசிகனும் - முற்கோலி
வந்திலரேல் நீறெங்கே மாமறைநூல் தானெங்கே
எந்தைபிரான் ஐந்தெழுத் தெங்கே"

என்று பாடியுள்ளார்.

பன்னிரு திருமுறைகளில் சம்பந்தர், அப்பர், சுந்தரர் பாடிய தேவாரப் பாடல்களை முதல் ஏழு திருமுறைகளிலும், மணிவாசகர் பாடிய திருவாசகத்தையும் திருக் கோவையாரையும் எட்டாந் திருமுறையாகவும்,



திருமாளிகைத் தேவர், சேந்தனார், கருவூர்த் தேவர், நம்பி கடாநம்பி, கண்டராதித்தர், வேணாட்டடிகள், திருவாலியமுதனார், புருடோத்தம நம்பி, சேதிராயர் என்னும் ஒன்பதின்மர் பாடிய திருவிசைப்பா, திருப்பல்லாண்டை ஒன்பதாம் திருமுறையாகவும், திருமூலர் பாடிய திருமந்திரத்தைப் பத்தாம் திருமுறையாகவும் திருவாலவாயுடையார், காரைக்காலம்மையார், ஐயடிகள் காடவர்கோன், சேரமான் பெருமாள் நக்கீரதேவர், கல்லாடதேவர், கபிலதேவர், பரணதேவர், இளம்பெருமானடிகள், அதிராவடிகள், பட்டினத்து அடிகள், நம்பியாண்டார் நம்பி ஆகிய பன்னிருவர் பாடிய நாற்பது பிரபந்தங்களையும் பதினொராந் திருமுறையாகவும் நம்பியாண்டார் நம்பி அவர்களே தொகுத்தளித்தார். இதன் பின்னர் எழுந்த சேக்கிழார் பெருமானால் பாடப்பெற்ற இலக்கியநூல் எனக் கருதும், அடியார் பெருமைகளை விளக்கிக்கூறும் விரிநூலாக அமைந்த 'மாக்கதை' என்றழைக்கப்படும் பெரியபுராணத்தைப் பன்னிரண்டாரம் திருமுறையாகப் பிற்காலத்தவர் இணைத்துக்கொள்ள திருமுறைகள் பன்னிரண்டாயின.

இத்திருமுறைகள் பன்னிரெண்டும் அவற்றின் இயல்பு அதாவது தன்மை கருதி, தோத்திரம், சாத்திரம், பிரபந்தம், புராணம் என நான்கு வகையாக அமைக்கலாம். முதல் ஒன்பது திருமுறைகளான தேவாரங்கள், திருவாசகம், திருக்கோவையார், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு என்பன தோத்திரவகை எனவும், பத்தாவது திருமுறை திருமந்திரம் சாத்திரவகை எனவும், பதினோராவது திருமுறை பிரபந்தவகை எனவும், பன்னிரண்டாவது திருமுறை புராண காப்பிய வகை என்றும் கூறப்படுகிறது.

சிவபெருமானையே முழுமுதற் கடவுளாகக் கொண்டு, சிவனாலேயே அடியெடுத்துக் கொடுத்தும் பாடப்பட்டவையே இத்திருமுறைகள்.

ஒருநாள் சீர்காழியிலே அந்தண குலத்தைச் சேர்ந்த மூன்று வயதுள்ள அழகிய ஆண் குழந்தை ஞானப்பாலை உண்டது. தந்தையின் கோலைக் காணும்போதே இறைவனின் சிந்தனையில் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கியது. அந்தப் பிள்ளைதான் திருஞானசம்பந்தப் பிள்ளை. அந்தப் பிள்ளையின் வாக்குத்தான் அருள்வாக்கு. அந்த வாக்கிலிருந்து

தான் திருமுறையாகிய தேவகங்கை ஊற்றெடுத்தது. சம்பந்தரின் அவதாரத்தை முருகனே சம்பந்தராக அவதாரமெடுத்துவந்தவன் என ஆன்றோர் கொண்டாடுகின்றனர். பிரசித்திபெற்ற சங்கரரே சம்பந்தரின் அவதாரத்தைத் துதிப்பது மட்டுமன்றி, திராவிடக் குழந்தையொன்று தென்மொழியாம் தமிழை சைவத்தினூடே வளர்க்கின்றது என்றும் எடுத்தியம்பியுள்ளார் என அறிகின்றோம். எனவே, சம்பந்த அவதாரமே திருமுறைகளின் அவதாரமும் சைவத்தை நிலைநிறுத்துதலும் ஆகும். சமண, சாக்கிய (சாக்கியர் - புத்தர்) அந்தகாரத்தைக் கிழித்து எழுந்த பன்னிரு சூரியர்களே பன்னிரு திருமுறைகள்.

சம்பந்தரின் பாடல்களைப்பற்றிச் சிந்திப்போமேயானால், அவரது பதிகம் பாடி வழிபடுவோருக்கு என்ன பயன் கிடைக்கும் என்பதை முத்திரைப் பாடலாக பதினொராம் பாடல் விளக்குகிறது. இவ்வாறான முத்திரைப் பாடலை சுந்தரர் பாடியுள்ளமை அவதானிக்கத் தக்கது. அதுமட்டுமன்றி, சம்பந்தரின் பாடல்களில் 8 ஆவது பாடல் "வரை எடுத்த "இலங்கையர் கோன்" பற்றியதாகவும், 9ஆவது பாடல் "அடிமுடி தேடிய கதையும்", பத்தாவது பாடல் "சமண சாக்கியரைச் சாடும்" கருத்தும் கூறப்பட்டுள்ளமையை நாம் உற்று நோக்கலாம்.

இதேபோன்று, நாவுக்கரசர் பாடல்களிலும் 8ம், 9ம், 10ம் பாடல்களில் சடாயு சம்பாதி கதையும், இராவணன் கைலாய மலையைப் பெயர்த்தமையும், சாமகானம் இசைத்த கதையும் கூறப்படுகின்றதை நாம் அவதானிக்கலாம்.

கொடிய சூலைநோயுடன் தமக்கையாரை அடைக்கலம் புகுந்த தம்பியாருக்கு, 'இது இறைவன் அருள்' என மனத்துட்கொண்டு, "திருவாளன் திருநீற்றைத் திலகவதியார் ஐந்தெழுத்தோதி எடுத்துக் கொடுக்க பெருவாழ்வு வந்த"தெனக் கருதி, மருள்நீக்கியார் இரு கைகளாலும் வாங்கி உடல்முழுதும் பூசினார். திலகவதியார் தம்பியாரை அழைத்துச் சென்று திருக்கோயிலை அடைந்து வீரட்டானேசுவரரை வலம்வந்து இறைவன் திருமுன் நிற்க, உள்ளத்தில் பேரன்பு பொங்க, பாடும் உணர்ச்சி மீதூரவே, "கூற்றாயினவாறு விலக்ககிலீர்" என்னும் திருப்பதிகத்தைப் பாடியருளினார். 'நாவுக்கரசு' என்ற திருநாமத்தையும் இறைவனிடமிருந்தே பெற்றுக்கொண்டார்.

மணம்வந்த புத்தூர் எனச் சேக்கிழாரால் சிறப்பிக்கப்பெற்ற புத்தூரில் திருமணப் பந்தரில் "நம்பியாரூரர் நமதடிமை என்பதற்கான ஆவணம் என்னிடமுண்டு" எனக்காட்டினார் கிழ வேதியர். 'பித்தனோ' எனச் சினந்து அவ்வாவணத்தைப் பறித்துக் கிழித்தெறிந்தார் ஆரூரர். 'நான் பித்தனானாலும் சரி, பேயனானாலும் சரி, நீ பணிசெய்ய உடனே வா' என்று அழைத்துச் சென்று திருவெண்ணெய் நல்லூர் கோயிலினுள் சென்று மறைந்து "அர்ச்சனை பாட்டேயாகும். ஆதலின் சொற்றமிழ் பாடுக" என்றும், 'பித்தா' என்றும் அடியெடுத்துக் கொடுக்க "பித்தாபிறை சூடி" என்னும் பதிகத்தைப் பாடினார் சுந்தரர்.

ஒரு சமயம் ஒரு அந்தணர் உருக்கொண்டு வந்து மணிவாசகரிடம் அவர் பாடிய திருவாசகச் செய்யுள்கள் யாவற்றையும் அவர் சொல்லச் சொல்லத் தாம் எழுதினார். மறுநாள் நடராசர் சந்நிதியில் திருவடிக்கீழ் ஒரு பிரதியிருப்பதை அறிந்து அதைப் பார்த்தபொழுது, "மாணிக்கவாசகன் சொல்ல அழகிய திருச்சிற்றம்பலமுடையார் எழுதியது" என்ற அடிக்குறிப்புள்ளதைக் கண்டு யாவரும் வியந்ததாக வரலாறு கூறுகிறது. அதுமட்டுமன்றி, "பாவை பாடிய வாயால் கோவையும் பாடுக" என்று இறைவனாலேயே விரும்பிக் கேட்க, மணிவாசகர் திருக்கோவையாரையும் பாடியதாகவும் அறிகிறோம்.

இங்கே திருமுறை வைப்பில் நால்வர் திருப்பாடல்களும் செம்பாகத்தின் மேலாக இருப்பது நினைவுகூரற்பாலது. இவ்வுலகின்கண், திருக்கோயில்களும் சைவ சமயமும் நிலைத்திருப்பது சமயகுரவர் நால்வர் பெருமக்களாலேதான் எனலாம்.

ஏழிசையாய், இசைப்பயனாய் உள்ள இறைவனை, இசைத்தமிழால் பாடி ஈறில் இன்பத்தை அடைந்த அருளாளர்களின் அனுபவப் பிழிவே திருவிசைப்பாடல்களாகும். நவமணிகளைப் போல் ஒன்பது அருளாளர்களால் அருளப்பட்டவையே திருவிசைப்பாவும் திருப்பல்லாண்டும்.

பாலொடு கலந்த நீர் பாலைக் காய்ச்சியதும் நீராவியாகி வற்றிவிடுவதுபோல் அதாவது தழல்பட்டவுடன் நீர் மறைந்துவிடுவதுபோல் இறைவனது அருட்பார்வை பட்டவுடன் நம் வினைகளும் நீங்கிவிடும் என்கிறார் கருவூர்த்தேவர்.

பண்ணிய தழல்காய் பாலளா நீர்போல்
பாவமுன் பறைந்துபா லனைய
புண்ணியம் பின்சென் றறிவினுக் கறியப்
புகுந்ததோர் யோகினில் பொலிந்து
நுண்ணியை எனினும் நம்பநின் பெருமை
நுன்னிடை ஒடுங்கநீ வந்தென்
கண்ணினுள் மணியிற் கலந்தனை! கங்கை
கொண்டசோ ழேச்சரத் தானே.

(திருவிசைப்பா)

திருவிசைப்பா பாடியோருள் இரண்டாமவராகக் கருதப்படுபவர் சேந்தனார். இவர் 34 திருவிசைப்பாப் பாடல்களைப் பாடியதோடு, தில்லையம்பதியில் மார்கழித் திருவாதிரைத் திருநாளில் ஓடாது நின்ற தேரைப் 'பல்லாண்டு'

பாடி ஓடச் செய்தவர். இவர் 13 திருப்பல்லாண்டுப் பாடல்களையும் பாடியுள்ளார். பஞ்சபுராணம் பாடும்போது திருவிசைப்பாப் பாடல் ஒன்றும், திருப்பல்லாண்டுப் பாடல் ஒன்றுமாக ஒன்பதாந் திருமுறையிலிருந்து இரு பாடல்களைப் பாடும் பெருமை மிக்கது இத்திருமுறை.

`தமிழ் மூவாயிரம்' எனப்படும் ஆகமங்களின் விளக்கமாக, மிகச் சிறந்த சாத்திர நூலாகவும் தோத்திர நூலாகவும் விளங்கும் தமிழ் வேதமாகிய திருமந்திரம் ஓர் அனுபவ நூல். முயற்சியோடு கூடிய பயிற்சியால் பெறும் அனுபவ அறிவால் உணரக்கூடிய நூலாகத் திருமந்திரம் திகழ்கிறது. உலகோர் காலை எழுந்தவுடன் திருமந்திரத்தைப் பொருளுணர்ந்து ஓதிவந்தால், உலக நாயகனாகிய இறைவனை அடைந்து இன்புறுவர். இத்திருமந்திரப் பாயிரத்தில் ஒரு பாடல் -

மூலன் உரைசெய்த மூவாயிரம் தமிழ்
ஞாலம் அறியவே நந்தி அருளது
காலை எழுந்து கருத்தறிந்து ஓதிடின்
ஞாலத் தலைவன் நண்ணுவர் அன்றே'

படிப்பவர்களுக்கு இனிப்பாகவும், இதயத்துக்கு உற்சாகம் ஊட்டுபவையாகவும் எழில்கூட்டும் பாடல்களே திருமந்திரப் பாடல்கள்.

பன்னிரு திருமுறைகளுள் ஒன்பதாந் திருமுறையும் பதினோராம் திருமுறையும் தனித்தன்மை உடையவை. பல அருளாளர்கள் பாடிய பாடல்களின் தொகுப்பாக அமைந்துள்ளமை அதன் சிறப்பாகும். ஆனாலும், பதினொராந் திருமுறையில் இதுவரையும் முதல் பத்துத் திருமுறைகளிலும் அதிகம் பேசப்படாத விநாயகர் வழிபாடு கூறப்பட்டுள்ளதை நாம் கூர்ந்து கவனிக்க வேண்டும். விநாயகரைப் பாடுபொருளாகக் கொண்டு மூன்று நூல்கள் இத்திருமுறையில் இடம்பெற்றுள்ளன. சங்க நூல்களான பத்துப்பாட்டில் தலைமை சான்றது நக்கீரர் பெருமானது திருமுருகாற்றுப்படை. ஆற்றுப்படை இலக்கிய நூல் வகையைச் சேர்ந்தது. இறைவனையும் உலகையும் முன்னிறுத்தியே எப்பணியும் தொடங்குவர் தமிழர் என்பதற்கு ஆதாரமாக, `உலகம் உவப்ப வலனேர் திரிதரு' எனத் தொடங்கும் திருமுருகாற்றுப்படையும், மூவர் முதலிகளுக்கும் முற்பட்டவராகிய `காரைக்காற் பேய்'' எனத் தன்னைத்தானே கூறிபதுமல்லாமல் இறைவனிடமே பேயுருவத்தை விரும்பிக் கேட்டுப் பெற்ற காரைக்காலம்மையாரின் பாடல்களும் இதில் அடங்கும். இவர் பதிக முறையையும், பிரபந்த முறையையும் அறிமுகப்படுத்தியவர். இவரது நான்கு பிரபந்த நூல்கள் உட்பட நாற்பது பிரபந்தங்களே பதினொராந் திருமுறையாகும்.

அறிவானுந் தானே அறிவிப்பான் தானே
அறிவாய் அறிகின்றான் தானே - அறிகின்ற
மெய்ப்பொருளுந் தானே விரிசுடர்பார் ஆகாயம்
அப்பொருளுந் தானே அவன். - அற்புதத் திருவந்தாதி 20. காரைக்காலம்மையார்

எத்தொழிலைச் செய்தாலும் எக்குலத்தைச் சேர்ந்தாலும் எந்நிலையில் இருந்தாலும் சித்தத்தைச் சிவனடியில் வைத்தவரே சிவனடியார்கள். இதனைச் சேக்கிழார் பின்வருமாறு எடுத்தியம்புகிறார்.

நின்றாலும் இருந்தாலும் கிடந்தாலும் நடந்தாலும்
மென்றாலும் துயின்றாலும் விழித்தாலும் இமைத்தாலும்
மன்றாடும் மலர்ப்பாதம் ஒருகாலும் மறவாமை
குன்றாத உணர்வுடையார் தொண்டராங் குணமிக்கார்

- பெரியபுராணம்.

`தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்'' என்று சிவபெருமானே அடியெடுத்துக் கொடுக்க, சுந்தரமூர்த்தி நாயனார் திருத்தொண்டர் தொகையைப் பாடினார். இதனை மூலநூலாகக் கொண்டு திருத்தொண்டர்

திருவந்தாதியை நம்பியாண்டார் நம்பி பாடினார். திருத்தொண்டர் தொகையை முதல் நூலாகவும், திருத்தொண்டர் திருவந்தாதியை வழிநூலாகவும் கொண்டு திருத்தொண்டர் புராணத்தை விரிநூலாக - காப்பியமாக - சேக்கிழார் பெருமான் பாடியுள்ளார். சுந்தரமூர்த்தி நாயனாரை தன்னேரில்லாத் தலைவராகவும், பரவையார், சங்கிலியார் ஆகிய இருவரையும் தலைவியர்களாகவும் கொண்டது இக் காப்பியம். அவர்கள் கைலையில் இருந்து வந்து, பூவுலகிற் பிறந்து, மணந்து, உலகத்தார்க்கு அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு உறுதிப் பொருள்களையும் காட்டி, உணர்த்தி, உய்வித்து மீண்டும் கைலையைச் சேர்ந்தார்கள் என்பதே திருத்தொண்டர் புராணம் என்னும் காப்பியத்தின் உட்பொருளாகும். ஏனைய அடியார்களின் கதைகளையும் இந்நூலில் காணலாம். எல்லாவற்றையும் ஒன்றிணைத்துக் காப்பியமாக அமைத்துள்ள பெருமை சேக்கிழார் பெருமானையே சாரும்.

உலகை முதலாகவும், சிவனை முழுமுதற் தெய்வமாகவும் மக்களுடைய சமுதாய வாழ்வினையும் காலச் சூழ்நிலையினையும் மனதிலிருத்தி, மக்கள் அறவாழ்வு மேற்கொண்டு, செந்நெறியிற் பொருள் ஈட்டி, இன்பம் நுகர்ந்து வீடுபேறடைதல் வேண்டுமென்பதற்காகவே இவ்வருளாளர்களால் இத்திருமுறைகள் பாடப்பட்டுள்ளன. இறைபணி நிற்றலையும் இறைபணி நிற்போர் சிவபெருமானின் சிறந்த அடியார்கள் எனப் போற்றப்படுதலையும் நாம் அடியார்கள் பலரது வாழ்க்கை வரலாற்றிலிருந்து அறிந்துகொண்ட உண்மையாகும். இன்னுமோர் வகையாகக் கருதும்பொழுது, சிவபெருமானின் எண்பெருங்குணங்களும் முறையே எட்டுத் திருமுறைகளாகவும், ஒன்பதாந் திருமுறையாகிய திருவிசைப்பாவும் திருப்பல்லாண்டும் எட்டுக் குணங்களையுமுடைய குணிப்பொருளாம் சிவபெருமானாகவும் கொண்டு, அச் சிவபெருமானின் ஒப்பிலா வழிபாட்டினையும் அவ்வழிபாட்டினுக்குரிய மக்கள் தம் உலகியல் ஒழுகலாற்றினையும் ஒருங்கு குறிக்கும் ஒரு பெரும் தமிழ்மறை எனப் போற்றப்படும் சாத்திர நூலாகிய திருமந்திரம் பத்தாம் திருமுறையாகவும், சிவபெருமானால் பாடப்பெற்ற திருமுகப் பாசுரத்தை முதலாகக் கொண்ட நாற்பது பிரபந்தங்களையும் 11ஆந் திருமுறையாகவும், சிவனடி மறவாச் சிந்தையாளர்களின செம்மை நெறி பிறழா வாழ்க்கை வரலாற்றை அவர்தம் தொண்டுகளை, அடியார்களின் அனுபவங்களை, அடைந்த துன்பங்களை, அதிலிருந்து மீண்ட வரலாறுகளை அவர்கள் அடைந்த பத முத்திகளை, இறைபக்தியின் அவசியத்தை, அதன் மேன்மையை மனிதருக்கு உணர்த்தும் வகையில் அமைந்த ஒவ்வொரு நாயன்மாரது வாழ்க்கை வரலாறுகளைக் காப்பிய இலக்கண வரம்பு கடவாத பெரிய புராணம் என்று கூறப்படும் திருத்தொண்டர் புராணத்தைப் பன்னிரண்டாவது திருமுறையாக வைப்புச் செய்யப்பட்டுள்ளமை மனங்கொள்ளத் தக்கது.

உள்ளங் கனிந்தபோது அக்கனிவைக் கவிதையாக்குவோர் அருளாளர்கள். அக்கவிதைகள், தாம் எவ்விடத்தினின்று மலர்ந்தனவோ அவ்வருட் கனிவோடு கமழ்வன. தம்மைப பயில்வோர்க்கும், சொல்லிய பொருள் உணர்ந்து சொல்வோர்க்கும் அத்தகைய கனிவை வழங்குவன.

> "சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
> செல்வர் சிவபுரத்தில் உள்ளார் சிவனடிக் கீழ்" - மணிவாசகர்

வாழ்வெனும் புயலிற் சிக்கி, வழி தெரியாது மயங்கும் மனித குலத்திற்குக் கிடைத்த திசைகாட்டிகளே திருமுறைகள். காணும் உயிர்க்குலங்கள் அனைத்தினூடும் இறைவனைக் காணத் தூண்டும் உயிர்நெறி. ஆம், இந்த நெறியையே இவ்வருளாளர்களின் கவிதைச் செல்வங்கள் எமக்கு எடுத்துக் காட்டுகின்றன. இக்கவிதைச் செல்வங்களாகிய பன்னிரு திருமுறைகளும் தமிழ் உலகிற்கும், தமிழ்ப் பெருமக்களுக்கும் கிடைத்துள்ள உயிர்க் கருவூலங்கள். சைவத்திற்கு வாய்த்துள்ள இவ்வுயிர்க் கருவூலங்களை அவ்வப்போது தஞ்சம் புகுந்தோமேயானால் யாம் பெறும் பலன்கள் ஏட்டிலும் எழுத்திலும் அடங்கா. அவை, "வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவன் திருவடிகட்கும்" நம்மையாற்றுப்படுத்துவன. ஆதலின் பன்னிரு திருமுறைகளும் எமது உயிர்த்துணை என்று நம்மாற் போற்றி ஒழுகத்தக்கன. ***

# LAW OFFICE

## KUMAR S. SRISKANDA

**Barrister at Law & Notary Public (Canada)**
**Solicitor (England & Wales),**
**Attorney at Law (Sri Lanka & Belize, C.A)**

K.V.S. **ஸ்ரீஸ்கந்தகுமார்**

கனேடிய வழக்கறிஞர்

21 வருடங்களாக வழக்கறிஞராகக் கடமையாற்றி அனுபவம் வாய்ந்தவர்

தமிழில் தொடர்புகொள்ளலாம்.

SPECIALIZING IN -

* Immigration and Sponsorship appeals
* All Immigration and refugee hearings
* Uncontested Divorce
* Real Estate dealings specializing in
* Condominium Law.
* Professional Member of
* Canadian Condominium Institute

* அகதிநிலை, குடிவரவு, குடிவரவு மேன்முறையீடுகள்
* வீடு வாங்கவும் விற்கவும்
* ஸ்ரீ லங்காவில் நடைபெறவேண்டிய விடயங்களுக்கு ஆலோசனை
* நீதிமன்ற போகாமல் விவாகரத்து

3852, Finch Ave.East, Suite # 209 Scarborough, ON M1T 3T9

**Tel: (416) 321 9739**

**Fax: (416) 321 9651**

**sriskanda@rogers.com**

# மானுடப் பிறவி பயனுற வாழ்வாங்கு வாழ்வது எப்படி?

சதா விவேகானந்தா
ஆசிரியர், இந்து சமுத்திரத்தின் முத்துக்கள்

பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு - குறள் 350

அற்றது பற்று எனில், உற்றது வீடே!

இதென்ன அனைவரையுமே பற்றற்ற சந்நியாசியாகப் போகச் சொல்கிறாரா? "இல்லறமல்லது நல்லறம் அன்று" என்பது தவறா? பற்று என்ற சொல் முற்றும் துறந்த முனிவருக்கு மாத்திரமே பொருந்துவதாக அனேகர் தவறாகப் பொருள்கொள்கின்றனர். உண்மை அதுவல்ல. இல்லறத்துக்கே அச்சொல் முக்கியமாகப் பொருந்துகிறது. மனவியல் விஞ்ஞானத்திலே பற்று எந்த அளவுக்கு வாழ்வியலில் முதன்மை வழங்கப்பட்டுள்ளது என்பதைச் சிந்தித்தால், ஞான சாஸ்திரங்களில் மாத்திரமன்றி, விஞ்ஞான நெறியிலும் கூட ஒருங்கே வலியுறுத்தப்படும் பற்றற்ற வாழ்நெறியானது, இன்புறு நல்வாழ்வுற்கு எவ்வளவு இன்றியமையாத கோட்பாடு என்பது துலங்கும்.

பலபொருள் கொண்டசொல் பற்று எனப்படுவது, நல்வாழ்விற்கு ஆதார பண்பான அன்பு நெறிக்கு எதிர் நெறியே பற்று எனும் சுயநலமான, தான்தோன்றி மனப்பான்மை. பற்று என்றால் என்ன? "இறைவா, காக்க வேண்டியது உனது கடமையல்லவா? நான் ஏன் உன்னை வேண்டிக் கேட்கவேண்டும்? ஏன் உன்னிடம் பக்தி செலுத்தவேண்டும்? எனவே, உன் பொறுப்பை, நான் நாடாமல் நீயே செய்" என்று ஒரு பக்தன் வாதிட்டால் கடவுள் திருவருள் கிட்டுமா? கிட்டாது. ஏனெனில், அதுவே பற்று எனும் எதிர்மறைப் பான்மை. "நீ என் மனைவி அல்லவா? கணவனே கண்கண்ட தெய்வம் என்பது சாஸ்திரக் கோட்பாடு. எனவே என் காலில் விழுந்து வணங்கு, அதுவே உனது கடமை" என்று ஒரு கணவன் தன் மனைவியிடம் உரிமையிட்டால் அங்கு வெளித் தோன்றுவது அவனது பற்று எனும் தீய வெறி. மாறாக, அதே கணவன், "நீ என்னை வணங்கவேண்டியது முறையே என்றாலும் அதை நான் விரும்பவில்லை." என்று கூறினால் அதுவே அன்பு மனம். பற்று என்னும் கெடு பண்புக்கு எதிர்மாறான ஆரோக்கிய மனப்பாங்கு. "எனக்கு என்ன வாங்கி வந்தாய்?" என்று ஒருவர் மற்றவரைக் கேட்டால் அங்கு பற்று மனப்பான்மை வெளிப்படுகிறது. மாறாக, "உனக்கு என்ன வேண்டும். கேள்." என்னால் இயன்றதைத் தருகிறேன்" என்ற கூறினால் அங்கு அன்பு மனம் தொனிக்கிறது. பிறர் நமக்கு என்ன செய்யவேண்டும் என்று நாமே மற்றவர்க்கு நியதி வகுப்பதும், நிர்ணயிப்பதுமே பற்று எனப்படுவது. பற்று ஒரு மனவெறியே - நோய் மனமே.

வாழ்வில் அடிப்படை இன்பம் தருவது பற்றற்ற மனப் பக்குவமே. மேலும் பேரின்பம் எனப்படும் துன்பம் கலவாத ஆத்மானந்தம் தருவதும் பற்றற்ற மனப் பக்குவமே. "வீடே". பற்றற்று வாழ்ந்தால் "வீடு" எனப்படும் உயர்நிலை, பேரின்பமான மோட்சமே கூட தானாகவே நாடிவரும் என்பதே இதன் கருத்து. அவ்வாறென்றால், அதைவிட

சாதாரணமான புவி இன்பம் கிடைப்பதுபற்றி சொல்ல வேண்டுமா? எனவேதான், பற்றுக பற்றற்றான் பற்றினை...... என்கிறார் வள்ளுவனார். அதென்ன பற்றற்றான் பற்று? பற்றற்ற மனப்பாங்கால் வாழ்வில் எல்லாவகை இன்பங்களும், ஒவ்வொரு கணத்து மன நிம்மதியும் பெரு சாதனை வெற்றிகளும் நாம் எளிதாக ஈட்ட இயலும். எப்படி?

"பற்றுக பற்றற்றான் பற்றினை பற்றுக பற்று அவ்விடத்து'' என்கிறது திருக்குறள். இங்கு "பற்றற்றான்'' யார்? இறைவனே. எல்லாம் வல்ல இறைவனே கடைப்பிடிக்கும் பற்றற்ற இந்த உயர் நெறியை நாம் கடைப்பிடித்து, அவனையே பின்பற்றி, உறுதிபட அவனே கதியாக பற்றி நின்றால் யாவும் நலமாகும். நமது கடமையை மறந்து பிறர் என்ன செய்யவேண்டும் என்பதை நமது மனப்போக்கிலே நாமாகவே நிர்ணயித்து குறை கூறுவதும், உரிமை வாதிடுவதுமே பற்று எனப்படுவது. அத்தகைய நோய் மனத்தை அகற்றி, அன்பு மனமும் கடமை உள்ளமும் கொள்வதே பற்றற்ற வாழ்வின் முதல்படி.

ஒரு ஓவியன், தனது உழைப்பிற்கும் தரத்திற்கும் ஏற்ற பலன் கிடைக்குமா கிடைக்காதா என்பது போன்ற புறச் சிந்தனைகளைத் தவிர்த்து, எடுத்துக்கொண்ட கடமைப் பணியைத் தவிர வேறெது குறித்தும் மனச் சலனம் அடையாது, ஓவியம் சிறப்புற முடிவுறுவது ஒன்றிலேயே முழுக் கவனமும் செலுத்தி கடமையாற்றுதல் போல, கீதை கூறும் நெறியில் பலனை எதிர்பாராது நாம் கடமையாற்றும் பண்பே பற்றற்ற மனப் பக்குவமாகும்.

அத்தகைய யதார்த்த நிலை என்ன? நம் சக்திக்கு மீறிய நிலைகளில் மட்டுமன்றி, யாவற்றிலுமே நம்மால் ஆவது ஏதும் இல்லை. நான் வெறும் கருவிதான். யாவும் அவன் செயலே. எனினும் என்னைக் காக்கும் கடவுள் நல்லதே அருள்வான் என்ற நம்பிக்கை மனோநிலையில் எப்போதும் கடவுள் நினைவுடனேயே நம் கடமையைச் செய்துவருதலே தக்க வாழ்நெறி. இன்ப வாழ்வுதரும் உன்னத வழி. அதே மனப் பக்குவம் மென்மேலும் வளர்ந்து பூரண திருப்தி எனும் மேன்மை நிலையை அடைகிறது மனம். அந்நிலையே புவியில் இம்மை பேரின்பத்திற்கு முதல் வாயில். குறையொன்றும் இல்லை என்னும் நிறைமனமே. இதுவே பற்றற்ற வாழ்வு மனப் பக்குவத்தின் இரண்டாம் படி.

இவ்வாறான மானிட வாழ்நெறியை மாந்தர்கள் கடைப்பிடிப்பதையே இறைவன் பெரிதும் விரும்புகிறான். காரணம், மாந்தர் பிறவிப் பயன் பெற எளிய வழி - அடிப்படை நெறி அதுவே. மேலும், மறுமை பேரின்பத்துக்கும் ஈசன் திருவருள் பெறவும் முக்கிய தகுதி, பற்றற்ற மனப் பக்குவமே. நாம் அத்தகைய மனப் பக்குவம் கொண்டால், இறைவனே வலிந்து நாம் விரும்பும் அளவுக்கு அதிகமாகவே மென்மேலும் திருவருள் பொழிகிறான் என்பது நாம் நடைமுறையில் காணும் அனுபவ பாடம். பற்றற்ற மனப்பாங்கே குன்றா மன அமைதியோடும் அன்பார் ஒற்றுமையோடும் வளமிகு இம்மை இன்ப வாழ்வு நெறி.

பற்று: அற்றது பற்று எனில் உற்றது வீடே!

ஒரே பின்விளைவு ஆனாலும் மாந்தரது மன எழுச்சி சூழ்நிலைக்கு ஏற்ப வேறுபடுகின்றது. உதாரணமாக, தன் தந்தைமீது பாசமும் மதிப்பும் மிகவும் கொண்ட ஒருவனது தந்தை, நோய்வாய்ப்பட்டு, மாதக் கணக்கில் இழுபறியாகி மரணமடைந்தார்

என்றால் அவரது அன்பு மகனுக்கு ஏற்படும் துக்கம் எவ்வளவு? அதே தந்தை, ஒரு விபத்தில் திடீர் மரணம் அடைந்தால் ஏற்படும் துக்கம் எவ்வளவு? இரண்டிலும் விளைவு துக்கமேயானாலும் முதலாவது வகையான துன்பத்தால் அதை ஏற்கும் மனப் பக்குவம் இயல்பாக ஏற்படுகிறது. மாறாக பின்னைய மரணத்தால் ஏற்படும் துக்கம் பேரிழப்பாய் நீடித்து மனத்தை ஆக்கிரமித்துக்கொள்கிறது. எளிதில் மனதைத் தேற்றிக்கொள்ள முடிவதில்லை.

இருவகைச் சூழ்நிலைகளிலும் இழப்பின் அளவு ஒன்றே எனினும், இழுபறி நிலைகளில் நம்மால் இயன்றவரையில் முயன்றுவிட்டபின் நமது சக்திக்கு அப்பாற்பட்ட நிலையை உணர்கிறோம். விளைவாக, நாம் இறைவனை ''உன்னையல்லால் வேறு கதியில்லை'' என்று நெஞ்சார வேண்டிக்கொண்டே நமது கடமையைச் செய்துவருகிறோம். அதனால் நம் மனப்பாரம் குறைகிறது. ஆகவே நமக்கு ஏற்படும் சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு ஒவ்வொரு செயலின் போக்கையும் வெவ்வேறுபட்ட கோணங்களில் முன்கூட்டியே கற்பனை செய்து பார்த்து, மாறுபட்ட பின்விளைவுகளில் எதுவாயினும் ஏற்றுக்கொள்ளத் தயாராய் வாழ்வதே பற்றற்ற வாழ்வின் மூன்றாம் படி.

எதிர்காலம் குறித்து எப்போதும் நம்பிக்கையோடு வாழவேண்டிய நாம், நமது ஒவ்வொரு எண்ணம், சொல், செயலிலும் நாம் எதிர்பாராத விளைவுகளையும் மாறான திருப்பங்களையும், ஏமாற்றங்களையும் எதிர்கொள்ளத் தக்க தற்காப்பு நடவடிக்கைகளால் பாதுகாத்துக்கொண்டு, எத்தகைய ஏறுமாறான சூழ்நிலையிலும் அமைதியான மனநிலை கொண்டால் அதுவே பற்றற்ற மனப் பக்குவம் ஆகும். அதனால், நமக்கு உரிய சிறு வெற்றிகளும், பெருஞ்சாதனைகளாக மாறுவதைக் காணலாம். தடைகள், சோதனைகளிலிருந்தும் எளிதாகத் தப்பி நன்மைபெறலாம். ஆகவே, அவ்வமயங்களில் இறைவனுக்கு நன்றி செலுத்த வாய்ப்புக்கள் எளிதாகக் கிட்டும் என்பது அனுபவத்தில் கண்ட உண்மை.

---

## அகிலம்!

அன்பே தெய்வம். அன்பே அகிலம். பெரியோர் இடத்தில் அன்பாகவும் மரியாதையாகவும் பணிவுடனும் நடந்துகொள். முடிந்தால் உன்னாலான பணிவிடை செய்ய ஒருபோதும் தயங்காதே. ஏற்றத் தாழ்வு பார்க்காதே. எதுவும் எப்போதும் எனக்குச் சொந்தமில்லை. எதையும் நான் எடுத்துச் செல்ல முடியாது. இது இறைவனின் நியதி. எம் வாழ்வின் உண்மை. மறக்காமல் உன் மனச் சிறையில் இவற்றைச் சிறைப்படுத்திக்கொள். சிறப்புறுவாய் வாழ்வில்!

Sutton

# Jeseetha Mani, B.com

Associate Broker

## Jeyasuresh Jeganathan



**Smart choice for Buying or selling Your Property**

* Commercial
* Residential
* Investment

வீடு வாங்க, விற்க அல்லது அது சம்பந்தமான ஆலோசனைகளை இலவசமாகப் பெறவும், தற்போதைய சந்தை நிலை, மோட்கேஜ் வசதிகளை அறியவும், மோட்கேஜ் வசதிகளை அமைத்துக்கொள்ளவும் முதல்முறை வீடு வாங்குபவர்களுக்கான சலுகைகளை அறிந்துகொள்ளவும் நீங்கள் நாட வேண்டியவர்

ஜெசீதா

**Tel: 416 746 9494**
**(24 Hour Pager)**
**Cell: 416 566 0337**
**Fax: 416 674 1682**

Sutton Group - Commitment Ltd.

**AN INDIPENDENT MEMBER BROKER**
**45, Woodbine Downs Blvd., Toronto, On M9W 6N5**

# புத்தியுடன் பகுத்தறிவும் கலையும் கலந்த பளிங்கு மாளிகை - ஸ்ரீ நாராயண மந்திர்

- சரோ வர்ணன்



'கோவிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்', 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்பன எல்லாம் முன்னோர்கள் கூற்று. மதம் மனித வாழ்வில் எவ்வளவு முக்கியமானது என உணர்த்த ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு கோவிலை அமைதியான சூழலில் கட்டியுள்ளனர். மன அமைதிக்காக, மனித நேயத்திற்காக, அன்பை வளர்ப்பதற்காக மதம் மனிதனுக்கு அவசியமானது. கால மாற்றத்தால், மதத்தில் அரசியலும் சுயநலமும் கலந்து வியாபாரமாகி விட்டது. உழைப்புக்காக இன்று கோவில்களை நிர்மாணிப்பது வேதனைக்குரியது இதன் விளைவாக, இன்று சைவ மக்கள் மனதில் கோவில்களின் சேவைகளிலும் இந்து மதத்திலும் நம்பிக்கை குறைந்து வருவதை யாரும் மறுக்க முடியாது. சைவ சமயம் மிகவும் தொன்மையானது. பெருமை மிக்கதாக இருந்தது. வழி நடத்துபவரின் போக்கில் மக்களுக்கு ஏற்பட்ட நம்பிக்கையின்மையும், அதிகரித்துள்ள மத மாற்ற செயற்பாட்டினாலும் பலர் இந்து மதத்திலிருந்து மதம் மாறியுள்ளனர் என்பதை மறுக்க முடியாது. இந்த வேதனைக்குரிய விடயத்துக்கு ஒத்தடம் கொடுப்பதாகச் ஸ்ரீ சுவாமி நாராயண மந்திர் அமைந்துள்ளது. சைவ சமயத்தின் பெருமையை கனடா மண்ணிலும் எல்லா மதத்தினரும் உணரும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளது. குஜராத்தி மக்களின் ஒற்றுமையினாலும் பலத்தினாலும் உலகிலே 5ஆவது பெரிய கோவிலாக 40 மில்லியன் டொலர் செலவில் புனரமைக்கப்பட்டுள்ளது. இந்தியாவிலிருந்து 100க்கு மேற்பட்ட சிற்பிகளின் குறைந்த ஊதியத்தினாலும் பல தொண்டர்களின் சிரமதானத்தினாலும் இந்தக் கோவிலை 40 மில்லியன் டொலர் செலவில் கட்டக்கூடியதாக இருந்தது. இதற்குத் தேவையான 24,000 தூண்களை எடுத்துவர ஒரு வருடம் சென்றதாகக் கூறப்படுகிறது. எந்தக் கம்பியும பாவிக்கப்படாமலேயே கட்டப்பட்டது மிகவும் வியப்புக்குரியது. ஜுலை 22, 2007இல் இக்கோவிலைத் திறந்துவைத்த பிரதமர் கூறிய வார்த்தைகள் "Located in the country's most ethnically diverse city, the facility stands as a testament to Canada and India's proud traditions of pluralism. On behalf of the Government of Canada it gives me great pleasure to declare the BAPS Swami Narayanan Complex officially open."

இது இந்திய மண்ணுக்கும் இந்து மதத்திற்கும் பெருமை தருவதாகும். இவருடன் Premier Dalton McGuinty, Mayor David Miller ஆகியோர் சமுகமளித்திருந்தனர். எல்லா ஊடகங்களிலும் முக்கிய தலைப்பாகப் பேசப்பட்டது. இதுவரை சைவசமயம் என ஒன்று இருப்பது உலகுக்குத் தெரிந்தாலும் கனடாவில் வாழும் மககளுக்குப் பெருமையை

வெளிப்படுத்தும் சான்று இதுவாகும். அத்துடன், இனிவரும் தலைமுறைக்கும் ஆவணச் சின்னமாகத் திகழப்போகிறது என்பதில் ஐயமில்லை.

இனி, நான் ரசித்த கோவில் அழகை உங்களுடன் பகிர்ந்துகொள்ளப் போகின்றேன்.

நீள்சதுர வடிவில் ஒரு குளம். இதன் இரு பக்கமும் கொக்கு நிற்பதுபோன்ற காட்சி. குளத்து நீரில் பல பக்தர்கள் தங்கள் மனதில் நினைப்பது நிறைவேறவேண்டுமென சில்லறைகளைப் போட்டுச் செல்கின்றனர். கோவில் வாசல் அழகிய ராஜகோபுரமாக, வெண்நிறத்தில் காட்சி அளிக்கிறது. அந்த அழகிய கோபுர வாசலைப் போய் அடைய 25 படிகள் அமைக்கப்பட்டுள்ளது. புனரமைப்பு வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்ததால் அப்பாதை மூடப்பட்டிருந்தது. இடது பக்கத்திலுள்ள கதவின் வழியே பக்தர்கள் உள்ளே செல்ல அனுமதிக்கப் படுகின்றனர். கதவுகள் பழைய காலத்து அரச கோட்டைகளைப் போல உறுதியான மரத்தினால் நுட்பமான அழகிய வேலைப்பாடுகள் கொண்டனவாக இருந்தன. அதன் அழகை வர்ணிக்க வார்த்தைகள் இல்லை. வாசலின் இடது பக்கக் கதவின் வழியாக ஆண்களும் வலது பக்க வழியாகப் பெண்களும் உள்ளே போகவேண்டும். அவர்களின் பாதணிகள் வைக்க அறைகளும் அமைக்கப்பட்டுள்ளன. உள்ளே போனவுடன் வரவேற்பு மண்டபம் எம்மை வரவேற்கின்றது. கடும் பிரவுண், கறுப்பு நிறத்தில் கலந்த தரைக்குள் பதித்த கண்ணாடி போன்ற அழகிய பளிங்குக்கற்கள் கண்களைப் பறிக்கின்றன. சுத்தமும் பளபளப்பும் எல்லா இடமும் கலை வேலைப்பாடுகளும் கண்களை அகலத் திறக்க வைக்கின்றன. வரவேற்பு மண்டபத்தில் மூன்று வண்ணக் கூடைகளுடன் தொண்டர்கள் காத்திருக் கின்றனர். அந்தக் கூடைக்குள்ளே இருக்கும் துண்டுகள் கட்டையாக உடையணிந்து வருபவர் களுக்குக் கொடுப்ப தற்காக. எமது கலாச் சாரத்தில், உடை அணிதலில் மிகக் கட்டுப்பாடுண்டு. அதனை இவர்களும் கடைப்பிடிக்கின்றனர். காலணிகள், தொப்பி, கமரா, வீடியோ என்பன உள்ளே அனுமதிக்கப்பட மாட்டாது என பெரிய எழுத்தில் எழுதிப்போட்டுள்ளனர். இங்கு



சுவாமிப் படங்களும், ஏனைய கோவில் பொருட்களும் விற்பனையாகின்றன. பின் வரவேற்பறைக்கு சிறிய தூரத்தில் எதிர்ப்புறமாக ஒரு சுவாமி அறை உண்டு. அதில் ஒரு விக்கிரகமுண்டு. அங்குதான் பக்தர்கள் அர்ச்சனை செய்கின்றனர்.

வரவேற்பு மண்டபத்தில் இருந்து, கலைக் கோபுரமுள்ள பகுதிக்குச் செல்பவர்கள் வலது பக்கமாகவும், அங்கிருந்து வருபவர்கள் இடது பக்கமாகவும் வரவேண்டும். எங்கு பார்த்தாலும் பளிங்குக் கற்களின் பளபளப்பு. 'பளிங்கினால் ஒரு மாளிகை' என்ற சினிமாப்பாடல் இந்தக்

கோவிலுக்காகத்தான் பாடப்பட்டதோ என எண்ணத் தோன்றும். ஒவ்வொரு அமைப்பும் நேர்த்தியாகவும். அழகாகவும் முழுமையாகவும் கட்டிடக் கலை வல்லுனர்களால் உருவாக்கப்பட்டுள்ளது. முழுமையாக பளிங்குக் கற்களால் செதுக்கப்பட்டுள்ள கோபுரம் அமைக்கப்பட்டுள்ள பகுதியின் உட்பகுதிக்குச் சென்று அண்ணாந்து பார்க்கும்போது கண்களை நம்பமுடியாது. எப்படி இவ்வளவு துல்லியமாக சிற்பங்களைச் செதுக்கியுள்ளனர்! பல தூண்களால் அமைக்கப்பட்ட அந்த அறைக்குள்ளே நான்கு தூண்களால் ஒரு சதுரமும் பின் அதற்குள் 8 தூண்களைக் கொண்ட ஒரு வட்ட அமைப்பும் உள்ளது.

இப்படியான பல பிரிவுகள் ஒவ்வொன்றிலும் வித்தியாசமான சிற்பங்கள். அதில் ஒரு வட்ட அமைப்பின் அழகைப் பார்ப்போம். அந்த வட்டத்தின் மையப் பகுதியில் அழகிய மலர்களும், மையத்துக்குக் கீழேயுள்ள வட்டத்தில் சிறிய சிறிய 41 சிலைகள். அவை இறைவனைத் தியானிக்கும் வடிவிலும், அடுத்து வரும் வட்டத்தில் 40 பெரிய சிலைகள். இவற்றின் கைகளில் வீணை, மேளம் எனப் பல வாத்தியக் கருவிகளும் உண்டு.

கடைசியாக உள்ள வட்டத்தில் மிகவும் சிறிய சிலைகள் 95 உண்டு. இவை யாவும் கோலாட்டக் கம்புகளைக் கைகளுக்கு மேலே உயர்த்தியபடி காட்சி தருவதாக அமைக்கப்பட்டுள்ளன. இந்த மண்டபத்திலுள்ள தூண்களில் மாறுபட்ட கோணங்களில் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இவ்வாறு சிற்பங்களும் மிகச் சிறியதாக இருந்தாலும், முகத்தில் கண், மூக்கு, வாய் என அழகாகவும் நேர்த்தியாகவும் செதுக்கப்பட்டுள்ளன. இதையே உன்னிப்பாகப் பார்க்கும்போது, சிற்பிகளின் கலைத்திறன் விரல்களில் புகுந்து விளையாடிய உளியின் சுழற்சியும் விநோதமானது. சுத்தமும் புனிதமும் அழகும் சேர்ந்து கலைக் கோவிலாகத் திகழ்வதுடன் அமைதியை மக்களிடம் கொண்டு செல்ல வேண்டுமென்பதிலும் தொண்டர்கள் அதிக கவனம் செலுத்துகின்றனர் என்பதற்குச் சான்றாக பல இடங்களில் 'சைலன்ற்' என எழுதப்பட்டிருப்பதுடன், சில தொண்டர்கள் அவ்வாறான மட்டைகளை கழுத்தில் மாட்டிக்கொண்டு சுற்றிவருவதையும் காணக் கூடியதாகவுள்ளது. என்றாலும் வருகையாளர்களில் சிலர் அநாகரிகமாக நடந்துகொள்வதைப் பார்க்கும்போது இவர்கள் எப்போது சூழலுக்கேற்ப தம்மை மாற்றிக்கொள்வார்கள் என எண்ணத் தோன்றியது. இவ்வாறு கதைப்பதிலும், கட்டை உடை அணிந்து வந்தவர்களிலும் இலங்கைத் தமிழரும் உள்ளடக்கப்படுகிறார்கள் என்பதைப் பார்க்கும்போது மனதுக்கு வேதனையாக இருந்தது.

இந்தக் கோவில் கலை, கலாச்சார விழுமியங் களின் சான்றாக மட்டும் திகழாது, பகுத்தறிவுடனும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்பதற்குச் சான்றாக மியூசியம் திகழ்கின்றது. இதில் அழகிய சிற்பங்களோ பழைய ஆவணங்களோ காட்சிக்கு வைக்கப்பட வில்லை. இந்தியாவின் எல்லாத் துறைகளது சரித்திரச் சான்றுகள் தரவுகளுடன் ஆய்வாளர்களின் பெயர்களுடன் எழுதப்பட்டுள்ளது.

மியூசியம் காலை 9 மணி முதல் மாலை 6 மணிவரை திறந்திருக்கும். முதியவர்களுக்கும் சிறுவர்களுக்கும் 3 டொலர்களும் ஏனையோருக்கு 5 டொலர்களும் அறவிடப்படுகின்றது. காலநிலை, கலாச்சாரம் தொடக்கம் இயற்கை வரை அழகிய

படங்களுடன் விளக்கப்பட்டுள்ளது. இதனை விட காப்பியங்கள் குறிப்பாக - இராமாயணம் - மண்ணால் செய்யப்பட்ட சிலைகளால் கதையின் காட்சி சித்தரிக்கப்பட்டுள்ளது.

தார் பாலைவனத்தின் அமைப்பு ஒரு பக்கம் - 49°F இலும் மறுபக்கம் 123.1° வரை வெப்ப நிலை காணப்படுகிறது. உலகில் எந்த நாட்டிலும் இவ்வாறு காலநிலை காணப்படுவதில்லை. உலகிலே அதிக மழைவீழ்ச்சி பெறும் சீராப்புஞ்சி 104.8' இந்தியா விலே காணப்படுகிறது. உலகிலே அதிக உயரமான 121.5 அடி கொண்ட முகிலும் இங்குதான் காணப்படுகிறது. 15,000 வித்தியாசமான இனப் புஸ்பங்கள் உள்ளன. அதில் 5250 மலர்களுக்குப் பெயர் சூட்டப்படவில்லை. அதில் 4900 மலர்கள் species.



Newtonக்கு முதலே புவியீர்ப்புச் சக்தியை 1200 ஆண்டுகளுக்கு முன்பாக Bhaskaracharya என்பவர் கண்டுபிடித்தார். திரிகோண கணித முறையும் 1 செக்கனை 34,000 ஆகப் பிரித்து பின் அதிலிருந்தே வார, மாதம் கண்டு பிடிக்கப்பட்டது. 585ஆம் ஆண்டு குஜராத்திலுள்ள Copperplate என்பவரே zero வைக் கண்டுபிடித்தார். உலகின் முதல் பல்கலைக் கழகம் வடமேற்கு இந்தியாவிலுள்ள தக்ஷிலாவில் 2700 ஆண்டுகளுக்கு முன்பு ஆரம்பிக்கப்பட்டது. இதில் 10500 மாணவர்கள் 16 வயதுக்கு உட்பட்டவர்கள் 68 வித்தியாசமான துறையில் கல்வி பயின்றனர். இந்தியாவில் மட்டுமல்லாது, பபிலோனியா, கிறீஸ், சிரியா, அரேபியா, சீனா ஆகிய இடங்களிலிருந்து வந்தும் கல்வி பயின்றனர்.

வருட ஆரம்பம் முதல் வருட கடைசி வரை கொண்டாட்டங் களைக் கொண்ட நாடு இந்தியா. ஒவ்வொரு பிரதேசமும் பஞ்ச பூதங்களையும், மிருகங்களையும் இணைத்து வர்ணத்துடன் பண்டிகைகளைக் கொண்டாடும் நாடு இந்தியாவாகும். வடக்கில் இருந்து தெற்கு வரை, கிழக்கில் இருந்து மேற்கு வரை தோல் வேறுபாடுகொண்ட மக்கள், பிரதேசத்திற்கு ஏற்ப 18 மொழிகளைப் பேசுகின்றனர்.

உலகத்திலே மிகப் பெரிய நாகரிகம் தோன்றியது இந்தியாவிலாகும். எகிப்து நாகரிகத்துக்கு முதலே சிந்துவழி நாகரிகம் தோன்றியதாக கூறப்படுகிறது. 10,000 வருடங்களுக்கு முன்பே வானத்தை அளந்து சித்திரம் வரைந்ததாக கூறப்படுகிறது. சிந்துவழி நாகரிகம் உருவாகியபோது, 5000 மக்கள் இந்துமதத்தைத தழுவியதாகக் கூறப்படுகிறது. சீனா, எகிப்து, கிரீக், ஐரோப்பிய நாடுகளில் உள்ளவர்கள் இந்திய நாகரிகத்தைத் தழுவினர். (தகவல் J.Miller American பத்திரிகையாளர் Poet.)உலகில் 150 நாடுகளில் 14.64 வீதமான மக்கள் இந்து மதத்தைக் கடைப்பிடிக்கின்றனர்.

இந்தியா 885816796<br>
நேபாளம் - 21919825<br>
பங்களா தேசம் - 14431962

இந்தோனேசியா - 4379727
சிறி லங்கா - 2809068
பாக்கிஸ்தான் - 3280882
மலேசியா – 1509047
மொறிசியஸ் - 615301
ஐக்கிய அமெரிக்கா – 1478670
ஐக்கிய இராச்சியம் - 607763
பூட்டான் - 440645
தென்னாபிரிக்கா – 532129
ரிறின்னிராட் - 244044
பிஜி – 294806
கயானா – 267849
சிங்கப்பூர் - 177028
கென்யா – 338295
கனடா – 400000

சமஸ்கிருதம் மிகவும் பழைமையானது; சொல்லவேண்டியதை அப்படியே கூறும் பக்குவம் அதற்கு உண்டு. கிரீக், லத்தீன் மொழிகளைவிட மிகவும் தூய்மையானது என சேர்.வில்லியம் ஜோன்ஸ் என்ற பிரித்தானிய ஆய்வாளர் கூறியுள்ளார். உதாரணமாக, 70 ஒத்த கருத்துள்ள சொற்கள் சமஸ்கிருதத்தில் உள்ளன. தண்ணீருக்கு மட்டும் 70 வித்தியாசமான சொற்கள் உள்ளன. சமஸ்கிருதம், கணணி புரோகிராம் செய்ய உதவியதாகக் கூறப்படுகிறது. (தகவல்: forbes 1987)

ஆழ்ந்த அறிவுள்ள வேதத்தில் - இருக்கு: 10552, யசுர் 1975, சாமம்: 1875, அதர்வணம்: 5987 மந்திரங்கள் உள்ளன. இவற்றுள் Divine, Hence, Wisdom of the universe, Art. Literature, Economics, Religion, Weaponry, Space, Science, Geometry, Logic, Technology, Hypnotism, Mathematics, Philosophy, Rituals, Magic, Medicine, Architecture, Aeronautics, Spiritual, Wisdom போன்ற விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அமெரிக்க ஆய்வாளர் வில்டுறன்ற் என்பவரின் கருத்துப்படி இந்து மதமும், நாகரீகமும் ஒரு சுருங்கிய கண்டுபிடிப்பல்ல. மிகவும் பரந்த உயர் நிலை வகிக்கும் சமூக விஞ்ஞான முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக, இந்த உண்மையை சித்தரிக்கும்படியாக இமயமலையைத் தாண்டி மேற்கத்தைய மக்களுக்கும் இதன் பெருமை பரவியுள்ளது. என்றாலும், ஒரு உண்மையை இந்து மதத்தினர் ஒத்துக்கொள்ள வேண்டும். அதாவது உலகிலே இரண்டாவது ஜனத்தொகை கூடிய இந்தியா உட்பட 150 நாடுகளில் இந்து சமயம் இருந்தாலும், உலக சனத்தொகையில் 14.64 வீத மக்களே இந்து சமயத்தினர் என்பது வேதனைக்குரியதாகும். எனவே, சமயச் சண்டை, சமய சுரண்டல் நீக்கப்பட்டு இந்துசமயம் நவீனமயமாக்கப்பட வேண்டும். அதற்கு இந்தக் கோவில் ஒரு எடுத்துக்காட்டு. மகாத்மாவை உலகுக்குத் தந்தது குஜராத். இப்போது அந்த மாநில மக்கள் தங்கள் பலம், புத்தியை வெளிப்படுத்த இந்த ஸ்ரீ சுவாமி நாராயண மந்திர் கோவிலைத் தந்துள்ளனர். மேலும், ஏற்கனவே பிரிட்டனிலும், கனடாவிலும் அதனைத் தொடர்ந்து அமெரிக்காவிலும் கோவில் அமைத்து வருவது பாராட்டுக்குரியதே.

பல ஆயிரம் மைல்கள் கடந்து, பணத்தை அள்ளி இறைத்து பல நாட்கள் பிரயாணம் செய்து, கண்ட காட்சி இப்போது கைக்கு எட்டிய தூரத்திலே உள்ளது. மத, மொழி, இன பேதமின்றி, மூன்று தலைமுறையும் வந்து ரசிக்கும் அவ்விடம் ஆன்மீகத்திற்கு மட்டுமல்லாது கலைக்கும் அறிவுக்கும் விருந்தளிக்கிறது. நீங்களும் ஒரு முறை சென்று பார்த்தால்தான் உண்மையை உணர்வீர்கள்!

கனடா இந்து மாமன்றம் படைக்கும்
சர்க்கரைப் பொங்கல் விழா
சிறக்க வாழ்த்துகிறோம்!





# கனகாம்பிகை நகை மாளிகை

# கனகாம்பிகை நகை அடைவு மாடம்

# கனகாம்பிகை துரித பணமாற்றுச் சேவை

## Tel : 416 269 7198



**3160 Eglinton Avenue East**
**Unit 3Scarborogh On,M1J 2H3**
**Markham & Eglinton**

# ஈந்தவரே வாழ்ந்தவர்

சமூகஜோதி திரு.கா. கணேசதாசன்

நாம் அயலூரிற் சென்று ஈட்டிய பொருளை அங்கிருந்து வரும்போது உடன் கொண்டு வராமல் அங்கேயே வைத்துவிட்டுவர விரும்புவோமா? அதுபோல், இவ்வுலகில் தேடிய பொருளை இவ்வுடம்பு இங்கேயே வைத்துவிட்டு போவது அறிவுடைமை ஆகாது அல்லவா? பொருள் உடன் வரவேண்டு மாயின் என்ன செய்ய வேண்டும்? பொருளை வறியவர்க்கு ஈந்து தருமம் புரிந்து அருளாக மாற்றிவிட வேண்டும். அருள் அந்த உலகத் திற்கு வரும். மறு பிறப்பிலும் அருளால் நாம் இன்புறுவோம்.



``எங்காயினும் வரும் ஏற்பவர்க்கிட்டது'' என்கிறார் அருணகிரி நாதர். இங்கு நாம் ஏற்பவர்க்கு இடுவோமானால், மாண்டு எந்த உலகத்திற்குச் சென்றாலும் மீண்டு எந்த தேசத்திற் பிறந்தாலும் அங்கு இந்த புண்ணியத்தின் பயன் வரும்.

வறியவர்களுக்கு வழங்கி, அவர்கள் இன்புறுவதைக் கண்டு நாம் இன்புற வேண்டும். ``ஈந்துவக்கும் இன்பம்'' என்பார் திருவள்ளுவர். அங்ஙனம் ``ஈந்தவரே வாழ்ந்தவர். ஈயாதார் மாய்ந்தவரே`` ஆவார். ``ஈயா மனிதரை ஏன் படைத்தாய் கச்சி ஏகம்பனே!'' எனறு இறைவனையே கேட்கிறார் திருவெண்காடர். இரப்ப வர்க்கு ஈயாமல் கரப்ப வர்களுக்காகவே கடு நரகங்களை இறைவன் உண்டாக்கினானாம்.

``கரப்பவர் தங்கட் கெல்லாம் கடு நரகங்கள் வைத்தார்'' - அப்பர்.

``காசு தேடி ஈயாமல் வாழப்பெறுவோரும் மாறிலாத மாகாலனூர்புக் கலைவாரே`` - அருணகிரிநாதர்.

``ஈயார்க்கு இம்மையில் இகழும் மறுமையில் பாவமும் எய்தும். ஈபவர்க்கருளும் வைத்தார்'' என்றதனால் தருமம் செய்வோர் இம்மையில் புகழும் மறுமையில் புண்ணியமும் எய்துவர்.

வறியவர்களுக்கு இரக்கமுடன் ஈந்தால் அது மீண்டும் ஒன்றுக்கு நூறாக நம்பால் வருகிறது. வாணிபத்திலும் விவசாயத்திலும் பெரும் பலன் வரும். ``விருந்தோம்பு வோனிடம் அகனமர்ந்து செய்யாருறைவன்'' என்று வள்ளுவர் வகுத்து உரைத்தார். வறியார்க்கு ஈந்தால் அது எப்படி வாணிபத்தில், விவசாயத்தில் வரும்? இங்கு தந்தது அங்கு எப்படி வரும்? என்ற ஐயம் ஏற்படலாம்.

பசுவுக்கு அகத்திக்கீரை, பிண்ணாக்கு, பருத்திக் கொட்டை, பசும்புல் இவற்றை வாயிலே தருகின்றோம்.

மடியிலே படிக்கணக்கில் பால் பெறுகின்றோம். தந்தது வாயில்; பெற்றது மடியில். அதுபோல் வறியவர்க்கு பயன் கருதாமல் சிவார்ப்பணமாகச் செய்தது ஒரு கோடியாகப் பெருகிக்கொண்டு வரும் என்றும் உணரலாம்.

ஒரு அவரை விதையை மண்ணில் போடுகின்றோம். ஆயிரக்கணக்கான அவரைக்காயைப் பெறுகின்றோம். தென்னைக்குத் தண்ணீரை விட்டு இளநீரைப் பெறுகின்றோம். இவை கண்கூடு.

காரைக்கால் அம்மையார், வந்த அடியார்க்கு மதுரக் கனியொன்றைத் தந்து, இறைவனிடம் அதிமதுரக் கனி இரண்டு பெற்றார்.

பாண்டவர் வாழும் இந்திரப் பிரஸ்தத்திற்கு ஒரு சமயம் கண்ணபிரான் வந்திருந்தார். அரண்மனையில் உள்ள தாமரைத் தடாகத்தில் பாண்டவர்களும் கண்ணபிரானும் நீராடி நீந்தி விளையாடினார்கள். திரௌபதி, ருக்மணி, சத்தியபாமா, சுபத்திரை முதலியோர் கரையில் நின்று வேடிக்கைபார்த்துக் கொண்டிருந்தனர்.

உச்சி நேரத்தில் எல்லோரும் கரையேறினார்கள். எல்லோரையும் பிறவிக் கடலில் நின்றும் கரையேற்றுகின்ற கண்ணன் மட்டும் கரையேறவில்லை. கழுத்தளவு தண்ணீரிலேயே முழுகியிருந்தார். தருமர் "கண்ணா, உணவு நேரம் வந்துவிட்டது. பெண்கள் காத்துக்கொண்டிருக்கிறார்கள். கரையேறு" என்றார். அவர் கரையேற முயலவில்லை.

பீமன் முதலியோரும் வேண்டினார்கள். அவர் அசைவற்றிருந்தார். காரணம் ஒருவருக்கும் விளங்கவில்லை. திரௌபதியின் நுண்ணிய அறிவில் காரணம் விளங்கியது. பளீர் என்று தன் புடைவையின் முந்தானையில் சாணளவு கிழித்துச் சுருட்டி கண்ணபிரானிடம் வீசி எறிந்தாள்.

கண்ணபிரானுக்கு கௌபீனம் தவறியது. பெண்கள் கரையில் இருந்ததால் அதைச் சொல்லவோ வெளிப்படவோ இயலாமையால் தவிர்த்தார். ஏன்? முன்பு சில பெண்களை தண்ணீரில் ஆடையின்றி அல்லற்பட விடுத்தார். முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும். அதனால் அவர் இப்போது ஆடையின்றி அல்லற்பட்டார். அந்தக் குறிப்பறிந்து திரௌபதி சாண் புடவை கொடுத்து, உதவினாள். அதனை உடுத்து பகவான் கரையேறினார்.

திரௌபதி தொழுதாள்.

"அம்மா, இன்று சாண் புடவை தந்து என் மானம் காப்பாற்றினாய். சமயம் வந்தால் உனக்கு கோடிப் புடைவை தந்து மானம் காப்பாற்றுவேன்" என்று அருள்புரிந்தார். அதன்படியே திரௌபதிக்கு மானசம்ரட்சணம் புரிந்தார்.

ஆகவே, நாம் செய்த தருமம் ஒன்றுக்கு ஆயிரமாகவும், லட்சமாகவும், கோடியாகவும் செய்த பாத்திரத்திற்குத் தக்கபடி நமக்கு வரும்.

அறத்தினால் வருவதே இன்பம். நாம் துன்பமின்றி இன்பமாக வாழவேண்டுமென்றால் மற்றவர்களுக்கு மனம், வாக்கு, காயங்களால் துன்பம் செய்யக்கூடாது. அறமே செய்தல் வேண்டும். இதுதான் உண்மையான பண்பாடாகும்.

# ஒளவையார் அருளிய சைவ உண்மைகள்

திரு.த.பிரதீஸ்வரன்,
இந்துசமய அபிவிருத்தி உதவியாளர்,
யாழ்ப்பாணம்.

தமிழ்மொழியும் சைவ சமயம் இணைந்த நிலையில் வேரூன்றி நிற்பன. அவ்வகையில், தமிழ் மூதாட்டியார் தாம் பாடிய நூல்களில் சைவ சமய உண்மைகளையும் புலப்படுத்தியுள்ளார். விஞ்ஞான அறிவு வளர்ச்சியால் இளம் சமுதாயத்தினர் மத்தியில் தவறான உணர்வுகள் தலைதூக்கி நிற்பதைக் காணலாம். தமிழ்க் கல்வியில் 20ம்நூற்றாண்டில் ஒளவையாரின் நீதிச் செய்யுள்கள் இடம் பெற்றிருந்தன. இன்றுள்ள பாடநூல்களில் அவை ஓரங் கட்டப் பட்டுள்ளன. எனவே, அவற்றில் அமைந்துள்ள சைவ உண்மைகளைப் புலப்படுத்தும் நோக்கில் இக்கட்டுரை அமைகின்றது.

ஒளவையார், சைவ ஒழுக்கமுடையவர் என்பதை நாம் அறிவோம். அவர் சிறந்த விநாயக பக்தி உடையவராய் விநாயக பூசை செய்தவர். அதனால், கைலாயம் சென்றவர். முருகப் பெருமான் ஒளவையார் முன் சிறுவனாகத் தோன்றி, தன்மேல் பாடல்கள் பாடவைத்தார். அவரால் பாடப்பெற்ற நூல்களில் சைவ மரபுப்படி காப்புச் செய்யுள்கள் விநாயகர் மேலேயே அமைந்துள்ளன.

ஆன்மாக்கள் பல பிறப்புக்கள் எடுத்து இறந்தும், பிறந்தும் இளைப்பன. பிறவிதொறும் அவை செய்யும் நல்வினை, தீவினைகளுக்கு இணங்க இறைவனால் விதி அல்லது ஊழ் அமையப்பெறும். அவ்வாற்றால், ஆன்மாக்கள் இன்ப, துன்ப அனுபவங்களைப் பெறுகின்றன. மாணிக்வாசகரின் -

“புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகி .......
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்”

என்னும் வாக்கினால் ஆன்மாக்களுக்குப் பல பிறப்புக்கள் உண்டு என்பதும், அவ்வாற்றால் மறுபிறப்பு உண்டு என்பதும் புலனாகும்.

“புண்ணியமாம் பாவம்போம் போனநாட் செய்தஅவை மண்ணிற் பிறந்தார்க்கு வைத்தபொருள்” என்னும் ஒளவையார் வாக்கு, நல்வினை செய்யத் தக்கது; தீவினை விலக்க வேண்டியது என்பதையும், அவற்றின் பயனே இப்பிறப்பிற்கு நாம் தேடி வைத்த பொருள் என்பதையும் காட்டும்.

“எழுதியவா றேகாண் இரங்கு மடநெஞ்சே
கருதியவா றாமோ கருமம் - கருதிப்போய்க்
கற்பகத்தைச் சேர்ந்தோர்க்குக் காஞ்சிரங்காய் ஈந்ததேன்
முற்பாவத்தில் செய்த வினை”

என்னும் செய்யுளால், முற்பிறப்பிற் செய்த வினைப் பயனாக விதி, ஊழ், தலையெழுத்து அமையும் என்பது புலனாகும்.

“ஆலயம் தொழுவது சாலவும் நன்று” என்னும் ஒளவையார் வாக்கால் ஆலய வழிபாட்டின் சிறப்பு புலனாகும். “ஒருகாலும் திருக்கோயில் சூழாராகில்” என்னும் தேவார அடியும் கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்” என்னும் பழமொழியும் அதே கருத்துடையனவே.

விபூதி சைவசமய சின்னங்களில் ஒன்று. அதனைத் தரிப்பது மிகச் சிறப்பானதும், மேன்மை தருவதும், பிணி தீர்ப்பதாய் அமைவதும் ஆகும். திருநீற்றுப் பதிகம்

அதனை உணர்த்தும். 'நீறில்லா நெற்றி பாழ்'' என ஒளவையார் சுருக்கமாக உரைத்துள்ளார்.

ஸ்ரீ பஞ்சாட்சரம் ஓதுதல் ஆன்மா ஈடேற்றத்துக்கு உரியதாய், வீடுபேறு அளிப்பதாய் அமையும் என்பது சைவ சாஸ்திரங்களின் கருத்து. பட்டினத்தடிகள் 'கையுந் தொழப்பண்ணி நின் ஐந்தெழுத் தோதவும் கற்பியுமே' என்று வேண்டுகின்றார். தேவாரம் பாடிய மூவரும் நமச்சிவாயப் பதிகம் பாடியுள்ளனர். மாணிக்கவாசகர் சிவபுராணத்து ஆரம்பத்தில் ''நமச்சிவாய வாழ்க'' என்று ஆரம்பித்துள்ளார். இக்கருத்துக்களை அடிப்படையாகக் கொண்ட நிலையில்,

சிவாய நமவென்று சிந்தித் திருப்போர்க்கு
அபாயம் ஒருநாளும் இல்லை – உபாயம்
இதுவே மதியாகும் அல்லாத எல்லாம்
விதியே மதியாய் விடும்.

என ஒளவையார் வாக்கு அமைந்துள்ளது,

இட்டமுடன் என்தலையில் இன்னபடி என்றெழுதி
tpjlrpD k;nrjJ tpjlhNdh – முட்டமுட்டப்
பஞ்சமே யானாலும் பாரமவனுக் கன்னாய்
நெஞ்சமே யஞ்சாதே நீ.

இச்செய்யுளில் 'சிவனும் செத்துவிட்டானோ'' என்பதனால், அவன் என்றுமுள்ள நித்தியம் என்பதும், எமது தலையெழுத்தை எழுதியவன் அவனே என்பதும், நாமெல்லாம் அவனுக்குப் பாரமாய் இருக்க எம்மைத் தாங்கி நிற்பவன் அவனே என்பதும் புலனாகின்றன.



திருவையாறு கோவில்

# விபூதியின் மகிமை

ச.சதானந்தசர்மா, ஆதீனகர்த்தா,
சொர்ணாம்பிகா சமேத
பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயம்,
யாழ்ப்பாணம்.

"யதைதாம்ஸி ஸமித்தோக்நிர் பஸ்மஸாத்
குருதேர்ஜுந
ஜ்ஞாநாக்தி: ஸர்வகர்மாணி பஸ்மஸாத்
குருதே ததா"

இந்த ஸ்லோகம் பகவத் கீதையில் கிருஷ்ணன் அர்ஜுனனுக்கு உபதேசித்தது. "விபூதிர் பூதிரைஸ்வர்யம்" என்று அமரகோசத்தில் உள்ளது. விபூதி, பூதி, ஐஸ்வர்யம் என்பது எல்லாம் ஒரே பொருள் உள்ள பதங்கள்.

எந்தப் பொருளையும் தீயிலிட்டால் முதலில் அது கறுப்பாகும். பிறகு இன்னும் தீயிட்டால் அது நீற்றுப்போகும்; சுத்த வெளுப்பாகிவிடும். இப்படி நீற்றுப்போனதே திருநீறு. நீறு என்பதே ஈஸ்வர சொரூபம். நீறு பஸ்மம் எனப்படும். பல வர்ணப் பொருட்கள் பல இருந்தாலும் ஈற்றில் எஞ்சுவது வெண்மை ஒன்றுதான். சுத்தமான வெண்மை ஸ்வரூபம்தான் உண்மை. மற்றையவை எல்லாம் பொய்யான வஸ்துக்கள்.

திருத்தொண்டர் புராணத்தில் சுந்தரமூர்த்தி நாயனார் சிதம்பரத்தில் ஸ்ரீ நடராசப் பெருமானுக்கு அடியேன் என்றும் தில்லையில் வாழ்ந்து ஈசனை அடைந்த திருநீலகண்ட நாயனாருக்கும் அடியேன் என்றும் பாடினார். அந்தணரின் அடியேன் என்றார். திருநீலகண்ட நாயனாரான குயவனுக்கு அடியேன் என்றார். ஈஸ்வர சாந்நித்தியம் அடைந்த பின் வித்தியாசங்கள் இல்லை என்ற நினைவு உண்டாகி, பின்னர் "முழுநீறு பூசிடும் முனிவருக்கும் அடியேன்" என்று பாடினார்.

விபூதியைத் தேகம் முழுவதும் பூசிக்கொள்ள வேண்டும். விபூதியைத் தரித்துக்கொள்வதனால் சகல ஐஸ்வரியங்களையும் அடையலாம். பஸ்மம் இல்லாதபோது துளசிச் செடியின் அடியிலுள்ள மண்ணை இட்டுக்கொள்ளும் வழக்கமும் உண்டு.

மன்னனும் மாசறக் கற்றோரும் பிடி சாம்பலாகிவிடுகிறார்கள். இந்த வாழ்க்கை மாயமானது என்பதை விபூதி உணர்த்துகிறது. பின் வரப்போவதை உணர்த்துகிறது. விபூதி பசுவின் சாணத்தை அக்கினியிலிட்டு பஸ்மமாக்குவதிலிருந்து ஏற்படுகிறது. பசுவின் சாணம் மற்ற எல்லாத் துர்நாற்றங்களையும் போக்க உதவுகிறது.

நமது உடல் பல துர்க்கந்தங்களை உடையது. இந்த உடம்பைச் சுத்தப்படுத்தி, இதனுள் உள்ள ஆத்மாவையும் சுத்தப்படுத்தவல்லது இந்த திருநீறு. ஆகையால், ஒவ்வொருவரும் திருநீற்றை அணியவேண்டும்.

முதலில் கூறப்பட்ட கீதா ஸ்லோகத்தில் "ஏதாம்ஸி" என்று குறிப்பிடப்படுவது விறகுகட்டைகள்' என்று பொருள்படும். இந்தக் கட்டைகள் தீயில் இடப்பட்டால் பஸ்மமாகிவிடும். அதேபோல் ஞானம் என்னும் தீ ஏற்பட்டபின், காரியங்கள் எல்லாம் பஸ்மமாகிவிடும் என்று ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா அர்ஜுனனுக்கு உபதேசித்துள்ளார். "பஸ்மாகிவிடும்" என்றால் அழிந்துவிடும் என்று அர்த்தமல்ல. "பஸ்மமாக நின்றுவிடும்" என்று கொள்ளவேண்டும். விறகு கட்டைகள் தீயில் எரிந்துபோனபின் நிற்பது நீறு. ஞானம் என்னும் தீயில் கர்மாக்கள் யாவும் எரிந்து போனபின் மிகுந்து நிற்பது "மகா பஸ்ம"மான பரமாத்மா.

எனவே, திருநீறு, திருமண் இவற்றைத் தரிப்பது பரமாத்ம சொரூபத்தின் உண்மையையும், உலகிலுள்ள பொருள்களின் நித்தியமில்லாத நிலையையும் நினைவூட்டுகிறது.

# A.V.S.Super Stores

## ஏ . வி. எஸ். சுப்பர் ஸ்ரோர்ஸ்

"கனடா இந்து மாமன்றம் வழங்கும்
சர்க்கரைப் பொங்கல் விழா சிறப்புற
வாழ்த்துகிறோம்."

புத்தம் புதிய மரக்கறிவகைகள், பழங்கள்,
இறைச்சி, கடல் உணவுவகைகள் மற்றும்
தமிழ் டீவிடி, வீசீடி, சீடி.

**3268 Finch Ave. E. Scarborough**

**Tel: 416 496 9160**






உ
சிவமயம்

# சைவசமயத்தின் மகத்துவம்

சிவத்திரு.கா.சிவபாலன், பிரதம லிகிதர்,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

எங்கள் சைவ சமயம் சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடும் சமயமாகும். சிவம் என்ற சொல் மங்கலம், நன்மை என்னும் பொருள்களைத் தருகிறது. இதன் அடிப்படையாகப் பிறந்தது சைவம். சைவம் சிவ சம்பந்தமானது. மேலும் பூரண மங்கலமான செம்பொருள் பரம் பொருளாகும். பரம் பொருளாகிய இறைவன் வகுத்துள்ள வழி சைவ சமயம் ஆகும்.

எங்கள் சமயமாகிய சைவசமயம் சிவஞானபோதத்தை முதல் நூலாகக் கொள்கிறது. இதனை இயற்றியவர் மெய்கண்டதேவர். இதற்கு வழிநூலாக சிவஞானசித்தியார் இடம்பெறுகிறது. மேலும சார்புநூல்களும் பல உள்ளன.

"சைவசமய மேசமயம் சமயாதீதப்
பழம்பொருளைக்
கைவந்திடவே மன்றுள் வெளிகாட்டும்
இந்தக் கருத்தைவிட்டு
பொய்வந்துழலும் சமயநெறி புகுதவேண்டாம்
முக்திதரும்
தெய்வசபையைச் சேர்வதற்குச் சேரவாரும்
செகத்தீரே"

என்கிறார் தாயுமானவ சுவாமிகள். பன்னிரு திருமுறைகளும், மெய்கண்ட சாஸ்திரங்களும், சைவ சமயத்தின் பெருமையைக் காட்டி நிற்கின்றன. பன்னிரு திருமுறைகளில் ஒன்றான திருமந்திரம் பத்தாம் திருமுறையாகப் போற்றப்பெறுகின்றது. திருமந்திரத்தை அருளிச் செய்தவர் திருமூலநாயனார். இவர் மூவாயிரம் ஆண்டுகள் சிவயோகத்திலிருந்து ஒரு ஆண்டுக்கு ஒரு பாடலாக மூவாயிரம் பாடல்களை சைவ உலகத்துக்குத் தந்தவர். இவர் சமயத்தின் பேரால் -

"ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் நன்றே நினைமின்"

என்று சைவ உலகுக்குக் கட்டளையிடுகிறார்.

சைவசமயத் தனி நாயகன் நந்தி
உய்யவகுத்த குருநெறி ஒன்றுண்டு
தெய்வச் சிவநெறி சன்மார்க்கம் சேர்ந்துள்ள
வையத்துள்ளார்க்கு வகுத்து வைத்தானே.

என்று திருமந்திரத்திற் கூறுகின்றார்.

சமயம் என்பது சமைக்கப்பட்டது என்று பொருள் தருகின்றது. நமது நடைமுறைகளையும் ஒழுகலாறு களையும் உயர்வழியில் செல்ல உலகுடன் தொடர்பு ஏற்படுத்தியுள்ளது. நாம் பேரானந்தப் பெருவாழ்வு அடைய வகுக்கப்பட்ட வழிமுறைதான் சைவநெறி யாகிய சைவசமயம். சைவசமயத்தில் ஆறு வகையுண்டு.

சைவசமயத்தை உலகிற்குத் தந்தவர் சிவபெருமானே என்பதற்கு வடமொழி வேத சிவாகமங்களும், தமிழ் மொழியிலுள்ள பன்னிரு திருமுறைகளும், மெய்கண்ட சாஸ்திரங்களும் சான்று பகருகின்றன.

"வேதாந்தத் தெளிவாம் சைவ சித்தாந்தம்" என்பது சித்தாந்த அட்டகம் தந்த உமாபதி சிவாச்சாரியாரின் திருவாக்கு ஆகும். வேதாந்தம் வேறு சித்தாந்தம் வேறு அல்ல; ஒன்றே என்பது தாயுமானவ சுவாமிகளின் கருத்தாகும்.

சைவசமயம் வைதீக சமயம், சித்தாந்த சமயம், சுத்தாத்வைத சமயம், சன்மார்க்க சமயம் என்றெல்லாம் பெயர் பெறுகின்றது சைவசமயம் எவ்வித வேறுபாடுகளுக்கும் இடைப்பட்டது அல்ல. சுத்த சமரச சன்மார்க்க நெறிபடைத்தது சைவ சமயம். பெரியபுராணத்து திருத்தொண்டத் தொகையில், அடியார்களைக் குறிக்கும் பாசுரத்தில் "அப்பாலும் அடிசார்ந்த அடியார்க்கும் அடியேன்" என்று வருவதை அவதானிக்கலாம். மேலும், சிவனடியைச் சார்ந்தவர்களை அப்பாலும் அடிசார்ந்தார் என்று தெய்வச் சேக்கிழாரும் விளக்கி நிற்கிறார்.

சிவபெருமானை அடைவதற்கு திருநீறும், உருத்திராட்சமும் (சிவமணி) திருவைந்தெழுத்தும், சிவாலய வழிபாடும் அடியார்களின் கூட்டுறவும் மிகவும் இன்றியமையாதனவாகும்.

சைவ ஆலயங்களில் நிகழும் நித்திய, நைமித்திய வழிபாடுகளின் உட்கருத்துக்களை அறிந்து வாழவேண்டும். சைவ வழிபாடு, வாழ்க்கைக்கு அன்பு நெறியைப் புகட்டுவதாகும்.

தாயுமானவ சுவாமிகள் சிவபெருமானை நோக்கி, "எவ்வுயிரும் என்னுயிர்போல் எண்ணி இரங்கவும் நின் தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே" என்று வேண்டுதல் செய்கின்றார். நமது உலகில் உள்ள எல்லோரும் இன்பமாக வாழவேண்டுமென்ற நோக்கில், "எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே" என்றும் கூறுகிறார்.

உலகில் உயர்ந்த நோக்குடைய எங்கள் சைவ சமயத்தில் வாழும் பிள்ளைகள் திருமுறைகளையும் நீதி நூல்களையும் நன்றாகப் படிக்க வேண்டும். இதனால் சைவத்தின் பெருமையைப் பேணிக்கொள்ளலாம்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக
உலகமெலாம்".



கோபுர தரிசனம் கோடி புண்ணியம்!

# இறைவியும் வடிவங்களும்

அமிர்தி புவனேந்திரா



உமாதேவியார் சிவபெருமானுடைய அருட்சக்தி என்று கூறப்படுகிறது. உலகத்திலே பிள்ளைகளைப் பெற்று, அன்புடன் வளர்த்தும் காத்து வருபவர் தாயார். இதுபோன்று ஆன்மாக்கள் உய்திபெறும் பொருட்டு படைத்தல், காத்தல் முதலிய ஐந்தொழிலுக்குத் துணையுள்ள சிவசக்தியாகிய உமாதேவியார் சக்தியாகிய இறைவி பராசக்தி, சிற்சக்தி, இச்சாசக்தி, கிரியாசக்தி, ஞானசக்தி எனும் ஐந்து சக்திகளாகவும் நின்று ஐந்தொழில்களை நடாத்து வதுடன் ஐந்தொழில்களும் கிருத்திய முறைக்கு ஏற்ப போகசக்தி, வீரசக்தி, கோர சக்தி, அதிகார சக்தி போன்ற வடிவுடன் நிற்பாள்.

புராணங்களில் சக்தியின் தோற்றமும் சிறப்பியல்புகளும் விரிவாக விளக்கப்பட்டுள்ளன. உயரிய நிலையில் கூறப்படும் சக்தி மகா திரிபுரசுந்தரி பராபட்டாரிகை எனப்படுகிறாள். தக்கனின் புத்திரி எனவே ''தாட்சாயணி'' எனும் பெயர் பெற்றாள். பிரமனின் கட்டளைக்கு அமையத் தக்கன் தன் புதல்வியை சிவனுக்கு மனைவியாகத் தாரை வார்த்துக் கொடுத்தாள். பின்னொருகால் தக்கன் சிவனை மதியானாகத் தான் நிகழ்த்தும் வேள்வியில் சிவனுக்கு அவி கொடுக்க மறுத்தான். தந்தை கணவனை நிந்திக்கும் நிலையினைப் பொறுக்கும் ஆற்றல் அற்றவளாய்த் தாட்சாயணி யோகாக்கினியில் தன்னுடலைத் தகித்தழித்துப் பர்வத அரசன் புதல்வியாக திருவவதாரம் செய்து பார்வதிதேவி எனப் பெயர்பெற்றாள்.

அர்த்த நாரீசுவர வடிவில் இறைவி இறைவனுடைய உடலில் பாதியினைக் கொள் கின்றாள். "உண்ணாமுலை உமையாளொடு முடனாகிய ஒருவன் பெண்ணாகிய பெருமான் மலை" எனும் ஞானசம்பந்தரின் 1ம் திருமுறையிலிருந்து அறியலாம்.

சிவலிங்க வடிவில் தியானித்துப் பூசிக்கப்படும் சாதாசிவ மூர்த்தியின் சக்தி ''மனோன்மணி'' எனப்படுவாள். இச்சக்தி பக்குவ ஆன்மாக் களுடைய மலத்தை நீக்கி அவ்வான்மாக்களைச் சிவத்தோடு சேர்ப்பவள். இவ்வம்மை 4 திருக் கரங்களையுடையவள். ஒரு கையில் தாமரைப் பூவையும் மறு திருக்கையில் செபமாலையையும் தாங்கியுள்ளாள். மற்றிரு திருக் கைகளில் ஒன்றில் அபயமும் மற்றதனால் வரதமும் காட்டுகின்றாள். அபயம் காட்டும் கை வலக்கை. இது தன்னை அன்புடன் வழிபடும் அடியவர் களுக்கு உலகத் துன்பங்களையிட்டுப் பயப்பட வேண்டாம் என் ஆறுதல் அளிக்கும் பாவனையில் ''அஞ்சேல்'' என்று காட்டுவதாக உள்ளது. அடுத்து, வரத முத்திரை பொருந்திய இடக்கை. இது ஞானமாகிய தம் திருவடியைக் காட்டி, "இதைத் தருவோம் பெற்றுக்கொள்" என்ற குறிப்பினைக் காட்டிநிற்கும்.

கரிய நிறம் பெறுவதால் ''காளி'' எனப் பெயர் பெறுகிறாள். பின்னர் பிரமனை நோக்கித் தவம் புரிந்து கரிய நிறம் நீங்கி வெண்ணிறம் அடைந்தாள். இதனால் இவளுக்கு ''கௌரி'' எனப் பெயர் உண்டாயிற்று.

அரக்கர்கள் பலரை அழித்த வைபவத்தினைப் புராணங்கள் விரிவாகக் கூறுகின்றன. மகிஷன், இரத்தபீசன், சும்பம், நிசும்பன் என்பவர்களே இவர் கையால் ஒழிந்தவர்கள். ஆன்மாக்கள் உய்ய இவ்வரக்கர்களை அழித்த வேளை, அவள் கொண்ட கோலம் பெரும் அச்சம் விளைவிக்கும் தோற்றமாகும். பயம் தரும் படைக்கலங்கைளத் தாங்கி நிற்பதாக இவளின் உக்கிர வடிவம் சித்தரிக்கப்படும். இவளது ஊர்தி பார்ப்போரை நடுங்கவைக்கும் சிங்கம். இவள் சிவனின் சக்தி. விஷ்ணுவின் தங்கை. இதனால் பத்மநாப சகோதரி, "நாராயணி" எனப் பெயர்பெற்றாள்.



மண்டையோடுகளால் ஆன மாலையைத் தரித்திருப்பதால் "சாமுண்டேஸ்வரீ" ஆகின்றாள். கழுத்தைச் சுற்றிப் பாம்புகள் வளையம் இட்டிருக்கும். இடது காலின் கீழே இரத்தபீஜன் எனும் அரக்கன் மீது ஊன்றியவாறு அமையும். தலையில் பிறையும் கருமை படர்ந்த முகமுமே இவளது தோற்றமாகும். சாமுண்டியின் விக்கிரகம் நின்ற நிலையிலும், வீற்றிருக்கும் நிலையிலும் உண்டு. இவளுக்கு நான்கு கைகள் உள்ளன. பாசம், உடுக்கை, சூலம், கபாலம் என்பவை இக்கைகளில் விளங்கும் படைக்கலங்கள்.

மாராசுரனை சங்கரித்ததனால் "மகாமாரி" எனும் பெயர் சக்திக்கு உண்டு. இவளுக்கு 3 கண்களும் 4 கரங்களும் உடையவள். கபாலம், கத்தி, பாசம், உடுக்கு எனும் ஆயுதங்களைக் கைகளில் ஏந்தி, தலையில் அக்கினி சுவாலை வீச நிற்கும் தோற்றமே மகாமாரியாகும்.

தவஞ்செய்வதில் இவள் ஈடு இணையற்றவள். இதனால் இவளுக்கு "உமை" எனும் பெயர் உண்டாயிற்று. இமயமலை அரசன் தன் புதல்வியை சிவனுக்கு வதுவை செய்து வைத்த நிகழ்ச்சியே கல்யாணசுந்தர மூர்த்தி கோலமாகும்.

சிவம் சக்தியோடு கூடி, உலகப் படைப்பு முதலியன நிகழும்படி சங்கற்பித்தலே உலகத் தோற்றம் முதலிய நிகழ்ச்சிகளுக்குக் காரணமாகையால் அச்சங்கற்பமே சிவம் சக்தியோடு கூடியிருத்தல் எனவும், அச்சங்கற்பம் இல்லாமையே பிரிதல் எனவும் சைவ நூல்கள் கூறுகின்றன. நெருப்பில் சூடும், மலரில் மணமும், சூரியனில் ஒளியும் போன்று, சிவபெருமானது கருணை வடிவான சக்தியுடன் பிரிவின்றி இருத்தலாகிய வல்லமையே சிவசக்தியாகிய அருட்சக்தி ஆகும். "தென்பால் உகந்தாடும் தில்லைச் சிற்றம்பலவன்" எனும் திருவாசகத்திலிருந்து அறியலாம்.

இத்தகைய சிறப்புக்கள் கொண்ட உமையம்மை, அங்கையற்கண்ணி, ஆதிபராசக்தி, மீனாட்சி, காமாட்சி, இராஜஇராஜேஸ்வரி, புவனேஸ்வரி, நாகேஸ்வரி, காளி, மாரி, துர்க்கா எனும் பெயர்கள் பூண்டு சைவ உலகில் பிரசித்தமான கோயில்களில் இடம் பெறுகின்றாள்.

துன்பங்களைப் போக்கும் வீரம்கொண்ட துர்க்கையாக, செல்வங்களை அள்ளிவழங்கும் மகாலட்சுமியாக, கல்வியையும் கலைகளையும் கொடுப்பவளாகக் கலைவாணியாகவும் வெவ்வேறு நாமங்கள் கொண்டு ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு அருள் பாலிக்கின்றாள் - உலக மாதாவாகிய அன்னை ஆனவள்.



No One Beat Us!
On high, with your thoughts
உங்கள் எண்ணங்களோடு உயரத்தில்
PRO MAR
Awards &Promotions Ltd.
www.promarawards.com
One stop for all your promotional Ideas...
Trophies
Cop.Awards
Plaques, Medals
Laser Engraving
Sand carving
Screen Printing
PRO MAR
Awards & Promotions
416-291 2344
Fax: 416-291 1231
585 Middlefield Rd Unit # 3, Scarborough, ON., M1V 4Y5

# நன்றிக் கலசம்

அனைவருக்கும் பொங்கல் வாழ்த்தும், வணக்கமும் உரித்தாகுக!

"நன்றி மறப்பது நன்றன்று" என்பது வள்ளுவர் வாக்கு.

* 2008ஆம் ஆண்டு "சைவநீதி" புதுமையுடனும், பொலிவுடனும் மலர, தரமான கட்டுரைகள், கவிதைகள் தந்துதவிய பெரியோர்களுக்கும், மாணவர்களுக்கும்;
* வருடாவருடம் புதிய புதிய அட்டைப் படங்களை அழகுற வடிவமைத்துத்தரும் சித்திரத்தில் கைதேர்ந்த எமது நிர்வாக உறுப்பினர் கண்ணன் அவர்களுக்கும்,
* மிகக் குறுகிய காலத்தில் அச்சுக் கோத்துத் தந்த திருமதி கௌரி சதானந்தன் அவர்கட்கும்,
* புத்தக வடிவில் உருப்பெற வைத்த விவேகா அச்சகத்தினருக்கும்,
* சைவநீதி மலரின் செலவினங்களுக்கு உதவிசெய்யும் அனைத்து விளம்பரங்கள் தந்துதவிய உள்ளங்களுக்கும்;
* சைவநீதி மலர பலவகையிலும் ஒத்துழைப்பு நல்கிவரும் இந்துமாமன்ற உறுப்பினர்களுக்கும்,
* தாயகத்திலிருந்து பல சிரமங்களுக்கு மத்தியிலும் கட்டுரைகளை எழுதியும், சேகரித்தும் உரிய நேரத்தில் அனுப்பிவைத்தவர்களுக்கும்;
* சைவ நீதியை வாங்கி வாசித்து மகிழும் வாசகர்களுக்கும், வாசக வட்ட ஆய்வினருக்கும்,
* மற்றும் மன்ற வளர்ச்சி விரும்பும் அனைவருக்கும் -

எங்கள் இதயம் நிறைந்த நன்றி உரித்தாகட்டும்!

"நவில்தொறும் நூல் நயம்போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு"

வணக்கம்.

---

சைவநீதி, இந்து மாமன்றம்.
2008, தை.

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்



சர்க்கரைப் பொங்கல் இனிதே பொங்கட்டும்!

# யசோ சின்னத்துரை

கனடிய சட்டத்தரணி



2100 ELLSMERE ROAD, SUITE 202
(MARKHAM & ELLSMERE)
SCARBOROUGH,ON M1H 3B7

**Tel: 416 265 3456**
**Fax: 416 265 2770**


திசை தொறும் சைவநீதி தேசுற்று வாழ்க ! மேலும்
தீந்தமிழ் உலகமெங்கும் திருப்பொலிவுடனே வாழ்க !!
வாழிய ! வையகம்
Rainbow Village Dental Office
Main Square Dental Office
சகல பல் வைத்திய சேவைகளும் கிளிப்போடுதலும்
இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேல்
பல் வைத்திய சிகிச்சையில்
அனுபவம் பெற்ற உங்கள் நம்பிக்கைகுரிய
டாக்டர். அ. சண்முகவடிவேல்
குடும்ப பல் வைத்தியர்
DR. A. Shan Shanmugavadivel
General Dentistry including
• ORTHODONTICS
• IMPLANT DENTISTRY
• ROOT CANAL THERAPY
• WISDOM TOOTH EXTRACTIONS
• CEREC CROWNS & INLAYS
திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனிக்கிழமைகளில்
Tel: (416) 266-5161
Rainbow Village Dental Office
2466 Eglinton Ave. East, Unit 7
Scarborough, Ontario M1K 5J8
(near Kennedy Subway)
Tel: (416) 690-0121
Main Square Dental Office
2575 Danforth Ave.
Toronto, Ontario M4C 1L5
(near Main Subway)